இலக்கியக் கட்டுரைகள்

பேராசிரியர்

ராவ்ஸாகிப்

மு. இராகவையங்கார்

ஸ்ரீ

இலக்கியக் கட்டுரைகள்

ஆக்கியோர் :
திருவிதாங்கூர்ப் பல்கலை மன்றத்து
முன்னைத்
தமிழ்ப்பேராசிரியர்
இராமநாதபுரம்
ராவ்ஸாகிப்
மு. இராகவையங்கார்

[இரண்டாம் பதிப்பு]

1954

விலை ரூ. 2-8-0

முதற் பதிப்பு —1952
இரண்டாம் பதிப்பு—1954

உரிமை ஆசிரியருக்கே.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

ஸ்ரீ

முன்னுரை

பல ஆண்டுகளாக நான் எழுதிவந்த தமிழாராய்ச்சி நூல்களிலும் கட்டுரைகளிலும், தமிழ்கற்றூரும் கற்கப்புகுவாரும் தம் ஆர்வங்காட்டியதோடு, சென்னைப் பல்கலை மன்றத்துத் தமிழ்க் கழகத்தாரும் என் நூல்களைப் பாடமாக வைத்து உரியபோது ஆதரித்தும் வந்தனர். இவையன்றி, தமிழ் மொழி இலக்கியங்களைப் பற்றி அவ்வப்போது என்னால் எழுதி வெளியிடப் பட்ட வேறு பல கட்டுரைகளும் உண்டு. இவற்றுட் சில திருச்சி வானொலி நிலயமூலம் ஒலிபரப்பப்பெற்றவை; பிரசங்கங்களாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் வெளிவந்தவை பல. துரைத்தனத்தாரும் தமிழாசிரியன்மாரும் தாங்கள் பதிப்பிட்டுவந்த பாட நூல்களிலே, இக்கட்டுரைகளிற் சிலவற்றைச் சேர்த்து என் அனுமதியுடன் வெளியிடலாயினர். ஆனால், ஒரு முகமாகப் படித்தற்கேற்றபடி இவை தொகுக்கப்பெற்றுத் தனிப் புத்தகமாக இதுவரை பதிப்பிடப் பெறவில்லை. அவ்வாறு தனியாக வெளிவருவதனால், பொதுமக்களுக்கும் உயர்தரக் கலாசாலை, கல்லூரி மாணவர்க்கும் பெரிதும் பயன்படும் என்று அன்பர்கள் தூண்டிவந்தது பற்றி, இப்போது இச் சிறுதொகுதி வெளிவந்துளது.

இந்நூலுள் பதினைந்து கட்டுரைகள் மாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளன. இவை தமிழ்வளம் பற்றியும், தமிழ்ப் பெருமக்களின் சிறப்புப்பற்றியும், தமிழ் வழக்க வொழுக்கங்கள் மனப் பண்பாடுகள்பற்றியும் அமைந்தவை. கதாபாகங்களை எடுத்துரைத்தும், நூல் நயங்களை

விளக்கியும், ஆராய்ச்சி முடிபுகளை உரியவிடங்களிற் கூறியும் இலக்கியப் பிரமாண வாயிலாகவே இவை யாவும் எழுதப்பெற்றவையாதலால் "இலக்கியக் கட்டுரைகள்" என்று இத்தொகுதி பெயர் பெறலாயிற்று. புத்தக உருவில் வெளியிடப்படும் இச்சமயத்தில், கட்டுரைகளிலே ஏற்றபெற்றி சிலபல திருத்தங்களும் ஆங்காங்கு அமைந்தது உண்டு. இந்நூலின் வெளியேற்றத்துக்கு உரியவற்றை யெல்லாம் புரிந்துதவிய என் தௌகித்திரன் சிரஞ்சீவி, ஜெ. பார்த்தஸாரதி M. A. - க்கு என் ஆசிகள் உரியனவாகுக.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்.

உள்ளுறை

மொழி

1. ஒரு தமிழ் வாழ்த்துரை ... 1
2. சாஸனத் தமிழ் ... 9

காப்பிய நூல்

3. மதுரைக் காஞ்சி ... 19
4. குண்டலகேசி நீலகேசி வரலாறுகள் 31

பெருமக்கள்

5. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 46
6. சேரன் செங்குட்டுவன் ... 56
7. கருணாகரத் தொண்டைமான் ... 68
8. பழைய புலவரின் பெருந்தகைமைகள் 79
9. பெருங்குன்றூர் கிழார் ... 93
10. வில்லிபுத்தூரர் ... 103

பிற செய்திகள்

11. சிலப்பதிகாரங்கூறும் வழக்க வொழுக்கங்கள் ... 120
12. ஒரு பழைய திருவிழாக் காட்சி ... 131
13. திருமால் குன்றம் ... 138
14. ஒரு கருங்கூத்து ... 148
15. ஆன்மத் தியாகம் ... 155

ஸ்ரீ

இலக்கியக் கட்டுரைகள்

1. ஒரு தமிழ் வாழ்த்துரை

'பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்''

இப்பாடல் வில்லிபாரதத்தின் பாயிரத்தலைப்பில் நின்று விளங்கும் தமிழ்த் தெய்வத்தின் வாழ்த்தாகும். இவ்வரிய செய்யுள், வில்லிபுத்தூரர் மகனார் வரந்தருவாராற் பாடப்பெற்றதென்பது பலரும் அறிந்ததே. செந்தமிழாகிய தெய்வமகள் பிறந்ததுமுதல் பேதைப் பருவம்வரை அடைந்துள்ள நிலைகளை அழகாகக் கூறுவது இப்பாட்டு. பொதியமலையில் வாழும் அகத்தியனாரால் ஆதியில் உருவாக்கப்பட்டமையால் அவராக்கிய தமிழை அவரது பொருப்பிற் பிறந்ததாகக் கவி இங்கே உபசரித்தனர். தமிழை அகத்தியனார் ஆக்கியவர் என்று பலரும் கூறுவதுண்டு. இங்கே 'ஆக்கியவர்' என்பது, நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினார் என்பது போன்றதே யன்றி வேறில்லை.

---

* சென்னைச் சருவகலா சங்கத்து நிகழ்த்திய பிரசங்கங்களின் முன்னுரை.

அதனுல், கடவுளருளால் தன்னடைவே யுண்டான தமிழ்மொழியை அத் தெய்வமுனிவர் சீர்திருத்தியளித் தவர் என்பதே அதன் கருத்தாகும். தானே உருவாதற் குரிய கருவையெல்லாம் தன்னுட்கொண்டதாய் ஈசனுற் படைக்கப்பட்ட தமிழாகிய தெய்வமுட்டையை அடை காத்துப் போற்றி அழகிய உருத்தோன்ற வெளிப் படுத்திய அவ்வளவே, ஆசிரியர் அகத்தியனுர்க்கு உரிய தாகும். இதுபற்றியே, கம்பநாடரும்

"தழற்புரை சுழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்"

என்ருர். இதன் பொருள்—'செந்தீ வண்ணனுன ஈசன் தந்த தமிழைத் தந்தளித்த அகத்திய முனிவர்' என்ப தாம். 'தந்த தமிழ் தந்தான்' எனவே, இரு பிறவிகளுள் ஒன்ருன அண்டசம் போல, அகத்தியனுரால் இரண் டாம் பிறவியெடுத்த தமிழின் பிறப்புநிலை தோற்றும். இதுபற்றியே **ஆகஸ்தியம்** என்ற பெயரால் தமிழ் மொழியை வழங்கலாயினர் ஆன்ருேர்.

இனி, பொருப்பிலே பிறந்த தமிழ்மகள் 'தென்னன் புகழிலே கிடந்தாள்' என்ருர்; என்றது, பாண்டியரது புகழாகிய தொட்டிலிலே தமிழ்மகள் துயின்று வளர்ந்த தன்மையைக் குறித்தபடியாம். நற்ருயாகிய அகத்தியனுர் ஆக்கிய தமிழ்மொழியை அவர் மாணுக்கரான புலவர் பெருமக்கள் பாண்டியர் உதவி பெற்றுச் செவிலிபோல வளர்த்தனர் என்பது கருத்து. இவற்ருல் தலை யிடைச் சங்கங்களில் வளர்ச்சி பெற்ற தமிழ்மொழியின் **ஆதிகாலநிலை** கூறியவாறு யிற்று.

இவ்வாறு பிறந்துங்கிடந்தும் போந்த தமிழ்மகளைச் 'சங்கத் திருப்பிலே இருந்தாள்' என்றார், சங்கப்பலகையில் வீற்றிருந்த புலவர்களால் அது வளர்வுற்றபடியைக் குறிப்பதற்கு. எனவே, தமிழ் வளர்ச்சிக்கு அமைந்த **கடைச்சங்கத்தார் காலநிலை** கூறியவாறாயிற்று.

அவ்வாறு சங்கத்திருப்பிலிருந்த தமிழ்மகவு தவழ்தலும் நிற்றலுமாகிய நிலைகளை அடைதலும் இயல்பன்றோ? அவற்றை வைகை நீரினிடத்தும் நெருப்பினிடத்தும் பெற்றாள் என்றார் **வரந்தருவார்.** சம்பந்த மூர்த்திகளது திருப்பாட்டிதழ்கள் நீரில் எதிர்த்துச் சென்றும், நெருப்பில் அழியாதுநின்றும் அவர் காலத்தேவிளங்கிய சரித்திரம் பிரசித்தமானவை.

"யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்
அறிவீன மன்றோவுன் மதுரைமூதூர்
நீரறியும் நெருப்பறியும்"

(மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி)

என்றார் ஒரு புலவர். இதனால் தெய்வத்தன்மை வாய்ந்த அடியார்கள் திருவாயில் விளங்கித் தானுந் தன் தெய்வத் தன்மை தோற்றுவித்த தமிழின் உயர் நிலை பெறப்படும். எனவே, சங்கத்தாரை யடுத்துத் தமிழ்வளர்த்த பிற் சான்றோரான **அடியார் காலநிலை** கூறப்பட்டவாறாயிற்று.

இனி, 'கற்றோர் நினைவிலே நடந்து' என்றார். கற்றோர் என்பார், கல்வியிற் பெரியராகிய கம்பர், கூத்தர், செயங்கொண்டார், சேக்கிழார்போன்ற கவிச் சக்கரவர்த்திகள் ஆவர். அன்னோரது, அரிய பெரிய கருத்துக்கள் அமைந்த நூல்களாகத் தமிழணங்கு

பரிணமித்தமை தோன்ற அவரது 'நினைவிலே நடந்து' எனப்பட்டது. 'நடந்து' என்றதனால் நடையழகால் தமிழ்மகள் சிறப்புற்றதற்கு இப்பெருங் கவிஞர்களே சிறந்த காரணமானவர்கள் என்பது போதரும்.

"பாவரும் கிழமைத் தொன்மைப்
பருணிதர் பணித்த பத்தி
நாவரும் இளவிச் செவ்வி
நடையன்ன நடையள் நல்லோய்"

என்ற கம்பர் திருவாக்கின்படி* உயர்ந்த உவமைக் குரியதன்றோ அவ்வுத்தம கவிகளின் நடையழகு? இதனால், அப் புலவர்பெருமக்கள் விளங்கித் தமிழ் வளர்த்த சோழர் காலநிலை கூறியவாறாயிற்று.

'ஏனமருப்பிலே பயின்ற பாவை' என்பதற்கு 'ஆதிவராக மூர்த்தியால் அதன் ஞானமாகிய கோட்டில் தாங்கப்பட்ட உலகம்' என்பது பொருளாம். எனவே, நல்லறிஞர்களால் நாட்டிற் போற்றப்படுகின்றாள் தமிழணங்கு என்பது பெறலாகும். ஆதிவராகப் பெருமானை 'ஞானப்பிரான்' என்பர் பெரியார். 'ஞானப்பிரானை யல்லா லில்லை நான்கண்ட நல்லதுவே' என்பது திருவாய்மொழி. 'ஞானத்தின் ஒளியுருவை' என்றார் திருமங்கையாரும்.

இனி, 'பாவை மருங்கிலே வளருகின்றாள்' என்றார். மருங்கு என்பது இடை அல்லது உடலின் நடுவிடமாம். தென்றமிழ்ப் பாவைக்கு இடைபோன்ற திருமுனைப்

---

* சீதாபிராட்டியின் இயற்கை யழகுகளைச் சிறப்பித்து மாருதி இராமபிரானிடந் தெரிவிக்குமிடத்து, அவள் நடையழகு பற்றிக் கூறப்பட்டது, இப்பாடற்பகுதி.

பாடியான நடுநாட்டிற் சிறப்பாகத் தமிழ் வளர்தலை இது குறிப்பித்தபடி. "நான்காஞ் சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங்காமற் தலைகண்டானே" என்று வரந்தருவாரே கூறியவாறு, 'ஆட்கொண்டான்' போன்ற அரசர்கள் தம் காலத்தே தமிழ் வளர்த்து வருஞ் சிறப்பை உட்கொண்டு இவ்வாறு குறிப்பிக்கப் பட்டது.

'பேதை......வளருகின்றாள்' என்று பேதைப் பருவத்தோடு நிறுத்தினார்: பெதும்பை முதலிய நிலைகள் தமிழ்மகட்கு இல்லை என்பது கருத்து. உண்டாயின், மேற்பட்ட பருவங்களும் முடிவுங் கூறுதல் வேண்டும். அதனால், பேதையேயாயினும் மேதையங் குறுமகளாய், என்றும் தன் எழில் நலங் குன்றாமல் விளங்குகின்றாள் தமிழ்ப்பாவை என்பது போதரும். இது பற்றியன்றோ, 'கன்னித் தமிழ்' என்பர் முன்னோர். இங்கே 'வளருகின்றாள்' என்று முடித்தாராயினும், அவ்வளர்ச்சியை நாம் வாழ்த்துவோம் என்பது முடிபாகக் கொள்ளத்தக்கது. 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்பதுபோல், இதுவும் ஒரு வகை வாழ்த்தாம். இவற்றால், தமிழ் வளர்ந்து வந்த பிற்கால நிலையுங் கூறியவாறாயிற்று.

'வளருகின்றாள்' என்ற இவ்வரந்தருவார் கூற்றையே நாமும் வழிமொழிந்து, தமிழ்மகளை என்றும் வாழ்த்துவோமாக. இங்ஙனம் தன் இளமைச் செவ்வி குன்றாமல் தமிழ் வளர்ந்து வருதற்குக் காரணம் யாது? அதன்கணுள்ள இனிமையே யன்றிப் பிறிதன்று. இது பற்றியே, இனிமைப் பொருளில் தமிழ்ச் சொல்லை வழங்கலாயினர் ஆன்றோர். "தமிழ் என்ற பதத்தை

இடைவிடாமற் பல தடவை உச்சரித்துப் பாருங்கள்; அஃது அமிழ்து மயமாய் இனித்தலைக் காணலாம்" என்று நண்பரொருவர் ஒரு சமயம் கூறிய மொழி இங்கு நினைவுக்கு வருகின்றது. இக்கூற்று, விநோதம் போலத் தோற்றினும் உண்மையுடைய தென்பதில் ஐயமில்லை.

இவ்வாறு அமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் வரலாற்றை வரந்தருவார் அழகாகவும் சுருக்கமாகவும் ஒரு செய்யுளிற் கூறியிருத்தல் நாம் அறியத்தக்கது. இத்தகைய தமிழ்ச் சரிதத்தை விரிவாக அறிய வேண்டும் என்பது இப்போதுள்ள நம்மவரது பெரு விருப்பம். தமிழ்மொழியின் வரலாறென்பது அம் மொழியின் பழமை பெருமை சிறப்பியல்புகளும், அது வழங்கும் நாட்டின் அமைதி வழக்க வொழுக்கங்களும், அந்நாட்டு மக்களது வாழ்க்கை வரலாறுகளுமாம். இவை, நூல்களின் பருப்பொருள்களை ஆராய்வதாற் பெறப்படக் கூடியன. இத்தகைய வரலாறுகளைத் தெரிதல் இன்றியமையாதது என்பதை நம் முன்னோர் அறியாதவர்கள் என்றேனும், புறக்கணித்தவர்கள் என்றேனும் கொள்ளுதல் கூடாது. ஒரு நூலுக்கு முகவுரையாகிய பாயிரம் இன்றியமையாதது என்பது பலரும் அறிந்ததே.

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்பது இலக்கணம். பாயிரம் என்பது நூலின் புறவுரையாம். நூல்களுடையவும் நூலாசிரியர்களுடையவுமான வரலாறுகளும் பிற செய்திகளும் அந் நூல்களை யொப்ப என்றும் நிலைநிற்க வேண்டும் என்ற

கருத்துக் கொண்டே ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன், காலம், களன், காரணம் என்ற பதினொரு செய்திகள் கொண்ட சிறப்புப் பாயிரத்தை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருத்தல் வேண்டும் என்று நியமித்தனர் முன்னோர். இப் பருப்பொருள்களை அறிதலால் நுண்பொருளாகிய நூலை மாணுக்கர்கள் எளிதில் அறிய இடமுண்டு. ஒரு நூற்குப்போலவே, அந்நூற் பரப்பையுடைய மொழிக்கும் இத்தகைய பாயிரம் வேண்டத் தக்கதாகும். திருவாய்மொழியை 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்றூர் கம்பநாடர். இங்ஙனம் அதனைத் தமிழ்க்குப் பாயிரமாகச் சிறப்பித்த அக்கவியரசர் கருத்து பாஷைக்கும் பாயிரம் இன்றியமையாதது என்பதேயாம். முன்னோர் விதித்துப் போந்த முறையில் ஒவ்வொரு நூலும் தன் பாயிரத்தைக் குறைவறக் கொண்டிருக்குமாயின், அவற்றின் தொகுதியே மொழி வரலாருகக் கூடியது. அப்பாயிரச் செய்திகளைச் சிறப்பாகக்கொண்டு அறிஞர்கள் ஆராய்ந்தெழுதும் நூல்கள் 'கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு' போலப் பாஷையின் நுண்பொருள்களில் மக்கள் மனம் பற்றுதற்குப் பேருதவி புரியத் தடையில்லை. ஆகவே, இக்காலத்தவரால் 'தமிழ்ச் சரித்திரம்' என்று சொல்லப்படுவது, தமிழ்ப் பாயிர வகையே என்பது விளங்கும். இப்பாயிரம், 'கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின்மாடம்போலவும், தகை மாண்ட நெடுஞ் சுவர்க்கு வகை மாண்ட ஓவியம் போலவும்' பாஷைக்கு அலங்காரமாய் அதன் பெருமையைச் சிறப்பித்துக் காட்ட வல்லது. அதனுல் இக்காலத்தவரது அவாவானது, அத்தகைய தமிழ்ப்

பாயிரத்தை அறிவதில் விசேடமாகச் செல்வது இயற்கையே. நாகரிகம் பெற்றுள்ள நாட்டினரெல்லாம், தங்கள் மொழிவரலாற்றைப் பெரிதும் விரும்பிப் புதிய புதிய செய்திகளைக் கண்டெழுதி அதன் பெருமையை உயர்த்தி வருகின்றனர். அதனால், பழைமை பெருமைகளுடைய தமிழ் மக்கட்கும் அப்பேரவா இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. இத்தகைய தமிழ்ப் பாயிரமான சரித்திர நூல்கள் தக்கவாறு வெளிவருதலைத் தமிழகம் எதிர்பார்த்துள்ளது.

2. சாஸனத் தமிழ்

நம் தமிழ்நாட்டார் ஏதாவது நிலையான காரிய மொன்றைக் குறிப்பிடும்போது, 'இது என்ன சிலா சாஸனமா?', 'சிலாசாஸனமாக அதைச் செய்துவிட்டார்' என்று கூறுவதை நாம் கேட்கிறோம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகியும் இன்று வரைந்தது போலவே காணப்படுவன, இக் கல்லெழுத்துக்கள். இதனால்தான்,

"இளமையிற் கல்வி சிலையி லெழுத்து"

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே"

என்று முன்னோர்களும் கூறலாயினர். இவ்வாறு நிலைத்து நிற்கும் சிலையெழுத்துக்கள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக இப் பரதகண்டத்தில் பலவிடங்களிலே அகப்படுகின்றன. ஆனால் அவை வடநாட்டு மொழிகளிலும் எழுத்துக்களிலும் வரையப்பட்டவை. தமிழ்நாட்டுச் சாஸனங்களாக நமக்கு இப்போது கிடைப்பன வெல்லாம், இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டனவே. இவை ஆயிரக் கணக்கில் அகப்பட்டுள்ளன. கல்லெழுத்துக்களையும் செப்புப் பட்டயங்களையும் புதிது புதிதாகக் கண்டு அறிஞர்கள் இன்னும் வெளியிட்டு வருகின்றனர். பத்தித்திறம் வாய்ந்த உத்தம சீலர்களால் ஆலயங்களுக்கும் தருமங்களுக்கும் நன்மக்களுக்கும் நிலையாகச் செய்த அறச்செயல்களே இச் சாஸனங்களில் மிகுதி

---

* வானொலியிற் பேசியது.

யாகக் காணப்படுஞ் செய்திகள். இவற்றிலிருந்து தெய்வங்களிடமும் பெரியோர்களிடமும் முன்னோர் காட்டி வந்த மதிப்பும் ஈடுபாடும் இத்தகையன என்பது தெரிய வரும். என்றும் நிலைத்து நிற்க வேண்டிச் செய்யப் பட்ட அறங்கள் ஆதலால், அக்கால முறைப்படி அரசர் அதிகாரிகளின் அனுமதிபெற்றுக் கோயில் முதலிய பொதுவிடங்களிலே கல்லில் வெட்டியும் செம்பிற் செதுக்கியும் முன்னோர் இவற்றைப் பகிரங்கப்படுத்தி வைத்தனர்.

தமிழ்மொழியின் வரலாறுகளையும் மரபுகளையும் அறிவதற்கு இலக்கிய வாராய்ச்சி எவ்வளவு இன்றி யமையாததோ, அவ்வளவு சாஸனங்களை ஆராய்வதும் வேண்டத்தக்கதாம். இவ்வாராய்ச்சியால் உழவு, தொழில், வாணிபம், சிற்பம், போர் முதலியவற்றைப் பற்றிப் பண்டுவழங்கிய சொற்பொருள் வழக்குக்களும், மக்களின் நடையுடை பாவனைகளும், பழக்க ஒழுக்கங் களும் எத்தனையோ அறிய இடமுண்டு.

சிலர் நினைக்கிறபடி, **சாஸனத்தமிழ்** என்பது **செந் தமிழ் கொடுந்தமிழ்** போல, ஒரு தனிப்பட்ட தமிழன்று. நம் முன்னோர் தத்தம் காலங்களில் பேசியும் எழுதியும் நித்தமும் பயின்றுவந்த தமிழே அது. உலகவழக்கான மொழி எதுவும் காலந்தோறும் மாறுபாடு அடைந்து வரக்கூடியது இயல்பு. உலக வழக்கும் செய்யுள் வழக்குமான சொற்பொருள்களைக் கொண்ட தமிழிலக் கியங்களும் இவ்விதிக்கு உட்பட்டவைகளே. இவ்வாறு மாறிவந்த வழக்குக்களை

"கடிசொ லில்லைக் காலத்துப் படினே"

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்று பழைய தமிழாசிரியர்களும் தழுவிக்கொண்டார்கள். இம்முறையில் இலக்கியங்களையும் சாஸனங்களையும் நாம் முறைப்பட ஆராயும்போது, தமிழ் வழக்குக்களும் வரலாறுகளும் எத்தனையோ விளக்கமாகின்றன. இவ்வாறு ஒன்றுக்கொன்று உதவியாக நிற்கும் இலக்கிய சாஸனங்கள் பெரும்பாலும் காலத்தால் ஒற்றுமைப்பட்டிருப்பதையும் காணலாம்.

சங்ககாலத்தில் அமைந்த சாஸனங்கள் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், அக்காலத்து நூல்களிற் கண்ட வரலாறுகளும் வழக்குக்களும் பிற்பட்ட சாஸனங்களிலும் பயில்வதால், அவற்றின் உண்மை நிலைகள்பல நமக்குத் தெரியவருகின்றன. உதாரணமாக, 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்ற பாண்டியனொருவன் புறநானூற்றிற் கூறப்படுகிறான். இவனது நீண்ட பெயர்வழக்கே முதலில் நமக்குப் புதுமையாகத் தோற்றியது. எட்டாம் நூற்றாண்டில் அமைந்த வேள்விகுடிச் சாஸனம் வெளிவந்தபின், இவன் பெயரும் வரலாறுசிலவும் விளங்கி, இவனைப் பற்றிக் கூறிய புறநானூற்றுச் செய்திகளின் உண்மை தெளிவாயிற்று. இவ்வாறே கரிகாலன், கோச் செங்கணான், நெடுஞ்செழியன் என்ற சங்ககாலத்து அரசர்களைப்பற்றிய குறிப்புக்களும், ஆய், பாரி, அதியமான், மலையன், ஓய்மான் முதலிய சிற்றரசரின் செய்திகள் சிலவும் சாஸனங்களிலே காணலாம். வேள் ஆயின் வமிசத்தவர் திருவாங்கூர்ச் சீமைப் பகுதியை ஆண்ட

2

வர் என்பதும், யதுவமிசத்தில் கண்ணபிரான் அவதரித்த விருஷ்ணி குலத்தவர் என்பதும் அச்சீமையில் அகப்பட்ட ஒன்பதாம் நூற்றுண்டுச் சாஸனத்தால் அறியப்பட்டன. இது, 'துவாரகையிலிருந்து வந்தவர் வேளிர்' என்று கபிலரும் 'துவராபதிக் கண்ணபிரான் வழியினர் வேளிர்' என்று நச்சினுர்க்கினியரும் கூறிய வரலாறுகளின் உண்மையை நிலைநாட்டுகிறது. பத்துப்பாட்டில் சிறப்பிக்கப்பட்ட நன்னனது நவிர மலை திருவண்ணுமலைப் பக்கத்தது என்பது கல்லெழுத்தால் தெரியலாம். இப்படியே, சங்க நூல்களிற் காணும் சிறப்புப் பெயர்கள்* பலவற்றைச் சாஸன உதவிகொண்டே அறிகின்ருேம். மேலும், அக்காலத்து நாடு ஊர்களில் இடம் விளங்குவன எண்ணற்றவை. அவற்றுள் உதாரணமாகச் சில வருமாறு :

நாடுகள்

மாருேகம்	: முள்ளிநாடான—திருநெல்வேலி ஜில்லா—சேரமாதேவிப் பக்கம்
ஓய்மாநாடு	: திண்டிவனப் பக்கம்
இரணியமுட்டம்	: அழகர் மலைப் பக்கம்
பறம்புநாடு	: பிரான் மலை—திருவாதவூர்ப் பக்கம்.
பன்றுடு	: மைசூர்ப்பகுதி

---

* காப்பியன், மாடலன், பாரதாயன் முதலியவை பார்ப்பனப் புலவர்களின் பழைய குடிப்பெயர்கள் என்பதும், மாசாத்துவான், அம்பர்—அருவந்தை முதலிய பிற குடிப்பெயர்களும் விவரமாகச் சாஸனத்தொடர்கள் மூலமே விளக்கமாகின்றன.

ஊர்கள்

பெருங்கோழியூர் அழும்பில் ஒல்லையூர்	புதுக்கோட்டைச் சீமை
குராப்பள்ளி நல்கூர்	சோணாடு
உரோடகம்	: தொண்டை நாடு

சங்ககாலத்துக்குப் பின், ஏழு எட்டாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ்ச் சாஸனங்கள் தொடர்ச்சியாகவே நமக்குக் கிடைக்கின்றன. தேவாரம் பாடிய மூவர் காலங்களும், ஆழ்வார்கள் சிலருடைய காலங்களும் தெரிவதற்கு இவற்றின் உதவி பெரிதாம். இக்காலத்தும் பின்நூற்றாண்டுகளிலும் அமைந்த சாஸனங்கள் அவ்வக்காலத்து இலக்கிய இலக்கண மரபுகளை அறிவதற்குப் பெருங்கருவிகளாக உள்ளன என்பதில் ஐயமில்லை. உதாரணமாக ஒரு சில காட்டுகிறேன்.

இறையனார் களவியலுரை, கலிங்கத்துப்பரணி, பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களில் காலவழக்கறிந்தும் சாஸனங்களை யொட்டியும் பொருள் கொள்ளவேண்டிய இடங்கள் பல உள. பாண்டியனை 'இடிக்கொடியை உடையவன்' என்றும் 'பூதம் பணிகொண்டவன்' என்றும் களவியலுரை கூறும் செய்திகள் 'இடியுருமினை வலனேந்தி' 'தடம் பூதம் பணிகொண்டு' என்ற சாஸனத்தொடர்களால் வலியுறுத்தப்படுதல் காணலாம்.

அரசர் பகைப்புலத்திலிருந்து கொணர்ந்த மகளிர் வாழும் தனியிடத்துக்கு 'வேளம்' என்ற பெயர் வழக்கு சோழ சாஸனங்களில் பெரிதும் பயிலும்.

இவ்வழக்கை அறியாமையால், கலிங்கத்துப்பரணியில் 'வேழம்' (யானை) என்று இதனை மாற்றி, வலிந்து பொருள் கொண்டனர் பிறர். சோழ சேனாபதிகள் சிலர் 'சோழன சக்கரம்' என்ற சிறப்புப் பெயர் உடையராயிருந்தனர் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம்). இவ் வழக்கறியாமல், சோழ சேனாபதியான கருணாகரனுக்கு வழங்கிய அப்பெயரைத் திருத்தினாரும் உளர்.

பெரிய புராணத்தில், 'திருவிரையாக்கலி' என்ற தொடரொன்றைக் கோட்புலி நாயனார் கூற்றில் வைத்துச் சேக்கிழார் பாடுகின்றார். இதனையே பட்டினத்தடிகளும் "விரையாக்கலி எனும் ஆணையும்" என்று கூறுவர். இது, தீய காரியங்களை விலக்குவதற்குச் சிவபிரான்மேல் ஆணையிட்டுப் பிறர் கூறும் தொடர் என்பது,

"இத்தன்மம் அழிப்பான் திருவிரையாக்கலி"
"இத்தேவரைப் பூசியாதார் திருவிரையாக்கலி"

என்ற சாஸனவடிகளால் தெளிவாகிறது.

"தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை" என்பது பரதனைப்பற்றிக் கம்பர் பாடிய இராமாயணத்தொடர். சாஸன வழக்குப்படி 'செம்மை' என்பது மாற்றுயர்ந்த பொன்னின் வகையாம். இச் சொல்லை நயம்பெற இங்கு அமைத்து ஆளுகின்றார் அக் கவியரசர். மற்றோரிடத்தில் தசரதனை ஈமத்தேற்றிய வரலாறு கூறும் படலத்துக்குப் 'பள்ளியடைப் படலம்' என்ற பெயரை வழங்கிவருகின்றனர். இதை 'பள்ளிபடைப் படலம்' என்று திருத்திக்கொள்ள வேண்டும். இறந்த பெரியோர்களைக் காஷ்டம் அல்லது ஈமத்தில் ஏற்றுதற்குப் பள்ளிபடுத்தல் என்றும்,

அவ்வாறு பள்ளிபடுத்த இடத்தில் அமைத்த கோயிலைப் 'பள்ளிபடை' என்றும் நூல்களும் சாஸனங்களும் வழங்குவது காணலாம்.

நூல்கள் மட்டுமன்றி, உரைகட்கும் சாஸன உணர்ச்சி உபகாரமாகும். திருக்கோவையாரில் 'திருக் கணி' என்ற தொடர்க்குத் 'திருவாகிய கணி(சோதிடன்) திரு-சாதிப்பெயர்' என்று பேராசிரியர் பொருள் எழுதினர். இவர் கருத்தைச் சாஸன வுதவியாலன்றி அறிதல் அரிது. 'திரு' என்பது சோதிடரில் ஒரு வகையினரைக் குறிப்பதாம். 'நிசதமும் கோயிலில் நாளோலை தூக்கும் திருக்கள்' என்பது கல்லெழுத்து. ஆகவே, 'திரு - சாதிப்பெயர்' என்றார் அவ்வுரையாளர்.

இனி, பழைய புலவர்களில் முன்னமே தெரிய வந்தவர்களைப்பற்றிய புதிய வரலாறுகள் பல கல்வெட்டுக்களால் வெளியாகின்றன. இதுவரை தெரியாத புலவர்களையும் அவர்கள் செய்த நூல்கள் பாடல்களையும் பற்றி எத்தனையோ புதிய புதிய செய்திகள் அறியப்படுவனவாம். 'சாஸனத் தமிழ்க்கவி சரிதம்' என்ற நூலில் இவை யாவும் தெளிய என்னால் விளக்கப்பட்டுள்ளன.

நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடல் பெற்றனவும் பெருதனவுமான தலங்களின் வரலாறுகளும் பெருமைகளுமாகக் கல்வெட்டுக்களால் அறியப்படுவன பல. அவைகளால் பாடல்பெற்ற தலங்களில் இதுவரை தெரியாதிருந்தவை சில தெரியவந்தன. புதிய பாடல்பெற்ற தலங்கள் அறியப்பட்டன. தலங்

கள் அமைந்திருந்த இடங்களும் புதியனவாகப் புலனு யின. இவ்விவரங்களை நான் எழுதிய 'ஆராய்ச்சித் தொகுதி' என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

சாஸனங்கள் பெரும்பாலும் வசன நடையில் அமைந்தவைகளே. ஆனல் செய்யுளுருவமாகவும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி மலைக்குகையில், அத்தலத்துச் சிவபிரான்மேல் பாடப் பெற்ற அழகான அந்தாதி நூலொன்று வரையப்பட் டுள்ளது. இது நூற்றுநான்கு பாடல்கள் கொண் டது; ஒன்பது பத்தாம் நூற்றுண்டுகட்கு உரியது. 'திருவிடைவாய்த் தேவாரப் பதிகம்' புதியதாக, இது போலச் சிலையெழுத்து வாயிலாகவே நமக்குக் கிடைக் கலாயிற்று. இவையன்றிக் கோயில்கள் அறங்கள் முதலியவை பற்றியும், அரசர் தலைவர் முதலியோரைப் பற்றியும் தமிழ்ப்பெருமக்கள் பாடிய செய்யுட்கள் உத்தேசம் இரண்டாயிரத்துக்கு மேலாகவே கல்லெழுத் துக்கள் மூலம் கிடைக்கக்கூடியன.

இதுவரை கூறிய இலக்கியங்களை விட்டு, உலக வழக்குக்களை நோக்குவோமாஞல், அரசியல் துறை களுக்கும் கலைத் துறை தொழில்துறைகளுக்கும் அமைந்த சொற்களையும் தொடர்களையும் நாம் வேண்டு மளவு இச் சாஸனங்கள் மூலம் திரட்டலாம். கலைச் சொற்களைத் தொகுக்க விரும்புவோர் கல்வெட்டுக்களை யும் ஆராய்ந்துகொள்வது மிக அவசியம். இனி, நம் நாட்டு ஊர்ப்பெயர்கள் பல இக்காலத்தில் பெரிதும் திரிந்து வழங்குகின்றன. அவற்றின் உண்மை யுருவங் களையும் சாஸனங்களினின்றே நாம் தெளிதல் கூடும். சில உதாரணங்கள் வருமாறு :

செங்கழுநீர்ப்பட்டு	:	செங்கற்பட்டு
பொழில்வாய்ச்சி	:	பொள்ளாச்சி
சோழாந்தகனல்லூர்	:	சோழவந்தான்
இராஜராஜபுரம்	:	தாராபுரம், ராதாபுரம்
காவிதிப்பாக்கம்	:	காவேரிப்பாக்கம்
வலங்கைமீகாமன்	:	வலங்கைமான்
பெருங்கோழியூர்	:	பெருங்களூர்
அழும்பில்	:	அம்புகோயில்
உரோடகம்	:	ஒரகடம்

இவ்வாறே, தமிழுணர்ச்சிக்குச் சாஸனங்கள் உதவும் முறைகள் பல உள. தமிழறிஞர்கள் இவ்வுண்மையை உணர்ந்து, சாஸனவாராய்ச்சியிலும் தங்கள் நோக்கத்தைச் செலுத்துவது இன்றியமையாதது. சிலையெழுத்துக்களில் எழுத்துப்பிழை சொற்பிழைகள் மலிந்திருப்பதாலும் சரித்திரச் செய்திகள் பல தெரியாமையாலும் நம்மவரிற் பெரும்பாலார் அவற்றை மிகுதியாக விரும்புவதில்லை.

பழைய சிலாதாமிர சாஸனங்கட்கெல்லாம் மூல சாஸனங்கள் உண்டு. அவை பழைய அரசாங்கத்தாரால் போற்றப்பட்டு வந்தன. அரச முத்திரையிட்டுக் கல்லிலும் செம்பிலும் பிறர் வெட்டுவதற்கு அரசியலாரது உத்தரவும் மேற்பார்வையும் இருந்தன. அவ்வாறு வெட்டுவிக்கும்போது, கற்றச்சர்கள் படித்தவராயிருந்தால் எழுத்துச்சொற் பிழைகள் குறைந்தும், படியாதவராளுல் கூடியும் காணப்படும். அரசர் அதிகாரிகளின் மேற்பார்வையில் வரையப்பட்ட பழைய சோழசாஸனங்களையும் பாடற் சாஸனங்களையும் நேக்குவோமாயின் இவ்வுண்மை நன்கு விளங்கும். இலக்கிய இலக்கண நூல்களில் ஏடெழுதுவோரால்

நேரும் பிழைகள் போன்றனவே, கல்வெட்டுகளிற் காணும் இத்தவறுகளும்.

இதுவரை கூறியவற்ருல், சிலாதாமிர சாஸனங்களையும் தமிழ் நூல்களோடு ஒப்பமதித்து அறிஞர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பது தெரியலாம். தமிழ்நூற் பொருளுணர்ச்சிக்குச் சாஸனங்கள் அவசியமாவது போல, சாஸனப் பொருளுணர்ச்சிக்கு இலக்கிய இலக்கண அறிவு மிகவும் இன்றியமையாதது. ஆதலால் சாஸனத் துறையாளர், தமிழ்த்துறையிலும் ஆழ்ந்த அறிவும் அநுபவமும் பெற்றிருத்தல் வேண்டத் தக்கதாகும். ஆகவே, தமிழறிஞரும் சாஸனவறிஞரும் ஒன்றுகூடித் தமிழ்க்கலையை வளர்ப்பார்களாக.

3. மதுரைக்காஞ்சி *

பழமையான சங்கப் பாடல்களிலே **மதுரைக்காஞ்சி** என்பது ஒன்று. இது பல சிறப்புக்கள் உடையது. முதலாவது, சங்கத் தனிச்செய்யுட்களுக்குள் இதுவே அடியளவில் மிகப் பெரியதாம். சொல்வளங்களால் இஃது எதற்கும் குறைந்ததில்லை. 'சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும் நல்விருந் தீந்தாது நாறும்' ஒரு மல்லிகை மாலையாக இப் பாட்டைப் புகழ்ந்தனர் முன்னோர். இதனால் 'கூடற் றமிழ்' என்றும் இம் **மதுரைக்காஞ்சி** பெயர்பெற லாயிற்று.

இரண்டாவது சிறப்பாகப் பாட்டுடைத்தலைவனைச் சொல்லத்தகும். இவன் **நெடுஞ்செழியன்** என்ற பாண்டியன். தமிழரசர்கள் எல்லோரும் கூடி விளைத்த தலையாலங்கானத்துப்போரை மிக்க இளமையிலே வென்ற பெருவீரன் ; தமிழறிவும் தமிழ்ப் புலவரிடம் அபிமானமும் மிக்கவன் ; நக்கீரனாரால் 'நெடுநல்வாடை' என்ற அரிய பாட்டாலும் புகழப்பட்டோன். இவனைப்போல விளங்கிய வீரவேந்தர் அக்காலத்தில் மிகச் சிலரே எனலாம்.

மூன்றுவது பாடியவரால் பெற்ற சிறப்பு. இப் பாட்டியற்றியவர் **மாங்குடி மருதனார்** என்பார் ; நல்லிசைப் புலமையாலும் அறிவொழுக்கங்களாலும் தம் காலத்தில் இணையற்று விளங்கியவர். **நெடுஞ்செழியன்,** ஒருகால் வீரவஞ்சினம் ஒன்று கூற நேர்ந்தபோது

---

* வானொலியிற் பேசியது.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

என்று, அவனே இவரை எல்லாரினும் மிக உயர்த்திக் கூறியிருப்பது அறியத்தகும்.

நாலாவது சிறப்பாக, இப்பாடல் எடுத்துக் கூறும் பொருளின் பெருமையாகும். அஃதாவது—வீடுபேறு நிமித்தமாக அரசனுக்குப் பலவகை நிலையாமைகளை உபதேசிப்பதாம். காஞ்சி என்பது உலகம் நிலையற்ற தென்பதைக் கூறும் ஒரு தமிழ்த்திணை. இத்திணைப் பொருளை மதுரையோடு இணைத்து நெடுஞ்செழியனுக்குப் புலவர் கூறியதால் **மதுரைக்காஞ்சி** எனப்பட்டது. வீடுபேற்றுக்குரிய சீரிய சாதனங்களைத் தேடிக்கொள்ளும்படி பேரரசனும் பெருவீரனுமான ஒருவனுக்கு இந் நீண்ட பாடலைப் புலவர் பாடினர்; எனவே, அவனது வாழ்க்கை முறையில் இருந்த பெருத்த குறைகளை அவர் கருதியிருத்தல் வேண்டும். அக்குறைகளாவன: நெடுஞ்செழியன் அயல்நாடுகளில் நாளும் விளைத்துவரும் போர்ச்செயல்களும், அச்செய்கைகளின் பயனாகப் பகைப்புலங்கள் படும் பெருந்துன்பங்களும், நாடுபிடித்த வெற்றிவெறியிலும் சிற்றின்பம் மதுபானமுதலிய மற்றக் களிப்புக்களிலும் அவன் மூழ்கி உத்தம தத்துவங்களை உணரச் சிறிதும் முயலாதிருந்ததும் ஆகிய இவைகளே எனலாம். ஆனால், இவற்றை இகழ்வாகக்கொண்டு அரசனுக்கு முன்னின்று அச்சமின்றி எடுத்துரைப்பார் யாவர்? இக்குறைகளிற் பல, புகழ்ச்சிக்குரிய துறைகளாகப் புலவர்களாற் பாடப்

பட்டுவந்த காலமன்றோ அது; எனினும், அரசனது இத்தகைய மறச்செயல்களை மாற்றி அறச்செயல்களில் அவனைப் புகும்படி செய்விப்பது தம் கடமை என்ற உறுதி ஒருநாள் புலவர்க்கு உண்டாயிற்று.

அன்று, திருமாலுக்குரிய திருவோணப் பெருவிழாவின் இறுதி ஏழாநாளாயிருந்தது. "கழுநீர் கொண்ட எழுநாளந்தி" என்பது மதுரைக்காஞ்சி. இவ் வோணவிழாவின் ஏழாநாள் பௌர்ணிமையாகும்; "ஞாயிறு...குடமுதற் குன்றஞ்சேரக் குணமுதல், நாண்முதிர் மதியந் தோன்றி" என்பர் மாங்குடி மருதனார். மதுரையில் நிகழும் பெருநாளாக இறையனார் களவியலுரை கூறும் ஆவணியவிட்டம் என்பதும் இவ்வாவணி ஓண விழாவே. இது மேற்கூறிய பௌர்ணிமையை யடுத்த அவிட்ட நாளிலும் நிகழக்கூடியதாதல் அறியத்தகும். அத் திருவிழாவிற் பகல்முதல் மறுநாள் வரை, மதுரை மாநகரில் இருந்த கோலாகலமும் ஆரவாரமும் சொல்லி முடியாதனவாகும். அக்காட்சிகளையெல்லாம் நேரிற் கண்டவர் இப்புலவர். இவ்விழாவின் மறுநாள், மன்னவுன் கோயிலிற் காலைமுரசம் முழங்கியது. அரசன், நாளோலக்கமிருந்து யாவர்க்கும் காட்சியளிக்கும் காலமும் வந்தது. ஓலக்க மண்டபத்தை நாடி அரசனால் அழைக்கப்பட்ட படைத்தலைவர்களும், வீரர்களும், பாணரும், விறலியரும், புலவர்களும், இரவலரும் திரண்டு சென்றனர். அலங்காரமான அந்த அத்தாணி மண்டபத்திலே சீரிய சிங்காதனத்தில் வீரவேந்தன் வீற்றிருக்கின்றான். அவன் நாட்டம் முதலில் தன் வெற்றிப்புகழுக்குக் காரணமான வீரசூரர்களிடமே சென்றது. அவர்களுக்கு அவன் புரிந்த ஆதரவும் கொடையும் அளவற்றவை என்று சொல்லவேண்டிய

தில்லை. கடைசியில் பாணர் விறலியர்: இவர்க்குப்பின் புலவர்—இவர்களிடமும் அரசன் அன்பு காட்டிப் பரிசில்களும் உதவினான். புலவர்களின் இறுதியில் நம் மாங்குடி மருதனார் அரசன் திருமுன்பு வந்து நின்றுகொண்டு, அவன் எதிர்பாராத விதமாய் இக்காஞ்சிப்பாட்டை எடுத்த குரலில் பாடலானார். இப்பாடலில் அவர் கூறும் பொருளைச் சுருங்கச் சொல்லுகின்றேன்.

‘ஓங்குதிசை’ என்று மங்கலமாக இப்பாட்டைத் தொடங்கி, நெடுஞ்செழியன் முன்னோரின் ஆட்சிப் பெருமையை, அவர்,

மலைநாறிய வியன்ஞாலத்து
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
உலக மாண்ட உயர்ந்தோர் மருக’

என்ற அடிகளில் முதலிற் குறிப்பிடுகின்றார். ‘உன் முன்னோர்கள் தருமநெறி தப்பாமல் ஒழுகினமையால் மழைதொழில் உதவியது; திசைகளெல்லாம் தழைத்தன. ஒரு விதைப்பில் வித்திய விதை ஆயிரமாக விளைந்தது. வயல்களும் மரங்களும் பயன் பெருக்கின. மக்களெல்லாம் பசியும் பிணியும் நீங்கினர்’ என்பது இதன் கருத்து. இதுவே—

‘இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு’

என்று வள்ளுவர் திருவாக்கினும் பயில்வதாம். நெறி தவறிய கொடுங்கோல் வேந்தனது நாடு, மழைவள

மற்று வறுமை மிகும் என்பர்; 'அறனில் வேந்தனுளும் வறனுறு குன்றம்' என்றார் முன்னோர். (அகம்,)

இந் நெடுஞ்செழியன் செங்கோல் வேந்தனே; ஆயினும், தன் பகைவரிடமும் அவர் குடிகளிடமும் இவன் சிறிதும் இரக்கம் காட்டியவனல்லன். பகைப் புலங்களைக் கைப்பற்றுதற்காகக் குடிமக்கள் அலறும் படி அவற்றை எரியிட்டுப் பாழ்படுத்தியும் கொள்ளை கொண்டும் இவன் புரிந்த வன்கண்மைகள் பல.

'உன் பெரும்படை சென்ற இடங்களிலே விளைவு மிக்க மருதவைப்பெல்லாம் நெருப்பு மேய்ந்துண்டது. காவற்சோலைகள் கவினழிந்தன. நாடென்று பேர்பெற்ற நிலப்பகுதி காடென்னும் பேர்பெற்றது. பசுத்திரள் தங்கிய இடங்கள் புலிக்கூட்டம் தங்கும் இடமாயின. ஊரிருந்த வழிகள் பாழடைந்தன. பெண்கள் மாளிகைவாயில்களில் இருந்துகொண்டு புலம்பலா யினர். அம்மாளிகைகளில் தீப்பட்டுக் கரிந்த தானியக் குதிர்களிலே கோட்டான்கள் பேட்டுடன் இருந்து கத்தின. விளைவயல்களிலே காட்டுப் பன்றிகள் ஓடித் திரிந்தன. இவ்வாறு அழிந்தன உன் பகைவர் நாடு கள்' என்பர் இம்மருதனார்.

இந்நிலைமைகளைப் புகழ்ச்சித்துறைகளாக்கி அர சர்களைப் புலவர்கள் புகழ்ந்து வந்த அக்கால முறைப் படி இவர் பாடியவர் அல்லர். நெடுஞ்செழியனுக்கு உறுதிப்பொருளைக் கூறப்புக்க இப்புலவர், இவ்வாறு கூறியது, அவனது கொடுமைகளைக் குறிப்பிடுவதற் கென்றே கொள்ளல் தகும். சென்ற உலக மகாயுத் தத்தில், அச்சு நாடுகள் பகைப்புலங்களிற் புரிந்த

அட்டூழியங்கள் பல மேற்கூறிய அடிகளிலே பிரதி பலித்தல் காணலாம்.

இப்படிப் பகைவரிடம் கொடுமைகாட்டினும் பொய்யற்ற நட்பு, வள்ளன்மை, புகழ்ச்சிவிருப்பு முதலிய நல்லியல்புகள் வாய்ந்திருந்தவன் இச்செழியன் அதனால் இவனை வாழ்த்தியவண்ணமே இவர்.

'உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமொடு இசைவேட் குவையே

என்ற அடிகளிற் குறிப்பிட்டு, அவனைத் தம் வசமாக்க முயலுகின்றார்.

இவ்வாறு புகழ்ந்தவர், பின் அவன் நாடு நகர்களை வருணிக்கத் தொடங்கி, மலை காடு முதலிய நிலப்பகுதி களின் இயல்புகளையும், அந்நிலத்து மக்களின் வாழ்க்கை நடையுடை பாவனைகளையும் மிக அழகாகப் பாடிச் செல்கின்றார். இந்நிலங்களின் மத்தியிலே மதுரைமா நகரமானது மற்றோர் இந்திரபுரிபோல் விளங்குகின்றது. நெடுஞ்செழியன் அடைந்த வெற்றிப் பயனான பெருஞ் செல்வங்களெல்லாம் ஒருங்கே திரண்டு குவியும் இடமன்றோ அது! அதனால்—

'நிலனெடுக் கல்லா ஒண்பல் வெறுக்கைப்
பயனற லறியா வளங்கெழு திருநகர்'

என்று புகழப்படுகின்றது. இத்தலைநகரமானது

'மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற ஓங்கிய பலபடைப் புரிசை
வையை யன்ன வழக்குடை வாயில்
யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவின்
ஓவுக்கண் டன்ன இருபெரு நியமம்'

முதலியவற்றுடன் விளங்குவதாம். திருப்பரங்குன்றத்தின் விழாவொலியும் ஆங்குக் கேட்கப்படுகின்றது. வையையாற்றுப் பிரவாகம்போல் மக்கட் கூட்டம் வழங்கும் வாயிலுள்ளது அந்நகரம் என்றும், ஆறு இடையே கிடந்தாற்போல் விளங்குவன, அதன் அகன்ற வீதிகள் என்றும், அவ்வீதிகளில் **நாளங்காடி அல்லங்காடி** என்ற இரண்டு கடைத்தெருக்கள் அலங்கார சித்திரங்கள்போல அமைந்துள்ளன என்றும் கூறும் அழகு இன்பமூட்டுகின்றது. இவற்றுள் நாளங்காடியில் விற்பனைப் பண்டங்களை இன்ன வின்ன என்று அறிவிக்கும் கொடிவகைகளும், அவ்விழாக் காலத்திற் கடைவீதிகளிலே மக்கள் திரண்டுள்ளதும், நாற்பெரும் படைவீரர்கள் அவ்வீதிகளிற் செல்லும் போது பண்டம்விற்கும் பெண்டிரும் பிறரும் அஞ்சி ஒதுங்கி, அவர்கள் அகன்றதும் வெளிப்பட்டு விற்பதற்குத் திரியும் நிலையும் நேரிற் காண்பது போலக் கூறப்பட்டுள்ளன, இப்பெரிய வியாபாரத் தலத்தின் பெருமையை—

'மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கும் முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல் **நாளங்காடி**'

என்று இப்புலவர் சிறப்பிப்பர். மேகங்கள் முகப்ப

தால் குறைபடாமலும், ஆறுகள் வந்து பாய்வதால் மிகாமலும் ஒரு நிலையிலுள்ள கடல்போல, கொள்ளக் கொள்ளக் குறையாமலும், கொண்டுவந்து குவிக்கக் குவிக்க மிகாமலும் ஒருநிலைபெற்றுள்ளன அக்கடைத் தெருக்கள் என்பது கருத்து.

இனி, அல்லங்காடி என்ற அந்திக்கடையின் காட்சி இதன் மேலும் அழகு வாய்ந்ததாம். திருவிழாவின் ஏழாநாள் தத்தம் தெய்வங்களை வழிபடுவதற்காக நகரச்செல்வர்களும், அவர் மகளிரும் இரதங்களில் அலங்காரமாகக் கோயிலுக்குச் செல்வதையும் அப்போது மகளிர் அழகிய தங்கள் சிறுகுழந்தைகளை

'தாதணி தாமரைப் போதுபிடித் தாங்கு'

கையிலேந்திச் செல்வதையும் புலவர் கூறும் அழகு அறிந்து சுவைக்கத்தக்கது. இங்கே சிவந்த தாமரைப் பூவைச் சிறு குழவிக்கு ஏற்ற உவமையாக்கியிருப்பது புதுமை தருகின்றது. இவ் அந்திக்கடையில் ஆடைகள் விற்கும் வணிகர் தாம் நெய்த துணிகளை விரித்தபடியே விலைகூறிக்கொண்டு நெருங்கிநிற்கும் நிலைமையை,

'குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினும் காலுற நிற்ற'

என்று இவர் கூறுவது, மதுரை 'அந்திக்கடைப் பொட்டல்' என்ற வியாபாரத்தலம் இன்றுள்ளபடியே சங்க நாளிலும் விளங்கியதென்பதை நினைப்பூட்டுகிறது.

இவ்வாறே, இரண்டு பெரிய கடைவீதிகளிலும், அறவோர் அந்தணர் முதலியோர் இடங்களிலும் தாம்

கண்ட அதிசயக் காட்சிகளாகப் புலவர் கூறியிருப்பவை யெல்லாம் மகிழ்ச்சி தருகின்றன. அந்திக்குப்பின், இரவு முதலிரண்டு சாமங்களிலே வெறியாட்டுக்களும், குரவைக் கூத்துக்களும், ஆடல் பாடல்களும், பரத்தையரின் கோலாகலமும் அத்திருவிழா நாளில் மலிந்திருந்தன. மூன்றாஞ் சாமந்தான் ஊர் முழுவதும் களைத்து ஓய்ந்து அடங்குவதாயிற்று. இந் நடுநிசியும் ஒரு கூட்டத்தாரின் கொண்டாட்டத்துக்கு உரிய தாயிறும். அவர் யார்? கள்வரென்று சொல்லவும் வேண்டுமோ? இவர்களை

இரும்பிடி மேந்தோ லன்ன இருள்சேர்பு
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்

நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனகழ் உளியர் கலன்நசைஇக் கொட்கும்
கண்மா றாடவர்

என்று வருணிக்கின்றார் புலவர். அஃதாவது—கரிய யின் தோல்போன்ற சட்டையிட்டவர்; கூர்மையான தொங்குவாளுடையவர்: செருப்பிட்ட அடியினர்; சொட்டை என்ற வளைவுக்கத்தி செருகிய இடையுள்ளவர்; நீலநிறமான அரைக்கச்சுடையவர்; நூலேணியை அரையிற் சுற்றியவர்; அணிகலன் முதலிய சொத்துள்ள இடங்களை அறியத் திரிபவர்; இமைக்கும் அளவில் மறைய வல்லவர் இக்கள்வர்—என்பதாம்.

இக்கள்வரின் மறைவிடங்களைத் துருவி ஆராயும் ஊர்காவலரின் சிறப்பை,

வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவில் நீர்திரண் டொழுகும்
மழையமைந் துற்ற அரைநா ளமையமும்
அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்
அச்ச மறியாது ஏமமாகிய மற்றை யாமும்

என்று கூறுவதும் காணலாம்.

இவ்வடிகளிலே களிறுகளைத் தேடித்திரியும் புலி போலத் துஞ்சாக் கண்ணராயும் அஞ்சாத உறுதியராயும் அம்பினராயும் உள்ளவர்கள் ஊர் காவலர் என்றும், திருவோணவிழா நடக்கும் ஆவணி மாதத்தில், மழை பொழியும் நடு நிசியிலும் இவரது காவல் குறைவற்றிருந்ததென்றும், அதனால், அச் செல்வம் மிக்க நகரம் அச்சமறியாமல் இருந்ததென்றும் கூறும் அழகு தற்கால ஊர்காப்பு ஊழியர்க்கும் அவராற் காக்கப் படும் ஊரார்க்கும் உற்சாகமூட்டுவதன்றோ?

அதன்பின்பு, நான்காஞ் சாமமாகிய வைகறைக் காலம் தோன்றியது. அக்காலத்தில் நகர ஆரவாரம் பெருகலாயிற்று. இவ்வைகறையில் இன்றுயிலெழுந்து காலைக்கடன்களை யெல்லாம் நிறைவேற்றிய பின், நெடுஞ்செழியன் தன் அத்தாணி மண்டபம் சென்றான். சென்றுபுக்கதும், அவனது நாளோலக்கத்திற்கு உடன் சென்ற பெருமக்களிலே, நம் புலவரும் ஒருவரென்று மேலே கூறினேன்.

இவ்வாறு, முதனாட்பகல் முதல் மறுநாட்காலை வரை தாம் கண்ட அழகிய மதுரைக் காட்சிகளையெல்லாம் அரசன் முன்னின்று அவனும் அவையோரும் அதிசயமடையும்படி பாடினார் மாங்குடி மருதனார். இம்மட்டோடு அவர் நின்றவராயின் அவரைப் பரிசில் விரும்பிப் பாடும் எளிய புலவருள் ஒருவராகவே நாம் கருதி விடலாம். அவ்வாறு கருதத் தகுமோ? 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வியும், உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பும்' நம் புலவர்க்கு இருந்தன என்று நெடுஞ்செழியனே வாயாரப் புகழ்வதால், ஞான சீலங்களும் உலகை நல்வழிப் படுத்தவல்ல ஆற்றலும் உடைய பெரியார் இவர் என்பதில் ஐயமில்லை. அதனாற்றான் அவ்வீர வேந்தன்முன் அஞ்சாது நின்றுகொண்டு —" அரசே! வாழி! பிறவியறுதற்குரிய நெறிகளில் முயலாமல் பயனின்றி வாழ்நாள் கழித்த பெருவேந்தர்கள் முன்பும் திரையிடு மணலினும் பலர் என்பதை அறிவாய். அதனால், நீயும் அவ்வாறு வீணே கழியலாகாது என்று இம்மையிற் பெரியதாயிருப்பதொரு பொருளை இங்கு உனக்குக் கூற வந்தேன். அது, கந்தழி என்ற தத்துவங் கடந்த பொருளாம். அதனை என்னாற் காட்டுதல் அரிது. நீ இனிக் காலத்தை வீணாக்காமல் ஞானாசிரியரை அடைந்து அப் பரமதத்துவங்களைக் கேட்டு உய்வாயாக. இதுவரை நான் சிறப்பித்துக்கூறிய உன் மதுரைப் பெருஞ் செல்வங்களை நினைத்துப்பார். உனக்கு அவற்றோடு என்ன உறவுண்டு? உன்னிடம் இதுவரை தங்கிய மாயை இனிக் கெடுவதாக. நீ நீடுவாழி" என்று அரசனுக்கு உலக நிலையாமைகளை வற்புறுத்தி உபதேசிக்கலானார். இவ்வுபதேசத்தை ஓணத்திருநாளில் அவர் கூறியதற்கு அரிய கருத்தும் ஒன்

றுண்டு. மூவுலகையும் அடக்கியாண்ட மாவலி சக்கரவர்த்தியை ஒடுக்கவேண்டி எடுத்த வாமனவதார தினத்தைக் கொண்டாடுவதே அத் திருவிழாவாகும். அம்மாவலி, உத்தமகுணஞ் செயல்கள் உடையவனுயினும், தன் ஆசுரவியல்பால் தேவர் முதலியவர்க்கு இடுக்கண் விளைத்து வந்தவன். அதனுல் கடவுளே அவதார மூலம் அவன் செருக்கை ஒடுக்க நேர்ந்தது. எத்தனை பெருவலியும் செல்வங்களும் உடையனுயினும் தெய்வபலம் இல்லையேல் அவை யாவும் சிதைந்தொழியும் என்ற உண்மையைக் குறிப்பிடுவது அத்திருநாளாம்.* "அவுணற் கடந்த மாயோன் மேய ஓண நன்னுள்" என்ருர் இப்புலவரும். ஆகவே, நெடுஞ்செழியனுக்கு மாவலி கதையை நினைவூட்டுவதும் இவரது உட்கருத்து எனலாம். இவரது சமயோசிதமான இம்மொழிகளைக் கேட்ட அவையோரும் பிறரும் வியப்பும் உவப்பும் அடைந்ததோடு உண்மை நிலையும் அதுவே என்று உணர்ந்தனர். இத்தகைய புரமோபதேசம், சூரனும் பண்டிதனுமான நெடுஞ்செழியனை நல்வழியிற் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமுண்டோ? சீரிய பொருளுரைகளும் அறவுரைகளும் நிரம்பிய இக் காஞ்சிப்பாட்டு, நம் காலத்தார்க்கும் பெருநன்மை பயந்து வாழ்விப்பதாக.

---

* மதுரை மாநகரிலும் பிற தமிழக நகர்களிலும் பண்டு நடந்துவந்த இந்த ஓண விழாவே மலைநாட்டு மக்கள் எல்லாராலும் தம் தேசியத் திருநாளாகச் சிறப்பித்து இக்காலத்துக் கொண்டாடப்படுவதாகும். இது "Some Aspects of Kerala and Tamil Literature" என்ற எனது ஆங்கில மொழிபெயர்ப்பு நூலிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

4. குண்டலகேசி நீலகேசி வரலாறுகள்

தலைப்பிற் குறித்த கேசிகள் இருவரும் முறையே பௌத்த சைன சமயங்களைச் சார்ந்த பெண் துறவிகள் ஆவர். சமய நூல்களை யெல்லாம் நன்குணர்ந்து புற மதத்தவருடன் வாதாடி வென்று, தத்தம் கொள்கை களை நாடெங்கும் பரப்ப முயன்றவராக இன்னோர் கூறப்பட்டுள்ளார். இவ்விருவர் வரலாறுகளையும் இவர் கள் சமயவாதம் புரிந்த முறைகளையும் கூறும் நூல்கள் இவர் பெயர்களையே பெற்றுள்ளன. காவியவுருவில் முன்னோரால் தமிழில் இந்நூல்கள் பாடப்பட்டவை. இவற்றுட் குண்டலகேசியை ஐம்பெருங் காப்பியங் களுள் ஒன்றாகக் கூறுவர். இவ்விரு நூல்களின் ஆசிரி யர்களைப்பற்றி ஒன்றும் அறியக்கூடவில்லை.

I. குண்டலகேசி

இவற்றுள் குண்டலகேசி என்ற பௌத்த காவி யம் இப்போது கிடைத்திலது. ஆனால், வெளிவந்துள்ள நீலகேசியின் பழையவுரையி லிருந்தும், புறத்திரட்டு என்ற தொகை நூலிலிருந்தும் குண்டலகேசிச் செய்யுள் களிற் சிலவும் அது கூறுங் காப்பியத்தலைவியின் வர லாறும் நமக்கு ஒருவகையாகத் தெரியவருகின்றன. இதனுடன், வேறு பௌத்த நூல்களினின்று இவளைப் பற்றிய செய்திகளாக அறியப்பட்டனவும் உண்டு. இவற்றைத் தொகுத்துக் கூறுவேன்.

இராஜக்கிருகம் என்ற நகரத்தில் பெரிய தனவானு யிருந்த வணிகனொருவன் கன்னிகை இவள். பத்திரை என்பது இவளது இயற்பெயர். தனக்கு ஒரே மகளாத

லால், செல்வனான தந்தை அருமை பெருமையாக இவளை வளர்த்து வந்தான். தந்தை மாளிகையின் மேன்மாடத்தில் வசித்துவந்த இவ்விளம்பெண் ஒருநாள் சாளரவழியே வெளிநிகழ்ச்சிகளை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அச்சமயம், அழகிய இளைஞனொருவன் ஊர்காவலரால் களவுக் குற்றத்தின் பொருட்டு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைக் கண்டனள். அவ்வாலிபன் அரசனமைச்சருள் ஒருவனுடைய மகனாவன். அவன் பெயர் **சத்துகன்** என்பது. காளன் என்றும் அவனை வழங்குவர். அவனது பேரெழிலை மாடத்திலிருந்து கண்ட **பத்திரை**, அவன்மேற் காதல் மிக்கவளானாள். அதனால், அவனே தன் கொழுநனாக வேண்டும் என்று பெற்றோரிடமும் அறிவித்து விட்டாள். இந்த எண்ணத்தை மாற்றவேண்டித் தந்தை எவ்வளவோ முயன்றும் சிறிதும் பயன்படவில்லை. ஆகவே, அவ்விளைஞனைச் சிறைமீட்பதற்குப் பெருஞ் சூழ்ச்சிகள் செய்து மிக்க பொருளையும் செலவிட்டான் அவள் தந்தை. இவற்றின் பயனாக விடுதலை பெற்ற அவ்வாலிபனைப் **பத்திரை** மணம்புரிந்து கொண்டு வாழ்க்கை தொடங்கலாயினள். ஆனால் சில காலத்துக்கெல்லாம், அக்கணவன் மனம் தான் நெடுநாட் பழகி வந்த களவுத் தொழிலிலே திரும்பி முனைவதாயிற்று. அதனால், தன் மனைவியை ஒரு தனியிடம் அழைத்துச் சென்று, அவளது அணிகலங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு அவளையே கொன்றுவிட நினைந்தான் அப்பாவி. அந்நினைவின்படி அவன் மனைவியிடஞ் சென்று, காவலர் தன்னைச் சிறைப்படுத்திய காலத்தில் தான் விடுதலை பெற்றால், அடுத்த மலையுச்சியில் உள்ள தன் குலதெய்வத்துக்குப் 'பலிகாம' வேள்வி புரிவதாகப்

பிரார்த்தனைக் கடன் நேர்ந்திருப்பதையும், அதனை நிறைவேற்றுதற்கு எல்லா அணிகலங்களாலும் அலங்கரித்துக் கொண்டு அவள் தன்னுடன் வரவேண்டியிருத்தலையும் வலியுறுத்தலானான். பத்திரையும் அக்கட்டளையை மகிழ்வுடன் ஏற்றுத் தன்னை அணிகளால் முழுதும் அலங்கரித்தவளாய், வேண்டிய பலிப் பண்டங்களுடன் கணவன்பின் புறப்பட்டுக் குறிப்பிட்ட மலைச்சிகரத்துக்கு ஏறினள். இருவரும் அம்மலைக் கொடுமுடி யொன்றை யடைந்து நின்றதும், அத்தீயோன் மனைவியை நோக்கி "உன்னை இங்கு நான் அழைத்து வந்தது உன் அணிகலங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு, உன்னையும் கொன்றுவிடவே அன்றி வேறன்று. முதலில் உன் ஆபரணங்களை ஒன்றுவிடாமல் கழற்றிவை" என்று கூறினான். இது கேட்டதும், மலையே தலைமேல் உருண்டு விழுந்ததாக அவள் திடுக்கிட்டாள். பின் சிறிது தெளிந்த பத்திரை, தான் அணிகலங்களை யெல்லாம் அளிப்பதாகவும், தன்னுயிரைப் போக்குவதால் அடையும் பயன் ஒன்றுமில்லையென்றும், தன்னைக் கொல்லாதுவிடின் சாகும்வரை தான் அவற்கு அடிமைத்தொழில் புரிந்து வருவதாகவும் எவ்வளவோ கூறி மன்றாடினள். ஆனால், அக்கொடும்பாவி மனம், இதற்கெல்லாம் சிறிதும் இணங்கவில்லை. 'இனித் தான் கருதியதைச் செய்தே தீருவன்' என்று தெளிந்த பத்திரை, தன் பேரறிவால் சமயோசிதமான சூழ்ச்சியொன்றை உள்ளத்தில் நிச்சயித்துக்கொண்டு அத்தீயோனை நோக்கி, "அன்பரே! அன்று உம்மைக் காவலர் சிறைப்படுத்திச் செல்லுங்கால் என் தந்தையைக் கொண்டு ஆயிரக்கணக்கான திரவியங்களைச் செலவிட்டு உம்மை மீட்பித்ததோடு, அன்று முதல் உம்மைத்

தெய்வமாகவே கருதி மனங்கோணுமல் தொண்டு செய்தும் வந்திருக்கிறேன். உம் சேர்க்கை மறுபிறவியினும் எனக்கு அமைய வேண்டும். அதற்காக உம்மைத் தழுவிக்கொள்ளவும் வலங்கொண்டு வணங்கவும் இறுதிக் காலமான இப்போது எனக்கு அனுமதி அளிப்பீராக" என்று உருக்கமாக வேண்டி நின்ருள். அதற்கு அவன் மனஞ் சிறிதிரங்கி, "பத்ரே! அவ்வாறே செய்யலாம்" என்று இணங்கினன். இவ் வனுமதி பெற்றதும், மலையின் முனையருகில் நின்ற அவனை முன்னும் பின்னுந் தழுவியவளாய் வலம் வந்து, "கணவரே! இதுவே கடைசி முறையாக உம்மை நான் காண்பது" என்று கூறி, மூன்ருமுறை தான் வலஞ்செய்யும்போது அவனது பின்புறமாக வந்ததும், தன்னினைவற்று நின்ற அவன் கழுத்தை ஒருகையாற் பிடித்து மற்ருெரு கையால் முதுகுப்புறத்தை வலிமையுடன் தாக்கி அவனைக் கீழே விழும்படி தள்ளிவிட்டாள், அப்பத்திரா தேவி. உடனே, மலையுச்சியினின்றும் உருண்டு விழுந்து நொறுங்கி அக்கொடியோன் மாண்டொழிந்தான். அதுகண்ட அம்மலைத் தெய்வம், அவளது துணிகரமும் சமயோசிதமுமான செயலை வியந்து வாழ்த்தியது.

இவ்வாறு தீய கணவன் செத்தொழிந்தபின், தன் தந்தையிடம் செல்ல விரும்பாமல், அப்பத்திரை மலையினின்று இறங்கி அப்பக்கத்துள்ள வனமொன்றிற் புகுந்தாள். அங்கே பன்னசாலையொன்றில் சைன முனிவர்கள் தங்கியிருப்பதைக் கண்டதும், அவ்விடம் அடைந்து தனக்குத் துறவு நிலையை அருளுமாறு அம் முனிவர்களை வேண்டினள். அவர்களும் அதற்கிணங்கி, "இடையருத் தியானத்தால் மனத்தை ஒரு நிலையில்

நிறுத்தல் அல்லது சமய நூல்களையெல்லாம் நன்கு பயின்று புறமதத்தவருடன் வாதம் புரிந்து வெற்றி பெறுதல் என்ற இவ்விரண்டு நெறிகளே யாங்கள் துறவொழுக்கமாகக் கொண்டுள்ளவை ; இவற்றுள் எதனை நீ ஏற்க விரும்புகிறாய்?" என்று உசாவினர். சிறிது சிந்தித்துச் "சமயவாதம் புரிதலே நான் மேற்கொள்ளத்தக்கது" என்று பத்திரை கூறினாள். முனிவரும் அவள் விரும்பியபடியே துறவு நிலையை அருளினர். சைனத் துறவுநிலைக்கேற்றபடி, பத்திரையின் கூந்தல் முதலிற் களையப்பட்டது. ஆனால் அது சில காலத்துள் சுருண்டு குழன்று வளர்ந்துவிட்டது. அதனால் குண்டலகேசி என்று அம்முனிவரால் அழைக்கப்படலாயினள். அவட்கு வேண்டிய சமயப் பயிற்சிகள் திறம்பட அளிக்கப்பட்டன. சில்லாண்டுகளிலே அத்துறையில் இணையற்று விளங்கினள் **பத்ரா - குண்டலகேசி**. பின், முனித்தலைவர் அவளைநோக்கி, "கல்வியின் கரைகண்ட நீ இனி சமயவாதம் செய்யத்தகும் ; அதற்காகப் புறப்படுக" என்று கட்டளையிட்டனர். அவ்வாறே குண்டலகேசி நாடு நகர் எங்குஞ் சென்று சமயக் கணக்கர்களுடன் வாதப்போர் புரிந்து யாவரையும் வென்று புகழ்பெற்று வரலாயினள்.

மதவாதிகளை வாதுக்கு அழைக்குமிடத்துக் குண்டலகேசி மேற்கொண்ட முறை புதுமையும் விநோதமுமானது. தான் செல்லும் ஊர் அல்லது நகரின் வாயிலில் மணலைக் குவித்து அதனுள் நாவல் மரத்தின் கிளையொன்றை நட்டுவைத்துத் 'தன்னுடன் வாதிக்கவருவார் உண்டேல், அந்தக்கிளையைக் களைந்

தெறிக' என்று* அறைகூவுவளாம். அச்செய்தியை, வாதம் புரிய வருவாரிடம் கூறி அவரை இன்னாரென்று தெரிந்து தனக்கு அறிவிக்கும்படி இளைஞர் சிலரையும் நியமித்திருப்பளாம். அவ்வாறு களைவாரெவரும் இல்லையேல் தானே அக்கிளையை எடுத்துக்கொண்டு வாதியரை நாடி வேற்றூர் செல்வது அவள் வழக்கம். இம்முறையே ஊர் ஊராகச் சென்று, தன்னோடு எதிர்ப்பார் எவருமின்றித் தருக்கியவளாய் முடிவில் வடநாட்டு சிராவஸ்தி என்ற நகரம் புகுந்தாள். அக் காலத்தே அந்நகரை யடுத்த 'ஜேதவனம்' என்ற பிர தேசத்தில் புத்தபகவான் எழுந்தருளியிருந்தனர். அந் நகர் சென்ற குண்டலகேசி, அதன் வாயிலில் வழக்கம் போல வாதுவேண்டி நாவற்கிளையை நட்டிருந்தாள். அச்சமயம். அந்நகருட் புகுந்த சாரீபுத்ரர் என்ற முதி யோரான முனிவர் அக்கிளை ஆங்கு நடப்பட்ட வர லாற்றை இளைஞர்மூலம் அறியலாயினர். அறிந்ததும், அக்கிளையைப் பிள்ளைகளே பிடுங்கி யெறியும்படி அவர் கட்குக் கட்டளையிட்டனர். அதன்படி இளைஞரால் உற்சாகத்துடன் அது செய்யப்பட்டது. நகருட் சென்று திரும்பிய குண்டலகேசி வாயிலின்முன் வைத்திருந்த தன்நாவற்கிளை எறியப்பட்டிருப்பது கண்டு அதுபற்றி

---

* சமயவாதம் புரியும் மகளிர் நாவற்கிளையைக் கொண்டு செல்வது மரபென்பது 'புத்த ஜாதகக் கதை' ஒன்றாலும் அறி யப்படுகிறது (The Jataka, vol iii, p. l). 'ஜம்புத்தீவத்துறவி' எனக் குண்டலகேசி அழைக்கப்பட்டதாகப் பௌத்த நூல் கூறும். ஜம்புவாகிய நாவல்மரத்தின் கிளையைச் சமயவாதக் குறியாகக் கொண்டிருந்தது—இந்நாவலந் தீவில் வாதத்திலே தான் இணையற்றவள்—என்பதைக் குறிப்பதுபோலும். 'நாவ லோ நாவல்' என்று போரில் அறை கூவும் தமிழ்வழக்கும் இங்கு அறியத்தக்கது.

விசாரித்தபோது, சாரீபுத்ரரால் அது களைவிக்கப்பட்ட செய்தி தெரியவந்தது. உடனே பெருந்திரள் தன்னைச் சூழ நகருட்சென்று, ஒரு மரத்தின் கீழ் முனிவர்தலைவராய் வீற்றிருந்த **சாரீபுத்ரர்** என்ற அம் முதியாரைக் கண்டு வந்தித்து, பின் "என் நாவற்கிளையைச் களைந் தெறிவித்தது தாங்கள்போலும்" என்று உசாவினள் குண்டலகேசி. "ஆம்" என்ற விடை எடுத்த குரலில் அப்பெரியாரிடமிருந்து கிடைத்தது. "ஆயின் நாமிருவரும் சமயவாதம் புரியத்தகும்" என்று குண்டலகேசி கூற, "பத்ரே! அங்ஙனமே ஆகுக," என்றார் அப்பெரியார். வாதமும் அறிஞர் பெருங்குழு முன்பே தொடங்கியது. அதனில், முற்படக் கேள்வி கேட்டற்குரியார் **சாரீபுத்ரராகக்** குறிப்பிடப்பட்டனர். அவ்வாறே, அம்முனிவர் முதலிற் சிறு கேள்வியொன்றையிட்டு * அதற்கு விடை தரும்படி குண்டலகேசியைக் கேட்டார். அதற்கு அவள் மறுமாற்றம் தரக்கூடவில்லை. அதனால் அவையிலே பெரிதும் ஆரவாரம் எழுந்தது. அறிஞர் குழுமுன்பே தான் தொடக்கத்தில் தோல்வியுற நேர்ந்ததையும், முனிவரின் அறிவாற்றல்களையும் உணர்ந்த குண்டலகேசி அப்பெரியாரது அடியில் வீழ்ந்து தன்னை ஆட்கொண்டு துறவளித்து உபதேசம் புரியுமாறு வேண்டிக்கொண்டனள். அதற்கிணங்கிய **சாரீபுத்ரர்**, ஜேதவனத்துள்ள **புத்தபகவானைத்** தரிசித்துச் சரணமடையும்படி அவட்கு ஆணையிட, குண்டலகேசியும் அவ்வாறே அப்பகவானையடைந்து தருமோபதேசம் பெற்றுப் புத்த சங்கத்துப் பிக்ஷுணியாகிப் 'பவத்திறம் அறுகென நோற்று' அருகத்பதம் பெற்றாள் - என்பது சரிதம்.

---

* "ஒன்றென்பது யாது?" என்பதே இக்கேள்வி. இது புத்தர் பிறரைக் கேட்ட கேள்வி என்பர். இதன் கருத்தை விரித்திற் பெருகும்.

II. நீலகேசி

குண்டலகேசி வரலாற்றையும், அவள் பர சமயத்தாருடன் புரிந்த வாத நெறிகளையும், முடிவில் தன் கொள்கையை நிறுவிய தன்மையையும் கூறுவதே குண்டலகேசிக் காப்பியம். இவளது புத்த வாதங்களைக் கண்டித்து, சைன சமயக் கொள்கைகளை நிலைநாட்ட எழுந்தது மற்றொன்றான நீலகேசி என்ற நூல். குண்டல கேசி போலவே, இக்காப்பியத் தலைவி பெயரும் நீலகேசி எனப்படும். இவள் தன் பூருவ தசையில் தென்னாட்டுள்ள பழையனூரில் வாழ்ந்த பேய்க் கணங்களுக்குள் பிரபலம் பெற்றிருந்த ஒரு தாக்கணங்காவள். பழையனூர் என்பது தொண்டை நாட்டில் திருவாலங்காட்டைச் சார்ந்தது. இவ்வூரில் நீலி என்று பண்டு தொட்டே வழங்கி வந்த கொடிய பேய் ஒன்றன் வரலாறு எங்கும் பிரபலமாகத் தெரிய வந்திருந்தது. சம்பந்தமூர்த்திகள் தேவாரத்தும் பின்னோர் பலர் வாக்குக்களிலும் இவ்வரலாறு பயில்வதாகும்.*

---

* " துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் முனைநட்பாய்
வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே "

(சம்பந்தர் : தேவாரம்)

" மாறுபடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை
யாற்றணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பன்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ "

(சேக்கிழார் நாயனார் புராணம்)

ஓர் ஊரில் வணிகனெருவன் நீலி என்ற தன் மனைவியுடன் இல்வாழ்க்கை நடத்தி வந்தான். அவனுக்கு அம்மனைவியிடம் பிறந்த குழந்தை யொன்றுண்டு. சில்லாண்டுகட்குப் பின், ஊழ் வசத்தால் அவன் வேசையொருத்தியின் வலையிற் சிக்கித் தன் மனைவி குழந்தைகளைத் துறந்து வாழலானுன். தன் செல்வம் யாவும் சில காலத்தில் அவ்வேசையாற் கவரப் பட்டன. கணவனைப் பிரிந்த மனைவியோ தந்தையூர் சென்று தன் பிறந்தகத்தே வாழ்ந்து வந்தனள். செல்வங்களை இழந்து நிலைகெட்ட வணிகன், மேலும் அவ் வேசையை மகிழ்விக்க வேண்டி, தன் இல்லாள் பூண்ட அணிகலன்களைக் கவரச் சூழ்ச்சி செய்தான். அதன்படி, தன் மனைவியுறையும் இடஞ்சென்று தான் வேசையாற் கேடடைந்ததற்கு வருந்திவந்ததாகவும், இனிப் பத்தினியுடன் இல்வாழ்க்கை புரிந்து நல்வாழ்வு பெற விரும்புவதாகவும் கூறினன். அப் பேதைமனைவியும் கணவன் கூற்றை நம்பி, தன் ஆடையாபரணங்களுடனும் குழந்தையுடனும் கணவனூர்க்கு அவனேடும் புறப் பட்டாள். புறப்பட்டுச் செல்லும் தனிவழியினிடையே கிணறு ஒன்று காணப்பட்டது. தன் கருத்தை முடித்துக்கொள்ள இதுவே தக்கவிடம் என்று உட் கொண்ட அக்கணவன், உண்ணீர் வேண்டுவதாகக் கூறி மனைவி குழந்தைகளுடன் அக்கிணற்றருகே சென்றுன். சென்றதும், தன் மனைவி பூண்டிருந்த அணிகலன்களை யெல்லாம் வலிதிற் கவர்ந்து கொண்டு, அவளைக் குழவியுடன் அப்பாழுங் கிணற்றிலே தள்ளி விட்டான் அக்கொடியோன். அதனுல், இருவரும் அதனில் ஆழ்ந்து துன்மரணம் அடைந்தனர்.

வேசையை மகிழ்விக்க வேண்டி இக்கொடுஞ் செயல் புரிந்த அப்பதகன் அவளுடன் கூடி நெடுநாள் வாழவில்லை. விலைமாதிடம் வெறுப்படைந்து அவளைப் பிரிந்து தன் ஊர் சென்று வாணிகத் தொழிலைத் தொடங்கி முனைந்து நடத்தலானான். அதனாற் பெருஞ் செல்வம் திரளவே வேறொருத்தியை மணம் புரிந்து கொண்டு தன் ஊரிலேயே வாழ்ந்து வந்தனன் அவ் வணிகன். சிலவாண்டுகட்குப் பின் தன் தொழில் நிமித்தமாகப் பழையனூர் வழியே அவன் ஒருகால் செல்லும்படி நேர்ந்தது. அவனால் முன்பு கொலை யுண்ட முதல் மனைவியான நீலியானவள், பேய்ப் பிறவி யெடுத்துத் திரிந்து கொண்டு வழிச் செல்வோர்க்கு இடுக்கண் விளைத்துவரும் இடம், அந்த வழி. அதன் பக்கமாக வணிகன் வந்ததும், அந்நீலிப்பேய் அவன் மனைவிபோல வடிவமெடுத்துப் பிள்ளையொன்றையும் தன் மருங்கிலே தாங்கிய வண்ணம் பலவாறு பிரலா பித்துக்கொண்டே அவனைத் தொடர்ந்தது. வணிகனோ அவ்வடிவத்தைப் பேயென்றே கருதி, அதன் வஞ்ச மொழிகட்கு இணங்காமல் அஞ்சி யோடலானான். பேயும் "இது முறையோ, முறையோ! என்னை நடுக் காட்டில் தனியே விடுத்து அகலக் கருதினீரே" என்று புலம்பியபடி அவனை விடாமல் தொடர்ந்தது. முடிவில் பழையனூர் நீதிமன்றத்தே கூடியிருந்த அவையத் தாரை அவ்விருவரும் அணுகி வழக்கிடலாயினர். முதலில், பேய்ப் பெண் அவர்களை நோக்கி— "அவையோரே! இவர் என் கணவர்; இக்குழந்தையும் இவரதே. வேசையொருத்தியுடன் கூடி என்னைப் புறக்கணித்ததனால், குழந்தையுடன் நானடையும் துன் பத்துக்கு அளவில்லை. இவரை என்னுடன் சேர்த்து

எங்களை நல்வாழ்வில் வைக்கும்படி நீங்கள் செய்தருள வேண்டும்" என்று இரங்கக் கூறியது. பின் வணிகனை அவையோர் உசாவ, அவன் "இவள் சொல்லியவை யாவும் பெரும் பொய்" என்றான். இவற்றைக் கேட்ட அவையத்தார், அப்பெண்ணின் இயல்புகளை நோக்கி முதலில் ஐயங்கொண்டனர். அக்குறிப்பறிந்த நீலிப் பேய் அவ்வணிகனது குடும்பச் செய்திகளையும் அவன் வரலாற்றையும் விவரித்து அதனை உறுதிப்படுத்தற்காகத் தான் தாங்கி நின்ற குழந்தையைக் கீழே தரையில் விட்டது. விட்டதும் அச்சிறுபிள்ளை 'அப்பா' என்று அவ்வணிகனிடந் தாவி அவனை அணைத்துக் கொண்டது. வணிகனோ "இவை யாவும் பேய்க் கூத்தே" என்று அவையோர்முன் மன்றாடினன். வழக்கின் முடிவில் அந்த அவையோர், வணிகனுக்குத் தைரிய மொழிகள் கூறி, இப்பெண்ணால் அப்படி ஒன்றுங் கேடுநேராதென்றும், தாமே அதற்குப் பிணை என்றும், கேடு நேரின் அவையினரான தாங்கள் எழுபதின்மரும் உயிர் கொடுப்பதாகவும் உறுதி கூறினர். அவர்கள் கூற்றிற்கு வணிகனும் இணங்க வேண்டியதாயிற்று. பின், அவ்விருவருங் கூடியுறைதற்கு மனையிடமொன்று அமர்த்தப்பட, நீலியுடன் அவ்வணிகன் அதனுட் புகுந்தான். உடனே மனைக் கதவு அடைக்கப்பட்டது. தொடர்ந்து உட்சென்ற அந் நீலிப்பிசாசு வணிகனைச் சின்னா பின்னஞ் செய்து அவனுயிரைக் கவர்ந்து தன் பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டு போய்விட்டது.

மறுநாட் காலை, உயிர் நீங்கிய வணிகனது சிதைவுற்ற சடலத்தைக் கண்டதும், பிணை கொடுத்த அவையத்தாரான வேளாளர் எழுபதின்மரும் மனங் குழம்

பினர். தாங்கள் வணிகற்களித்த உறுதி மொழியை மெய்ப்பிக்கவேண்டி, தீக்குழியை நிருமித்து அதனில் வளர்த்த பெரு நெருப்பினிடையே பாய்ந்து அவர்கள் யாவரும் உயிர்நீத்தனர். இச் செய்தி தமிழ் நாடெங்கும் பரவி வியப்பும் துக்கமும் விளைத்தது. தமிழ் மூவேந்தர்களும், ஒரு தலயாத்திரை போலப் பழையனூர்க்கு வந்து, அவியாதிருந்த அத்தீக்குழியைக் கண்டு வேளாளரின் சொல் திறம்பாமையை வியந்து பாடல்களாலும் பாராட்டலாயினர் * என்பது வரலாறு.

---

* "பழையனூரார் பழிதீர்த்த தீக்குழி அவியாதெரிய மூவேந்தரும் வந்துபார்த்துப் பாடியவை " என்ற தலைக்குறிப்புடன் தமிழ்நாவலர் சரிதையில் மூன்று வெண்பாக்கள் உள்ளன. அவை வருமாறு :—

" யாவரே காராளர் யாவ ரிணையாவார்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பா லமைத்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா லமைத்தார்க்கு நேர் "

— இது சேரன் பாடியது.

" எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்
தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே—கொல்லை
வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்து "

— இது சோழன் பாடியது.

" பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தார்க ளெல்லர்பிழை தீர்ந்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண வெரியகத்தே மூழ்கினர்
எல்லாரு மின்று முளர் "

— இது பாண்டியன் பாடியது.

இந்த நீலிப்பேயே நீலகேசி* என்பவள். இவள் தன் வாழ்நாளின் பிற்பகுதியில், சமண முனிவரொருவரால் உபதேசம் பெற்றுத் தன் பேய்த்தன்மை நீங்கிச் சைனத் துறவியாய்ச் சமயப் பிரசாரஞ் செய்தனள் என்ற சரிதம் **நீலகேசி** நூலில் விரித்துக் கூறப்படுகிறது. அது வருமாறு :—

பாஞ்சால நாட்டில் புண்டரவர்த்தனம் என்ற நகரையடுத்துப் பயங்கரமான மயானம் ஒன்றுண்டு. அவ் விடுகாட்டில் உள்ள காளிகோட்டத்தருகே **முனிச் சந்திரர்** என்ற சமணத்துறவி தங்கித் தவம் புரிந்து வந்தனர். அந்த நாட்டு மக்கள் பலரும் தத்தம் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவேண்டி அத் தேவி கோட்டத்தை அடைந்து, ஆடு கோழி முதலிய பிராணி களைப் பலியிட்டுச் செல்வது வழக்கம். இக் கொடுஞ் செயலைப் பொருத முனிச்சந்திரர், அவர்கட் கெல்லாம் சீவகாருணியத்தின் பெருமையை எடுத்து மொழிந்து உயிர்ப் பிராணிகளை வதையாமல் அவை போலும் மண்ணுருவங்களை வகுத்துப் பலியிடும்படி செய்தனர்.

இவ்வாறு தங்கட்குச் சீவபலி கிடையாமற் போகவே பசியாற் பெருஞ்சினங் கொண்ட பேய்க் கணங்கள், அம்முனிவரை அங்கிருந்து வெளியேற்ற

---

* நீலிகதை நாடக நூலாகவும் பலபடப் புனைந்து தமிழில் இயற்றப்பட்டதாம். '**நீலிநாடகம், நீலியக்ஷகானம்**' என்ற நூல்கள் ஏட்டுச்சுவடிகளாகத் தமிழ் நாட்டில் உள்ளவை இவ்வரலாறு கூறுவன போலும். "நீலி நாடகமும் பயில் மண்டைகள்" என்ற அருணகிரியார் திருவாக்காலும் இஃது அறியத்தகும் (திருப்புகழ் 88).

எல்லா வகை இடுக்கண்களையும் புரிந்தன. அவற்ருல் சிறிதும் பாதிக்கப்படாமல் முனிவர் தம் தவநிலையில் ஊன்றி நின்ருர். அதுகண்ட பேய்கள் யாவும் ஒருங்கு கூடி ஆலோசித்துத் தென்றேயத்துள்ள 'பழையனூர் நீலகேசி' என்ற பேயரசியைத் தருவித்துத் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிவுசெய்தன. அப் பேயிற் சில பழையனூர்வந்து அந் நீலகேசியை வேண்டியதனுல், அத் தெய்வப் பேய் உடனே ஆங்கு வந்து முனிச்சந்திரரை அவ்விடம் விட்டு ஓட்டுதற்காகப் பயங்கரச் செயல்கள் பலவும் செய்யலாயிற்று. ஆனுல், அதன் செயலெதற்கும் முனிவர் அஞ்சவில்லை. அது கண்ட பேய்த்தலைவி, அந்நாட்டு அரசகுமாரி போல வேடம் பூண்டு, சாகசச் செயல் பலவும் புரிந்து அவரைத் தன் வசப்படுத்த முயன்ருள். இச்சூழ்ச்சியும் பலியாமையால் முடிவில் தோல்வியுற்றனள் அத்தாக் கணங்கு. பின்பு, முனிவரது பேராற்றலை உணர்ந்து இறுதியாக அவரைச் சரணடைந்து தன்னை ஆட் கொண்டு அறவுரைகளைத் தனக்கு மொழிந்தருளும்படி அவரை வேண்டினுள். அவரும் அதற்கிணங்கி, பர சமயத்தவர் கொள்கைகளையும் சைனதருமங்களையும் பரக்க உபதேசித்தார். அதனுல் சமயஞானம் சிறக்கப் பெற்றவளாய்ப் புறமதத்தோருடன் தருக்கம் புரிந்து அருகசமய மேன்மையை நாடெங்கும் நிலைநாட்டிப் புகழ்பெற்று வந்தனள், நீலகேசி.

அக்காலத்தே வட தேசத்துக் காம்பீலி நகரின் வாயிலில் வழக்கம்போல் தன் நாவற்கிளையை நட்டுச் சமயவாதியரை அறைகூவி நின்ருள் குண்டலகேசி என்ற பிட்சுணி. அவளுடன் வாதம்புரிய விரும்பிய

நீலகேசி, அக்காம்பீலி நகர வாயிலில் நட்டிருந்த அந் நாவற் கிளையைக் களைந்தெறிந்து குண்டலகேசியை வாதுக்கு அழைத்தனள். பின் அவ்விருவர்க்கும் பேரவை முன்பு வாதப்போர் மூண்டது. அவ்வாதத்தில் குண்டலகேசி முழுதும் தோற்றனள். பின் சமய வாதியர் பலருடனும் தருக்கித்து அவர்களையும் வெற்றி கொண்டனள் நீலகேசி. இவ்வாறு சைன சமயப் பிரசாரஞ் செய்துவந்த அவள், முடிவில் தவம் புரிந்து வீடு பெற்றாள்.

குண்டல - நீலகேசிக் காப்பியங்களின் தலைவியரான இருவர் வரலாறுகளும் இவை. இவற்றால், சமயவாதம் தமிழ் நாட்டில் செறிந்து நிகழ்ந்த காலமொன்றில் இந் நூல்கள் இயற்றப்பட்டவை என்பது தெரியலாம். **மணிமேகலை** என்ற பிக்குணியும் இத்தகையவளே என்பது அவளது பெயர்பெற்ற காப்பியத்தால் யாவரும் அறிந்ததே. இவையாவும் கற்பித கதைகளாதலால் சரித்திர வாராய்ச்சிக்கு உரியவை அல்ல. ஆயினும், பழைமையான வாதநூல்கள் இல்லை என்ற குறையை இவை நீக்கித் தமிழ்மொழியை வளப்படுத்துவனவாயுள்ளன.

5. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

'தென்னாடு முத்துடைத்து' என்றார் தெய்வப் புலவரான ஔவையார். புறச்செல்வமான இம்முத்தோடு அகச்செல்வமான முத்தமிழும் தந்து முழுவளமும் பெற்றது அத்தென்னாடு—என்றார் கவிச்சக்கரவர்த்தியான கம்பர்†. எனவே, **முத்துநாடு** என்றும் **முத்தமிழ்நாடு** என்றும் புகழப்பெற்றது பாண்டி மண்டலம் என்பதாயிற்று. இவ்விரு பெருஞ்செல்வங்களையும் கொண்டு, சிப்பிபோன்ற ஏனைத் தமிழ்நாடுகளின் இடையில் அமைந்தமையாற் போலும் இந்நாட்டு வேந்தரைச் சேர **பாண்டிய** சோழர் என்று நடுநாயகமாக வைத்தனர் சங்ககாலத்து முன்னோர்.

பாண்டியரது பழமையும் பெருமையும் அளவிட முடியாதவை. "தென்னவன் தொல்லிசை நட்டகுடி" என்றார் சான்றோர். இவரது தொல்லிசை புராண இதிகாசங்களிலும் சிறப்பிக்கப்பட்டுளது. உலகப் பிரளயத்துக்கு முன்பு, கிருதமாலை என்ற வையை நதிக்கரையில் இருந்தவனும், அரசமுனிவனுமான **சத்தியவிரதன்** என்ற பாண்டியனே பின் வைவசுவதமனு ஆயினான் என்று கூறும் மச்சபுராணம். **இந்திரத்துய்மன்** என்ற பாண்டியன் கசேந்திரனாய் முதலை வாயிலிருந்து திருமாலால் காக்கப்பட்டவன் என்று பாகவதம் முதலியன உரைக்கின்றன. இதிகாசங்களான இராமா

---

* வானொலியிற் பேசியது.

† "எத்திறத்தினு மேழுல கும்புகழ்
முத்தும் முத்தமிழுந் தந்து முற்றுமோ"

(கம்பரா. ஆறுசெல். 53).

யண பாரதங்களும் இப்பாண்டியரைப் பற்றியும், இவர் தலைநகரமான கபாடபுரத்தைப்பற்றியும் புகழ் வனவாம். இத்தகைய பழைமை பற்றியே, "படைப் புக்காலந்தொட்டு மேம்பட்டுவருங் குடியினர்" என்று தமிழ் மூவேந்தரையும் கூறுவாராயினர் பரிமேலழகர். இவ்வாறே

"பூதம்பணி கொண்டாய்கடல் பாதந்தொழ நின்றாய்
புயலைத்தளை யிட்டாய்கயல் பொற்குன்றுபொறித்
மூதண்ட புரேசன்கதிர் முடிசிந்த எறிந்தாய் [தாய்
மூரிச்சிலை வேளாண்மை முடிக்குந்திற மரிதோ"

என்று இவரது பழஞ்சரிதங்களாகக் கூறப்பட்டவை பலவாம். இவையெல்லாம் காலங்கடந்த பாண்டியர் வரலாறுகள். இவரன்றிச் சங்ககாலத்தவராய்ச் சரித்திர உண்மைக்குரியவரான பாண்டியர் பலர் உளர். இவர்களின் முன்னோனொருவனே இப்போது நான் கூறப்புகும் வேந்தன். இவன் பெயர் பாண்டியன் **பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** என்பது. இவனை நமக்கு முதன்முதல் அறிவித்த நூல் புறநானூறு என்ற சங்க இலக்கியமாகும். அந்நூலின் தொடக்கத்திற் குறிக்கப்பட்ட பாண்டியர் வரிசையிலே முதலில் நிற்பவன் **கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி** என்பவன். இவனுக்குப்பின், **இம்முதுகுடுமியே** அடுத்தடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றான். இவ்வாறே சோழர் வரிசையில் தந்தையும் மகனுமான **இளஞ்சேட் சென்னியையும் கரிகாலனையும்** முதலிருவராக வைத்துப் புறநானூறு முறைப்படுத்தியுள்ளது. இதனை நோக்கும்போது இம்முதுகுடுமியின் தந்தையோ அடுத்த முன்னவனோ ஆனவன் மேற்கூறிய **கருங்கையொள்வாட்**

பெரும் பெயர் வழுதி என்று நாம் கருத இடமுண்டா கின்றது

இப் பாண்டிய முன்னேனது நீண்ட பெயரிலே **பல்யாகசாலே** என்பதனல் யாகங்கள் பலவற்றை இவன் புரிந்தவன் என்பதும் முதுகுடுமி என்பதனல் அந்த யாகதீக்ஷைக்குரிய மயிர் முடியை நீள வளர்த்திருந்த வன் என்பதும் அறியல்ாம். முதுகுடுமி என்பதற்கு 'நீள வளர்த்த சிகை' என்பது பொருள். பழைமை யான கிரீடத்தையுடையவன் எனினும் ஆம். இவனைப் **பல்சாலே முதுகுடுமி, பல்யாக முதுகுடுமி, குடுமிக் கோமான், குடுமி** என்றும் கூறுவர்.

தமிழ் நாட்டு மூவேந்தர்களும் நால்வகை வரு ணங்களிலே க்ஷத்திரியர் என்ற அரசர் மரபினர் ஆவர். இது, தொல்காப்பிய முதலிய முன்னூல்களால் நன் கறிந்தது. அந்தணர்க்கு அறுதொழில் கூறப்படுவது போல, அரசவருணத்தவர்க்கு ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல் என்று ஐவகைத்தொழில்களே அத்தொல்காப்பியமும் அர்த்த சாஸ்திரங்களும் கூறுகின்றன. இவற்றுள் வேட்டல் என்ற யாகச்செயலேத் தமிழ்மூவேந்தர்களும் பரம்பரை யாகவே நடத்தி வந்தவர்கள். "வேள்வியிற் கடவுள் அருத்தினே" என்று பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேரன் புகழப்படுகின்முன். 'இராச சூயம் வேட் டவன்' என்று பெருநற்கிள்ளி என்ற சோழனெருவன் விசேடிக்கப்படுகின்முன். இம்முறையில், பாண்டிய னை இவனும் பல யாகங்களேப் புரிந்ததால் பெரும் புகழ் பெற்றவன். யாகத்தால் பெற்றபுகழ் பாண்டி யர்க்குத் தொன்றுதொட்டே உள்ளது. இவ்வரசரில்

ஒருவன் அசுவமேதயாகஞ் செய்து முடித்துநின்ற போது, அகஸ்தியமுனிவர் அவனிடம் வந்து அவனை ஆசிர்வதித்ததாக மகாகவி காளிதாசரும் இரகுவமிசத்திற் கூறுகின்றார்.

இம்முதுகுடுமியின் காலத்தவராய் இவனால் பரிசு பெற்ற புலவர்கள் மூவர். இவருள் **காரிகிழார்** என்பவர் ஒரு பாட்டும், **நெட்டிமையார்** என்பவர் மூன்றும், **நெடும்பல்லியத்தனார்** என்பவர் ஒன்றும் ஆக மூவரும் இவனுக்கு அணிந்த பஞ்சரத்தினங்கள் புறநானூற்றில் ஒளிர்கின்றன. இப்புலவர்கள் வாக்கிலிருந்து, தன் காலத்தில் ஒப்புயர்வற்ற வீரனும் வள்ளலுமாக விளங்கியவன் இவ்வேந்தன் என்பது தெரியலாகும். இவற்றோடு உறுதிப்பொருள்களை உயர்ந்த முறையிற் கைப்பற்றியவனாகவும், தெய்வபத்தியிலும் வைதிகவழிபாட்டிலும் சிறந்தவனாகவும், அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் உடையவனாகவும் வாழ்ந்தான்.

உன்னோடு எதிர்த்துவந்து தோற்றுப்போய் வசைபெற்ற பகையரசர் பலரோ? யூபஸ்தம்பங்களை நட்டு, பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கும்படி நீ முடித்த யாகங்கள் பலவோ? இவற்றுள் எவை பலவாயின?" என்று வினவுகின்றார் ஒரு புலவர். இதனால் அறக்கள வேள்விகளும் மறக்கள வேள்விகளும் புரிந்து புகழ்பெற்றவன் இம் முதுகுடுமி என்பதும், '**பல்யாகசாலை**' என்ற இவனது அடைமொழியின் காரணமும் நன்கு விளங்கும். இவ்வேந்தனது அறச் செயல்கள் எவ்வளவு கருணையும் இன்பமும் கலந்திருந்தனவோ, அவ்வளவாகக் கொடுமையும் துன்பமும் கொண்டிருந்தன இவன் மறச்செயல்கள்.

'தேர்குழித்த தெருக்களிலே, வெள்ளிய வாயையுடைய கழுதைநிரைகளைப் பூட்டியுழுது பாழ்படுத்தினை: பகைவரது சீரிய அரண்களை; அவரது புகழ்மிக்க விளைவயல்களைக் குதிரைகளின் குளம்புகள் மிதித்து உழக்கும்படி உன் தேர்ப்படைகளை ஓட்டி அழித்தனை: அவரது காவலமைந்த ஊருணிகளை உன் களிறுகளைக்கொண்டு கலக்கிச் சேறுக்கினை' என்று இவ்வாறு பாடுகின்றுர் **நெட்டிமையார்.** பகையரண்களை அழித்துக் கழுதையேர்கொண்டு உழுது வெள்ளைவரகும் கொள்ளும் வித்திப் பாழ்படுத்துவது பழைய போர் முறைகளில் ஒன்று. 2100-ஆண்டுகட்கு முன் வாழ்ந்த கலிங்க வேந்தனுன **காரவேலனும்** இச்செயல் புரிந்தவன் என்று அவனது **அத்திகும்ப சாஸனம்** கூறும். இக்காலத்தில் நிகழும் ப்கைவரது போர்க் கொடுமைகளை நினைக்கும்போது மேற்கூறிய செயல்கள் அதிசயம் தரக்கூடியனவாகா. வன்கண்மைகளை இவ்வாறு கையாள நேர்ந்த இடத்திலும் அறநெறிகளை அன்போடு கடைப்பிடித்தவன் இம்முதுகுடுமி. பகைக்கோட்டைகளை முற்றுகையிடு முன்பு,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்"

என்று எளியோரைக் காக்க எச்சரிக்கை செய்துவந்தவன் இவனென்றும், போரிலே பகைவரிடமிருந்து கவர்ந்த பொன்களையும் புரவிகளிறுகளையும், இயலிசைகளாற் போர்க்களம்பாடும் புலவர்க்கும் பாணர்களுக்

கும் வாரி வழங்கினவன் என்றும் வருணித்துப் பாடினர் அந் நெட்டிமையார். மற்றொருவரான **காரிகிழார்** என்ற புலவர்,

> "சிவபிரான் திருக்கோயிலின் முன்பு, அதனை வலம் வருவதற்கு, உன் வெண்கொற்றக்குடை தாழ்வதாக; நான்மறையாளர் உன்னை ஆசீர்வதிக்க எடுத்த கைகளின் முன்பே உன் சிரம் வணங்குவதாக; பகைவர் நாடுகளைச் சுட்டெரிப்பதில் உண்டான பல மணங் கலந்த புகையால், உன் முடிமாலை வாடுவதாக; உன் தேவியரின் ஒளி பொருந்திய முகங்களின் முன்பு நீ கொண்ட சீற்றம் ஆறுவதாக"

என்று கூறுவது இன்பமூட்டுகின்றது. இதனில் வீட்டு நெறியும் அறம் பொருள் இன்ப நெறிகளும் ஆகப் புருஷார்த்தங்கள் நான்கும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள அழகைக் காணலாம். இப்பாண்டியன் முக்கட் செல்வனை சிவபிரானிடம் பத்திமிக்கவன் என்பதும் இப்புலவர் வாக்கால் தெரிகின்றது.

பல்லாண்டுகட்கு முன்பு டாக்டர்—ஐயரவர்களால் புறநானூறு முதன்முதல் வெளிவந்தபோது, அதனிற் கண்ட "சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ் சேரல் இரும்பொறை" என்பதுபோன்ற நீண்ட அரசர் பெயர்களும் மக்கள்பெயர்களும் நமக்கு அதிசயமாகவே தோற்றின. இப்படியும் பெயர்வழக்குண்டோ, உண்மையில் இவர்கள் இருந்தவர்தாமா என்ற ஐயங்களும் அப்போது எழுந்தன. இந்த ஐயங்கள் யாவையும் நீக்கத்தக்க கருவியொன்று அரசாங்கத்துச் சாஸன இலாகாவிலிருந்து சில ஆண்டுகட்குமுன் கிடைத்தது.

இதுவே, 'வேள்விகுடிச் சாஸனம்' என்பது. வட்டெழுத்தில், வடமொழியிலும் தென்மொழியிலும் அமைந்த இத்தாமிரப் பட்டயம், பண்டைத் தமிழ் மூவேந்தர் சாஸனங்களுள்ளே பழைமை வாய்ந்ததாகும். கி. பி. 767-ல் பட்டம் பெற்றவனாகக் கருதப்படும் **பராந்தகன்-நெடுஞ்சடையன்** என்ற பாண்டியனால் அமைக்கப்பட்ட இச்சாஸனத்தின் தமிழ்ப் பகுதியானது, **ஏனாதி சாத்தஞ் சாத்தன்** என்பவரால் சொற்சீரடியிற் பாடப்பட்டுள்ளது. இது கூறுஞ் செய்தியாவது,

'கொல்யானை பலவோட்டிக்
கூடாமன்னர் குழாந்தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப்
பெருவழுதியெனும் பாண்டியாதிராஜன்'

என்பான், **கொற்கைகிழான் காமக்காணி நற்கொற்றன்** என்ற பிராமணன் நடத்திவந்த வேள்வியை முடித்துவைக்க வேண்டி, மதுரைப்பக்கத்துப் பாகனூர்க்கூற்றத்துள்ள **வேள்விகுடி** என்ற கிராமத்தை வேள்விச்சாலை முன்பு நின்றுகொண்டு அந்தணாளர் யாவரும் அறியக் கூறி நீர்வார்த்துத் தானம் பண்ணினான், அது அவன் வழியினரால் நெடுங்காலமாக அனுபவிக்கப்பட்டு வந்தது. பின்பு களப்பிரன் என்ற கொடுங்கோலரசன் ஒருவன் படையெடுத்துவந்து பாண்டிநாட்டைக் கைப்பற்றிய காலத்தில், அந்தத் தானகிராமம் அவனால் பறித்துக் கொள்ளப்பட்டது. பின், **கடுங்கோன்** என்ற பெருவீரனான பாண்டியன் தோன்றினான். அவன் **அக்களப்பிரனை** வென்றோட்டி, இழந்த நாட்டை மீண்டும் பெற்றனன். அவனிலிருந்து ஐந்தாந்தலைமுறையில் உதித்தவன் **பராந்தகன் நெடுஞ்சடையன்** என்ற பாண்டியன்.

இவன் ஆட்சி தொடங்கிய மூன்றும் ஆண்டிலே, வேள்விகுடியை ஆதித்தானம் பெற்றவனது வமிசத்தவனான **காமக்காணி நற்சிங்கன்** என்பான் மதுரை மாநகர் வந்து அவ்வரசன் திருமுன்பு முறையிட்டவனாய், முற்காலத்தில் **முதுகுடுமியால்** தன் முன்னோன் வேள்விகுடித்தானம் பெற்றதையும், பின் கொடுங்கோலரசன் ஆட்சியில் அதனைத் தன்வமிசத்தவர் இழக்க நேர்ந்ததையும் கூறி, திரும்பத் தனக்கு அதனை அளிக்கும்படி பிரலாபித்துக் கேட்கலாயினன். இது கேட்ட வேந்தன், நன்று நன்றென முறுவலித்தவனாய்ப் "பழைமையாக அக்கிராமம் உனக்குரியதே என்பதைப் பிரமாணபூர்வமாகக் காட்டுக" என்று கூறினான். அதற்கு உடன்பட்ட அம்மறையவன், தனக்குள்ள உரிமையை ஆதாரங்களுடன் அரசற்கு விளக்கிய வளவில், உண்மையை யறிந்து மகிழ்ந்த பாண்டியன், அந்த **நற்சிங்கனுக்கு** வேள்விகுடியை நீரோட்டித் தானமளித்தான் என்பதே அவ்வரலாறு. இவ்வுயர்ந்த சாஸனம் **நெடுஞ்சடையனது** புகழ்களையும் அவனுக்கு முன்பு ஆண்ட அரசர் பெருமைகளையும் மற்றும் பல சரித்திரநிகழ்ச்சிகளையும் விளக்குகின்றது. இவை யாவும், தமிழ்நாட்டிற் கிடைத்துள்ள வேறு பழைய சாஸனங்களுடன் பெரிதும் ஒற்றுமைகொண்டு உண்மை வரலாறுகள் ஆகின்றன. முதுகுடுமியின் வீரம் நியாயம் தியாகங்களைப் புறநானூற்றோடு ஒத்து இச்சாஸனமும் கூறுதல் அறியத்தக்கது. யாகங்கள் பலவற்றைத் தான் புரிந்தது மட்டுமன்றித் தக்கோரைக்கொண்டு புரிவித்தும் வந்தவன் இவன் என்பது **இவ்வேள்விகுடித்** தானச் செய்தியிலிருந்து விளக்கமாகும்.

இம் முதுகுடுமியை அடுத்துப் புறநானூறு முறைப் படுத்திக் கூறும் பாண்டியன், **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்பான். எனவே, இச்செழியன் அம் முதுகுடுமியை அடுத்துப் பிரபலனாக ஆண்டவன் என்று கருதக்கூடும். இவனை மதுரைக்காஞ்சியாற் பாடிய மாங்குடி மருதனார்,

> "பல்சாலை முதுகுடுமியின்
> நல்வேள்வித் துறைபோகிய
> தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட்டுண்ட

அரசன்" என்று புகழ்கின்றார். இதனால், இச்செழியனுக்கும் முதுகுடுமிக்கும் பிற்காலத்து இருந்த தொடர்பும், இவன் வேள்வித்துறையிற் பேர்பெற்றிருந்த செய்தியும் வெளியாகின்றன.

வேள்விகுடித் தானபட்டயத்திலிருந்து, முதுகுடுமியின் காலமும் ஒருபடியாக அறிய இடமுண்டு. இவனால் அளிக்கப்பட்ட தானகிராமத்தை, 8-ஆம் நூற்றாண்டில் இவன் வமிசத்துப் பாண்டியன் புதுப்பித் தளித்தான் என்பதனால், அவ்விருவர்க்கு மிருந்த இடைக்காலத்தை எவ்வளவு அதிகமாகக் கூட்டினாலும், 300, 400 ஆண்டுகட்கும் மேற்போகாது எனலாம். எனவே, நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டை இம் முதுகுடுமிக் குரியதாகக் கருதல் தகும். இப்பாண்டியனை மேற்கூறிய நெட்டிமையார்—

> "எங்கோ வாழிய குடுமி தங்கோ
> முந்நீர் விழவி னெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

என்று வாழ்த்துகின்றார். இதனால் பஃறுளி என்ற நதி இவன் காலத்தில் இருந்ததென்றும், பழைய பாண்டிய னொருவனால் அஃது உண்டாக்கப்பட்டது என்றும் தெரியவருகின்றன. இந்த நதி, குமரியாற்றோடு கடல்கொள்ளப்பட்டதென்று கூறுவர் இளங்கோவடிகள். ஆனால், தென்பாண்டிக்கோடியில் உள்ள **ஆய்** நாட்டில் **பறளியாறு** என்ற நதியொன்று உண்டு. இது, திருவாங்கூர்ச் சாஸனத்தாலும் இப்போதை வழக்காலும் அறிந்தது. பறளி என்பது பஃறுளி என்பதன் திரிபே. பலதுளி பெருவெள்ளமாய் ஓடும் காட்டாறுகள் சிலவும் இப்பெயர் பெற்றுள்ளன. தென் திருவாங்கூர்ச் சீமையில் உள்ள இப்பறளி என்ற பஃறுளியே நெட்டிமையார் கூறியதாயின், பழைய கடல்கோளால் இந்த நதியின் கடலோரத்து முனைப் பகுதியே அழிபட்டதாக வேண்டும். இவ்வாறு, சரித்திரப் பிரசித்தனான, சங்ககாலத்துப் பாண்டிய மன்னன் ஒருவனது வரலாறுகள் சுருக்கமாகத் தெரிய வருகின்றன.

---

6. சேரன் - செங்குட்டுவன்*

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்பர் தொல்காப்பியனார். அவர் கூறியபடி, சேர சோழ பாண்டியர் என்ற மூவரும் தொன்றுதொட்டுத் தென்னாடுகளை ஆண்டுவந்த தமிழ் வேந்தர்கள் என்பதும், தமிழகத்தின் பழைய பெருமையைச் சிறப்பித்து வந்தவர்களென்பதும் யாவரும் நன்கறிந்தவை. அவருள் முதலவராகிய சேரவரசர் செய்திகள் பலவும் சங்கநூல்களால் நன்கு விளங்குகின்றன. இவ்வமிசத்தில் உதித்த கடைச்சங்க காலத்து வேந்தர்களிலே, **சேரன்-செங்குட்டுவன்** என்பவன் அறிவுதிரு வாற்றல்களாற் பெரும் புகழ் பூண்டு விளங்கியவன். இது **பதிற்றுப்பத்து சிலப்பதிகார** முதலிய நூல்களால் அறியப்படும். இந்நூல்களுள் **பதிற்றுப்பத்து**—அவ்வரசன் காலத்துப் புலவர் பெருமானாகிய பரணராலும், **சிலப்பதிகாரம்**—அச்சேரன் இளவலாகிய இளங்கோவடிகளாலும் இயற்றப்பட்டவை. ஆகவே, அவ்விரண்டிலுங் கூறப்படும் செய்திகள் உண்மையுடையனவாக மதிக்கத் தடையில்லை; ஆதலால், அச்செய்திகளை மற்றச் சாதனங்களுடன் கூட்டி, செங்குட்டுவனது வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாக இங்கு எழுதுகின்றேன்.

சேர வமிசம்:—சேர வமிசம் மிகப் புராதனமானதென்பது, இராமாயண பாரதங்களிலும் அதனைப் பற்றிப் பேசப்படுதலால் தெரிகிறது. கேரள தேசத்தையும் அதன் துறைமுக நகரான முசிரியையும் தம்

---

* இக்கட்டுரை, யான் எழுதிய 'சேரன் - செங்குட்டுவன்' என்ற நூலின் சுருக்கமாகும், 'விவேகபோதினி' என்ற பத்திரிகையில், 35-ஆண்டுகட்குமுன் இது வெளிவந்தது.

இதிகாசத்திற் குறிப்படுவர் வான்மீகிமுனிவர். இவ் வமிசத்துதித்த உதியஞ் சேரல் என்பவன் மகாபாரத யுத்தத்தில் பாண்டவ சேனைக்கு உணவளிக்குஞ்செயலை மேற்கொண்டானென்று பழைய நூல்களிற் புகழப்படு கின்முன். பிற்காலத்தில், அஃதாவது பரதகண்ட முழுவதும் ஆட்சி புரிந்த அசோகசக்கரவர்த்தி நாளி லும் இச்சேரர் தென்னுட்டுச் சுதந்தர அரசருள் ஒருவராகவே விளங்கினர். இவ்வமிசத்தவ ரெல்லாம் வீரம் நியாயம் தியாகம் முதலியவற்றுல் ஒப்புயர்வற் றிருந்தவர்கள்.

சுற்றத்தார் :—வடநாடெங்கும் தன் வெற்றிப் புக ழைப் பரப்பியவனும், கடற்போர் புரிந்து பகைவரது கடம்ப மரத்தை வெட்டிய வீரனுமாகிய **நெடுஞ் சேர லாதன்** என்பவனுக்கு **நற்சோணை** என்ற சோழன்மக ளிடம் உதித்தவன் நம் சேரர் பெருமான், செங்குட்டு வன் என்ற இவன் பெயர்க்கு, செம்மை நிறம் வாய்ந்த குட்டுவன் என்பது பொருள். [குட்டுவன்—குட்ட நாடுடையோன்.] இவன் சிறிய தந்தை, வீரனும் ஞானியுமாக விளங்கிய **பல்யானைச் செல்கெழு குட்டுவன்** என்பான். செங்குட்டுவனுக்கு மாற்றுந்தாய்ச் சகோ தரராய் அவன் காலத்தே சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தவர்கள், **நார்முடிச் சேரலும்**, அவன் தம்பி **ஆடு கோட்பாட்டுச் சேரலாதனுமாவர்**. நம் சேரனுக்குத் தாயத்தாரான வேறு அரசர் சிலரும் மலைநாட்டின் பகுதிகளை ஆட்சி புரிந்துவந்தனர். இச்செங்குட்டுவன் மனைவி **இளங்கோ வேண்மாள்** என்றும், மகன் **குட்டுவஞ் சேரல்** என்றும் கூறப்பட்டுள்ளன. நம் சேரனுக்குத் தாயுடன் பிறந்த அம்மான் **நெடுங்கிள்ளியும்**, அம்மான் சேய் **பெருநற்கிள்ளியும்** ஆகத் தெரிகின்றனர்.

போர்ச் செயல்கள் :—செங்குட்டுவன் தன் இளமையிலும் முதுமையிலும் பெரு வெற்றியுடன் நடத்திய போர்கள் சிறப்பாக ஆறு என்று ஒருவாறு கணக்கிடலாம். அவையாவன :—

1. தன் தாயாகிய நற்சோணையைக் கங்கையில் நீராட்டிவரும் பொருட்டுச் சென்றகாலத்தில் ஆங்கெதிர்த்த ஆரியவரசர் பலருடன் நடத்திய போர்.

2. கொங்கர் செங்களத்து நடத்திய போர்.

3. கப்பல்களைச் செலுத்திக் கடலில் நடத்திய பெரும் போர்.

4. மோகூர்த்தலைவனை. பழையன் மாறனுடன் நடத்திய கொடும் போர்.

5. தன் மைத்துனச் சோழனுக்கு விரோதமாகக் கிளம்பிய சோழ வமிசத்தவர் ஒன்பதின்மரை நேரிவாயில் என்ற களத்தில் ஒருபகலிலே அழித்து வெற்றிகொண்ட போர்.

6. உத்தர கோசலத்துச் சென்று, குயிலாலுவத்தில் ஆரியவரசராகிய கனக விசயர் முதலியோரை வெற்றி கண்ட போர்.

இவற்றின் விரிந்த வரலாறுகள் யாவும் சங்க நூல்கள் நோக்கி அறியத்தக்கன.

இரண்டு சரித நிகழ்ச்சிகள் :—செங்குட்டுவன் காலத்தில், தமிழ்நாட்டார் என்றும் மறக்கமுடியாத இரண்டு சரித்திர விசேடங்கள் நிகழலாயின. அவை, கோவலன் கண்ணகிகளைப்பற்றிய செய்தியும், மணிமேகலையைப் பற்றிய செய்தியுமாகும். சுருக்கமாக இந்நிகழ்ச்சிகளை இங்கே கூறுவேன்.

கோவலன் கண்ணகி வரலாறு :—காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங்குடி வாணிகனொருவன் மகனான **கோவலன்** என்பான் தன் கற்புடை மனைவியான **கண்ணகியுடன்** இல்லறம் நடத்தி வருங்கால், **மாதவி** என்ற நாடகக் கணிகையைக் காதலித்து அவள் வசமாயினன். அதனால் தன் கைப்பொருள்களையெல்லாம் இழந்து, பின் ஊழ்வசத்தால் அவ்விடமும் வெறுப்புற்று, வாணிகஞ்செய்து பொருளீட்டவேண்டித் தன் மனைவி கண்ணகியுடன் மதுரை வந்து சேர்ந்தான். சேர்ந்தவன், தன் மனைவியின் விலையுயர்ந்த காற்சிலம்பு ஒன்றை விற்றுவரக் கடைத்தெருவிற் சென்று அதனை அரண்மனைப் பொற்கொல்லன் ஒருவனிடம் காட்டினன். அவன், தான் முன்பு கவர்ந்த இராசமாதேவியின் சிலம்புபோல அஃது இருந்ததனால், தன்மேலிருந்த ஐயத்தை இப்புதியவன்மேல் ஏறிட்டுத் தீர்த்துக்கொள்ளக் கருதி, அச்சிலம்பைப்பற்றி அரசனுக்குத் தெரிவித்து வருவதாகக் கோவலனுக்குக் கூறி அவனை ஓரிடத்திருத்தி, அரசனிடஞ்சென்று "தேவியின் சிலம்பைத் திருடியவனைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறேன்" என்றான். அரசன் இவன் சொல்லைக் கேட்டதும் ஆராய்ச்சி செய்யாமலே, "ஆயின், அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக" என்று காவலாளர்களுக்கு ஆணையிட்டனன். இவ்வாணை பெற்ற காவலாளருடன் அக்கொல்லன் சென்று கோவலனைக் காட்டவும், அக்கொலையாளருள் ஒருவன் ஆராயாமலே தன் கைவாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினன். இச்செய்தி அவன் மனைவி கண்ணகிக்கு எட்டியதும், அவள் மனங்கலங்கிப் பெருஞ்சினங்கொண்

டவளாய், பாண்டியன்நேரிற்சென்று அவன்புரிந்த கொடுங்கோன்மையைத் தன் மற்றொரு சிலம்பைக் கொண்டு விளக்கிக் காட்டினள். அதனால் உண்மையை உணர்ந்த அரசன், தான்செய்த பெரிய அநீதியை யறிந்து சோகித்து உயிரைவிட்டான். அவன் தேவியும் கணவன் இறந்ததறிந்ததும் தன் உயிர் துறந்தனள். பின்பு, கண்ணகி தன் சினந்தணியாதவளாய்த் தன் இடது கொங்கையைத் திருகி எறிந்து மதுரையை எரியுண்ணும்படி செய்துவிட்டு, வைகைக் கரைவழியே சென்று, சேரநாட்டுள்ள செங்குன்றூர் என்னும் மலையின் மேல் ஒரு வேங்கை மரத்தினடியிற் சோர்ந்து நின்றாள். அப்போது, தேவர்கள் கண்ணகியின் முன் வந்து, அவள் காதற்கணவனை அவளுக்குக் காட்டி, அப்பத்தினியையும் உடனழைத்துக்கொண்டு விண்ணுலகஞ் சென்றனர் என்பதாம்.

மணிமேகலை வரலாறு :—இவள், கோவலனுக்கு அவன் கணிகையாகிய மாதவியிடம் பிறந்தவள். கோவலன் தன் காரணமாகப் பிரிந்து மதுரையிற் கொலையுண்ட செய்தி கேட்டதுமுதல், மாதவி தன் மகள் மணிமேகலையுடன் பௌத்தசங்கத்தில் சேர்ந்து பிக்ஷுணியாயினள். அக்காலத்தே, மணிமேகலை தெய்வங்களின் அருள் பெற்றுப் பல பெரிய சித்திகளடைந்து அற்புதங்களை நிகழ்த்தியதும், பல சமய வாதிகளோடு அளவளாவி, முடிவில் பௌத்த தர்மத்தைக் கைக்கொண்டு காஞ்சியில் தவம் புரிந்ததும் இவள் சரித்திரச் சுருக்கமாகும்.

செங்குட்டுவனது வடநாட்டியாத்திரை :—மேற்கூறியவாறு கண்ணகி செங்குன்றில் விண்ணடைய,

அதனை நேரிற்கண்ட மலைவேடுவர் பலர் திரண்டு சென்று, அச்சமயம் பேரியாற்றங்கரையிற் பாடியிறங்கியிருந்த சேரன் - செங்குட்டுவனிடம் தாங்கள் கண்ட அதிசயத்தை விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். அப்போது அரசனுடன் இருந்த மதுரைப் புலவராகிய சாத்தனார், தம்மூரில் தாம் நேரில் அறிந்த கோவலன் கொலைவரலாற்றையும் கண்ணகி செய்கைகளையுங் கூறி, "அவளே இச் சேரநாடடைந்த நங்கை" என்பதை விளக்கினார். இவ்வாறு கற்பின் மாட்சியைக் காட்டித் தன்னாட்டிற் புக்க அப்பத்தினிக்குக் கோயிலெடுத்துக் கௌரவிக்க விரும்பி, கண்ணகியின் பிரதிமைக்கு இமயத்திலிருந்து சிலையெடுத்துக் கங்கை நீராட்டி வரவும், அதனுடன் தமிழரசரை இகழ்ந்து நின்ற ஆரியவரசராகிய கனகவிசயரை அடக்கி வரவும் முடிவுசெய்து, உடனே தன் இராசதானியாகிய வஞ்சிமா நகரத்திற்குச் செங்குட்டுவன் புறப்பட்டான். அவன் நகரடைந்ததும் வடதேச யாத்திரைக்கு வேண்டியவையெல்லாம் சித்தம் செய்யப்பட்டன. மறுநாட்காலை செங்குட்டுவன் பிரயாணமாகி நீலகிரியையடைந்து அங்கு வந்து சேர்ந்த தன் பெருஞ்சேனைகளுடனும் பரிவாரங்களுடனும் வடயாத்திரையைத் தொடர்ந்து நடத்தி, முடிவில் கங்கையின் தென்கரையை யடைந்தான். அப்போது செங்குட்டுவன் நட்பினரும் வடவேந்தருமாகிய நூற்றுவர் கன்னர் என்பவரால் கங்கைக் கரையைச் சேரர் சேனைகள் கடப்பதற்கு வேண்டிய மரக்கலங்கள் சித்தம் செய்யப்பட்டிருந்தன. அவற்றினுதவியால் சேரன் சேனைகளுடன் அப்பேராற்றைக் கடந்து உத்தரகோசலத்தை நெருங்கினன். இவ்வாறு தமிழ் வேந்தனொருவன் பெருஞ்சேனையுடன் பகைமை

பூண்டு தம் நாட்டை அணுகினன் என்ற செய்தி தெரிந்ததும், அந்நாடாளும் கனகர், விசயர் முதலியோர் போர்க்கோலங்கொண்டு எதிர்த்தனர். அப்போது தமிழச் சேனைக்கும் ஆரியப் படைக்கும் பெரும் போர் மூண்டது. அப்போரில், சேரன்படை ஆரியப் படையை முற்றவும் முறியடித்து வெற்றிபெற்றது. பகையரசரான கனக விசயர் இருவரும் அக்களத்திற் பிடிக்கவும் பட்டார்கள். இங்ஙனம் வெற்றி பெற்றதும் செங்குட்டுவன், தன் சேனைத்தலைவனை வில்லவன் கோதையால் இமயத்திற் பத்தினிக்குச் சிலை யெடுப்பித்துக்கொண்டு திரும்பி, கங்கையின் தென்கரையில் நட்பரசரான கன்னரால் அமைக்கப்பட்ட பாடியி லிறங்கிப் பத்தினிச் சிலையைக் கங்கை நீராட்டித் தூய்மை செய்வித்தான். அங்கே இறந்த வீரருடைய மைந்தர்களையும் இறவாத வீரர்களையும் " தன்னிடத்து வருக" என்றழைத்து, அவர்கட்கெல்லாம் பொன்னாலாகிய வாகைப்பூக்களை அளித்துச் சிறப்பித்து ஆதரவும் காட்டினன்.

இங்ஙனம் செங்குட்டுவன் பாடியிலமர்ந்திருந்த காலையில் சோணாட்டனும் கோவலன் நட்பினனும் கங்காயாத்திரை செய்து கொண்டு வருபவனுமான மாடலன் என்னும் மறையவன் சேரர் பெருமானை அப்பாடியிற் கண்டு களித்துத் தன் வரலாறுகளையும் தமிழ் நாட்டின் விசேடங்களையும் பற்றிக் கூறினன். அரசன் அவற்றைக்கேட்டு அகமகிழ்ந்து அவ்வந்தணனைத் தக்கபடி வெகுமானித்தான். பின்னர்ச் செங்குட்டுவன் தன்னால் போரிற் பிடிக்கப்பட்ட ஆரிய வேந்தரைச் சோழ பாண்டியருக்குக் காட்டிவருப்படி தூதுவருடன் அவரை முற்படவே அனுப்பிவிட்டு, சில நாட்களிலே

தானும் தன் பெரும்பரிவாரங்களுடன் நெடும் பிரயாணம் செய்து செயசீலனாய்த் தன் தலைநகராகிய வஞ்சிமாநகர் அடைந்தனன். இங்ஙனம் செங்குட்டுவன் தன்னகரில் வீற்றிருந்த காலத்தில், கனக விசயரைச் சோழ பாண்டியருக்குக் காட்டி மீண்டுவந்த தூதுவர், "போரிற் புறங்கொடுத் தோடிய பகையரசரை இங்ஙனம் நடத்துதல் தகாது" என்று அத்தமிழ் மன்னர் இகழ்ந்துகூறிய வார்த்தைகளைச் செப்பிநிற்க, அது கேட்ட சேரனுக்கு அவர்கள்மேல் சினம் பெருகியது. அதனை, பக்கத்திருந்த மாடலமறையோன் அறிந்து, இனிமையும் பெருமையுமுடைய மொழிகளைச் சேரனுக்கு எடுத்துக்கூறி அவன் சீற்றத்தைச் சமனஞ் செய்தனன். பின்னர், அம்மறையவனது சொற்படியே பத்தினியைப் பிரதிட்டிப்பதற்கு வேண்டிய யாகசாந்திகளைத் தொடங்கிக் கடவுள் மங்கலமாகிய அத்தெய்வப் பிரதிட்டையையும் பெருஞ் சிறப்புடன் நிறைவேற்றினன். இவ்விசேடத்திற்கு இலங்கை யரசனாகிய கயவாகு முதலிய வேற்றரசர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

இவ்வாறு, செங்குட்டுவன் தான் மேற்கொண்ட சங்கற்பங்களை நிறைவேற்றி விளங்கிய காலையில், கண்ணகியின் உற்றுருறவினர் சிலர் அப்பத்தினிக் கோயிலையடைந்து செங்குட்டுவனுக்குத் தங்கள் வரலாறுகளைக் கூறினர். பத்தினிதேவி ஆங்கு வந்திருந்த தன் பார்ப்பனத் தோழியான தேவந்தியின்மேல் ஆவேசித்து, பல அற்புதச் செய்திகளைச் செங்குட்டுவனுக்குக் கூறியதோடு, தன் கடவுட் கோலத்தையும் காட்டி அவ்வேந்தனையும் அவன் தம்பி இளங்கோவடிகளையும் வாழ்த்தி அனுக்கிரகித்தாள். இங்ஙனம், செங்குட்டுவன்

பத்தினிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பித்தவாறே, மற்றத் தமிழரசரும் இலங்கைக் கயவாகு முதலிய வேற்றரசரும் தங்கள் நகரங்களிலும் அப்பத்தினிக்குக் கோட்டமெடுத்துத் திருவிழா நடத்திச் சிறப்பிப்பாராயினர். இவையே சுருக்க வரலாறு. இச்சரித முழுதும் சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தே இளங்கோவடிகளால் விரிவாகவும் அழகாகவும் பாடப்பெற்றுள்ளது.

சமயம் :—சேரன் செங்குட்டுவன் கொண்டொழுகிய மதம் வைதிக சமயமேயாகும். அச்சமயத்துள்ளும் சைவராபிமான மிக்கவன் இவன் என்று கூறுதல் பொருந்தும். ஆயினும் மதாந்தரங்களில் வெறுப்பற்றவனாய் யாவரையும் ஒப்பநாடி ஆட்சிபுரிந்தான். இவன் காலத்தில் பலசமயத்தாரும் கொள்கை வேறுபாடுடையராயினும் உறவு முறையிலும் நீதிமுறையிலும் ஒற்றுமை பூண்டு விளங்கினரென்று தெரிகின்றது.

சமகாலத்தரசர் :—இவனது ஆட்சிக் காலத்தே சோணாட்டில் உறையூரென்ற இராசதானியிலிருந்து ஆண்ட சோழர் நெடுங்கிள்ளியும், பெருநற்கிள்ளியுமாகத் தெரிகின்றனர். இவ்விருவரும் செங்குட்டுவனுக்கு முறையே தாயுடன் பிறந்த அம்மானும், அம்மான் சேயும் ஆவர். இவ்வாறே காவிரிப்பூம்பட்டினமென்ற மற்றொரு தலைநகரிலிருந்து ஆண்ட சோழர் கிள்ளிவளவனும் நலங்கிள்ளியுமாதல் வேண்டும். நம் சேரன் காலத்துப் பாண்டியவரசர், கோவலனைக் கொல்வித்த ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும், அவன் தம்பி வெற்றிவேற்செழியன் என்ற நன்மாறனும் ஆவர். அந்நியவரசராக இவனுளில் விளங்கியவர்—இலங்கைக் கயவாகு, கொங்கிளங்கோசர், அறுகை, நூற்றுவர் கன்னர் முதலியோர்.

இருபெரும் புலவர்:—செங்குட்டுவன் காலத்து விளங்கிய புலவர் பலராயினும், இவனால் நேரில் அபிமானிக்கப்பட்ட நல்லிசைப் புலவர் **பரணரும் சாத்தனாரும்** ஆவர். முன்னவரான பரணர் பதிற்றுப்பத்துள் 5-ம் பத்தால் இவனைப் புகழ்ந்துபாடிப் பெரிதும் சம்மானிக்கப் பெற்றார். பின்னவரான சாத்தனார் மணிமேகலை என்ற நூலியற்றியவர் என்பதும், செங்குட்டுவன் அவையை அலங்கரித்தவர் என்பதும், கண்ணகி வரலாற்றைப் பற்றித் தம்மூரில் தாம் நேரிலறிந்தவாறு செங்குட்டுவனுக்கும் அவன் தம்பி இளங்கோவடிகளுக்கும் கூறியவர் என்பதும், சிலப்பதிகாரத்தைப் பின்னவரான அடிகள் பாடக் காரணமாக இருந்தவர் என்பதும் பலரும் அறிந்தவை. செங்குட்டுவன் வரலாற்றையும் தம் நூலுள் இவர் சுருக்கமாகப் பாடியுள்ளார். கோவலனது காதற்கணிகை மகளான மணிமேகலையின் சரிதம் இவரது சீரிய காவியத்தால் நன்கறியப்படும்.

நாடும் நகரமும்:—செங்குட்டுவன் ஆண்ட சேரநாடு—கோயம்புத்தூர், சேலம், நீலகிரி ஜில்லாக்களும் மைசூரின் சில பகுதிகளும், கடன்மலைநாடுமாம். இவன் தலை நகரமாகக் கூறப்படும் வஞ்சி என்பது, கொங்கு நாட்டுள்ள கருவூரே யாகும். இக்கொள்கைக் குரிய இலக்கியப் பிரமாணங்களையும் சாஸன முதலிய பிற ஆதரவுகளையும் இங்கு விரிப்பிற்பெருகும். விரிவாக யானெழுதிய நூல் கொண்டு அறியத்தகும்.

அரசியல்:—செங்குட்டுவன் தன் காலத்தில் இணையற்று விளங்கிய பெரு வீரனாவன். இவனுக்குத் தரைப் படையோடு கடற்படையும் மிகுந்திருந்தது. இவன் ஒரு காலத்துக் கடற்போர் ஒன்று நடத்தி வெற்றி

பெற்றவனாதலால், "**கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்**" என்று விசேடித்து வழங்கப்பட்டான். இவன் குடிகளெல்லாம் இவன்பால் மதிப்பும் அன்பும் வைத்திருந்தனர். இவனது அரசியலில் தலைமை வகித்தோர் —**அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர்** என்பவர்கள். இவனுடைய தலைமைச் சேனாபதியாக விளங்கியவன் **வில்லவன் கோதை** என்றும், அரசிறை மந்திரியாக இருந்தவன் **அழும்பில்வேள்** என்றும் தெரிகின்றன. இவருள், முன்னவனே வடநாட்டுப்போரில் சேனைகளை நடத்தி வெற்றி பெற்றவன். செங்குட்டுவனது அரசியல் முத்திரை, **வில், கயல், புலி** என்ற மூன்றுஞ் சேர்ந்ததாம். இதனால், இவன் அக்காலத்துத் தமிழ் அரசருள் தலைமை வகித்திருந்தமை பெறப்படும். மற்றும் இவன் அரசியல் முறைகளை யானெழுதிய விரிந்த நூல்கொண்டு அறியலாகும்.

குணாதிசயங்கள் :—செங்குட்டுவன், இந்நில வுலகில் 55 ஆண்டு வீற்றிருந்தான். இவனது 47-ம் வயதில் வடநாட்டி யாத்திரை தொடங்கி, 32 மாதங்களுக்குப் பின், தன்னாடு நோக்கித் திரும்பினான். இவனாட்சியானது தமிழ்நாட்டின் உன்னத நிலைமையைக் குறிப்பிடக் கூடியதாயிருந்தது. தன்னாடு திரும்பி வந்து இவன் ஐந்தாண்டுகள் வரை அமைதியுடன் ஆட்சி புரிந்து பின் பரகதி யடைந்தனன். இவன் தெய்வ பத்தியிற் சிறந்தவன். கண்ணகி வணக்கம் நாடெங்கும் பரவுதற்குக் காரணமாயிருந்தவன் இவனே. ஏகதார விரதமுடையவன்; வீர குணமே ஏனையவற்றினும் மேம்பட விளங்கியவன்; தமிழரது மேன்மையிலும் வலிமையிலும் பெருமதிப்பு வைத்திருந்தவன்; தமிழர் வீரத்தில் குறை கூறியதுபற்றியன்றோ, இவன்

வடவரசரை வெற்றி கொண்டது? வீர மிகுதியுடன் மதிநுட்பமும் பெரிதுடையவன் ; நல்லிசைப் புலவர்களை நன்கு மதித்து அபிமானித்தவன் ; செங்கோலுடையவன் ; இவ்வளவு பெருமையுடன் சிறிது முன்கோபமுடையனாகவும் இருந்தான். ஆயினும், அச்சினம் விரைவில் தணிந்து பெரு நன்மை செய்பவன் ; பெரியோர் நன்மொழிகளையும் வைதிக தருமங்களையும் பெரிதும் பேணி வந்தவன். சிவந்த நிறமும், வலியும், பருமனும் கொண்ட உருவுடையவன். நீண்டகாலம் ஆட்சிபுரிந்த சேரவரசருள் இவனும் ஒருவன். இக்காரணங்களால், தமிழகத்தை அக்காலத்துப் பெரிதும் அலங்கரித்து விளக்கமுற்றான்.

இவன் காலம் கி. பி. 2 அல்லது 3-ம் நூற்றாண்டு என்பது இதுவரை வழங்கியுள்ள கொள்கை. ஆனால் வேறு பிரபல பிரமாணங்கள் புதியனவாக அகப்பட்டவற்றை நோக்கும்போது கி. பி. 4-ம் நூற்றாண்டு இவன் வாழ்ந்த காலமாதல் வேண்டுமென்பது உய்த்துணரப்படுகிறது. அக்காரணங்களை எழுதப்புகின் விரியும்.

7. கருணாகரத் தொண்டைமான்

இப்பெயர் பெற்ற தலைவனைப் பற்றி முதன்முதலாக நமக்குத் தெரிவித்தவர், **சயங்கொண்டார்** என்ற புலவர் பெருமானாவர். யாவரும் அருமை பாராட்டும் படி இவர் இயற்றிய **கலிங்கத்துப்பரணி** என்ற நூலால், இத் தலைவனது வரலாறுகளுள் ஒருசில நமக்குத் தெரியவருகின்றன. இவற்றுடன் சாஸனங்களினின்று புதியவாக யான் கண்ட செய்திகளையும் தொகுத்து இப்போது கூறுகின்றேன்.

சோழ ஏகாதிபத்தியத்தை உயர்நிலையில் நிறுவிய அரசர்களுள்ளே, **முதற்குலோத்துங்கன்** எனப்பட்ட **அபயன்** என்பானும் ஒருவன் என்பது சரித்திர நூலோர் நன்கறிவர். நாற்பத்தெட்டு வருஷகாலம் (கி. பி. 1070—1118) ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் அடைந்த பெரும் புகழ்க்குச் சிறந்த காரணமாயிருந்தோர், இவன் கீழமர்ந்த தானைத்தலைவர்களே யாவர். இத்தலைவருளெல்லாம் முதன்மை பெற்றவன் **கருணாகரன்** என்ற சிற்றரசன். கலிங்கப்போரை நேரிற் சென்று நடத்தித் தன்னரசனான அபயனுக்கு வாகைமாலை சூட்டியவன் இத்தலைவனே. அதனால், ஏவுதற்கருத்தனான **அபய**னுடன், இயற்றுதற் கருத்தனாகிய **இக்கருணாகரனையும்** **சயங்கொண்டார்** தம் **பரணியிலே** பெரிதுஞ் சிறப்பித்துப் பாடுவர்.

"தண்ணார் மலர்சேர் திரடோ ளபயன்
தானேவிய சேனை தனக்கடையக்
கண்ணாகிய சோழன சக்கரமாங் ஆட்சி
கருணாகரன் வாரண மேற்கொளவே." (350)

" காட்டிய வேழ வணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலனைச்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே." (522)

இக் கருணாகரன், வ்ண்டை என்ற ஊரின் தலைவனென்பதும், பல்லவ வமிசத்தவனாய்த் தொண்டைமான் என்ற சிறப்புப்பெயர் பெற்றவன் என்பதும், அபயனது சேனாதிபத்தியத்துடன் மந்திரத்தலைவனாகவும் விளங்கியவன் என்பதும்

" வண்டை வளம்பதி பாடீரே...
பல்லவர்தோன்றலைப் பாடீரே." (529)

" வண்டைமன், தொண்டை மான்முதன் மந்திர பாலகர்
சூழ்ந்து தன்கழல் சூடி யிருக்கவே." (314)

என வரும் பரணித்தொடர்களால் அறியலாம். தொண்டைமண்டல சதக நூலார், இவனைத் தொண்டை நாட்டினனாகப் பாடுவர்.

மத்திய காலத்துச் சோழர்நாளிலே, பல்லவ வேந்தர் தம் பழைய பெருவலி குன்றி, அச்சோழரின் கீழ் அமைச்சராகவும் படைத்தலைவராகவும் அதிகாரிகளாகவும் அமர்ந்தனர். அதனுடன், தொண்டை நாட்டிலும் சோணாட்டிலும் சிறியவும் பெரியவுமான ஊர்கட்குத் தலைவர்களாகவும் விளங்கினர். அவ்வாறமர்ந்த பல்லவ வமிசத்தவருள் இக் கருணாகரனும் ஒருவன். இவன் முன்னோர் தொண்டை நாடாண்டமை பற்றி, அவர்நாடு ஊர்களையும் செய்திகளையும் புலவர்கள் இவனுக்கும் உரியவாகச் சிறப்பிப்பராயினும், உண்மையில் இவன் சோணாட்டவனே. இவனூராகிய

வண்டை யென்பது, இதுவரை கருதப்பட்டதுபோல் தொண்டை நாட்டிலுள்ள வண்டலூரன்று; சோழ நாட்டில் திருநறையூர்ப் பகுதியிலுள்ள * வண்டாழஞ் சேரி என்ற ஊராகும். இது, முன்னோரான சோழர் காலத்தும் பிரபலம் பெற்றிருந்ததே. இவை யாவும் சாஸனங்களால் விளங்குவன.

இவ்வூர்த் தலைவன்கொண்ட கருணாகரன் என்ற பெயர், இராமபிரானது திருநாமங்களுள் ஒன்றாகும். தர்ப்பசயன மெனப்படும் திருப்புல்லாணித் திருக் கோயிலுட் பள்ளிகொண்டருளிய அப்பெருமானுக்குக் 'கருணாகரன்' என்பது திருநாமம். இதுபற்றியே சயங் கொண்டாரும்—

"இலங்கை யெறிந்த கருணா கரன்றன்
இசைவெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ."

என்ற தாழிசையுள், இராமபிரானுக்கு அப்பெயர் வழக்குண்மையைக் குறிப்பிட்டார். இருவரும் கருணா கரப் பெயருடையராயினும், ஒருவன் இலங்கையெறிந்த புகழுடையான்; மற்றவன் கலிங்க மெறிந்த புகழுடை யான் என்பது மேற்குறித்த பாடலின் கருத்தாம்.

இனி, இக்கருணாகரத் தொண்டைமான்தேவிக்கு 'அழகியமணவாளினி' என்பது பெயர் என்று தெரி கிறது. நம் தொண்டைமானுக்குப் பல்லவரசர் என்ற

* இவ்வூர் இப்போது கும்பகோணந்தாலூகாவில் அடங்கிய தோர் சிறு கிராமமாய் அதன் தென்கிழக்கில் திருநறையூராகிய நாச்சியார் கோயிலுக்கும் திருச்சேறைக்கும் இடையில் உள்ளது; வண்டுவாஞ்சேரி என மருவி இக்காலத்து வழங்குகின்றது.

தமையனார் ஒருவர் உண்டு. இவர், கருணாகரனுடைய உபசேனாதிபதிகளுள் ஒருவரென்பதும், இங்ஙனம் பதவியில் இளைஞராயினும் உடன்பிறப்பால் மூத்தவரென்பதும், வள்ளன்மையுள்ளவரென்பதும் பரணியால் புலனாகின்றன. இவரெல்லாம் திருமால் பத்திமையிற் சிறந்திருந்தவர்கள்.

இனி, கலிங்கத்துப்பரணியில், கருணாகரன் தன்னரசன் ஏவலாற் கலிங்கத்தின்மேற் படையெடுத்துச் சென்று, அந்நாட்டை வென்று அடிப்படுத்தியது பற்றிச் சயங்கொண்டார் கூறும் செய்திகளை, சாஸனங்கட்கு இயைய, இங்கே சுருக்கிக் கூறுவேன்.

கலிங்க வெற்றி

சோணாட்டின் இராசதானியாக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில், முதல் இராசேந்திரன் மகள் வயிற்றுப் பேரனும், வேங்கைநாட்டரசனான சாளுக்கிய இராசராசன் மகனுமாகிய **விசயதரன்** என்ற அரசிளங்குமரன் ஒருவன் வளர்ந்து வந்தான். அக்காலத்தே சோழ வமிசத்துக்கு நேரான ஆண் சந்ததி இல்லாதிருந்தது. அதனால், அம்மரபுக்கு உரிய புதல்வனாக அவ் விளங்குமரன் எடுத்துக்கொள்ளப்பெற்று, அவன் தாய்ப்பாட்டியான கங்கைகொண்டசோழன் தேவியால் அருமையோடு பேணப்பட்டு வந்தனன். அக்காலத்து அவனுடைய தாய்மாமனான வீரராசேந்திரன் என்ற சோழன் ஆட்சிபுரியலானான். அரண்மனையில் வளர்ந்து வந்த இவ் வரசிளங்குமரன், அறிவு ஆற்றல் பெருமை முதலிய உத்தம குணங்கள் பெருகி 'ஓர் அவதார புருஷன் இவன்' என்று கண்டோர் புகழும்படி விளங்கித் தக்க பிராயமும் அடைந்தனன். அப்போது வடநாட்டி

ஓுள்ள சக்கரக்கோட்டத்துத் தாராவர்ஷன்* என்ற பகையரசனை அடக்கி வருவதற்கு அந்நாட்டின்மேற் படையெடுத்துச் செல்ல வேண்டிய வாய்ப்பொன்று இளைஞனை விசயதரனுக்கு நேர்ந்தது. இவன் அக்காரியத்தின்மேல் மூண்டு வடநாடு சென்றிருந்த காலத்தே தாய்மாமனை வீரராசேந்திரன் எதிர் பாராதபடி இராசதானி நகரில் தேகவியோகமாயினன். ஆகவும் சோழ சிங்காதனத்துரிமைபற்றி அங்கிருந்த அரச வமிசத்தினருள் விவாதமுண்டாகியது. அதனால், நாடெங்குங் கலகமும் குழப்பமும் விளைந்தன. தன்மாமன் திடீரென இறந்ததையும், சோணாடு அராசகமானதையும்† வடக்கே சென்று வெற்றிபெற்ற விசயதரன் கேள்வியுற்றதும், அதிவேகமாக அங்குநின்றுந் திரும்பிச் சோணாடடைந்து கலகத்தையடக்கி நாட்டில் முன்போல் அமைதியை உண்டாக்கியதோடு, தௌகித்திரனாய்ப் புகுந்த தன்னுரிமைப்படி, சோழ சிங்காதனத்தில் வீற்றிருந்து நாடு மகிழ ஆட்சி புரிந்தும் வந்தனன். அக்காலத்து விசயதரனுக்கு இராசேந்திரன், குலோத்

*சக்கரக் கோட்டமண்டலத்து இராசதானியான பாரஸ்ரீருவிலிருந்தாண்ட ஸிந்தராஜன் - தாராவர்ஷன் (கி. பி. 1065) இவனென்பர் (Ep. Rep No. 538 of 1909.).

† தாய்மாமனை வீரராசேந்திரனுக்கு நேர்மனைவி வயிற்றுப் பிறவாதவனும் அதிராசேந்திரன் என்னும் பெயரினனுமாகிய மகனொருவன் இருந்தனனென்றும், சோழசிங்காதனத்துரிமை இவனுக்கில்லையாயினும், அபயன் வடக்கே யுத்தயாத்திரையாகச் சென்றிருந்தபோது, இறந்த தன் தந்தையின் சிங்காதனத்தை இவன் கைப்பற்றவே, குடிகள் கலகம்விளைத்து இவனைக்கொன்றுவிட்டனரென்றும், அதுவே பரணியிற் கூறப்படும் அராசகநிலைக்குக் காரணமென்றும் கருதுவர் சரித்திரவறிஞர்.

துங்கன், அபயன் முதலிய பெயர்கள் வழங்கலாயின. இவ்விசயதரனது ஆட்சிக்காலத்தே, இவனது பெரு வலிமைக்காற்ருது பகையரசரெல்லாம் அடங்கி யொடுங்கி இவனுக்குத் திறைசெலுத்தி வந்தனர்.

இங்ஙனம் நிகழ, ஒருகால் விசயதரன் காவிரிக்கரையில் வேட்டையாடி வந்தபோது, அங்கு நின்று தொண்டைநாட்டுப் பாலாற்றங்கரையிற் பரிவேட்டையாடி வர விரும்பித் தன் பெரும்பரிவாரங்களுடன் கோலாகலமாகப் புறப்பட்டான். அப்பயணத்தில், அவன் முதலிற் சிதம்பரஞ்சென்று தங்கி ஆங்குச் சிவபிரானைத் தரிசித்துக்கொண்டு அங்கு நின்றுந் திருவதிகைசென்று பின் கச்சிப்பதியை அடைந்தனன். ஒருநாள், அக்கச்சிமாநகர் அரண்மனையின் தென்மேற்கு மூலையில் அமைந்த சித்திர மண்டபத்திலே தன்பரிவாரங்கள் சூழ எல்லா அரச வைபவங்களுடனும் அபயன் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். அப்போது அரசரெல்லாந் தத்தம் திறைகளைக் கொணர்ந்து அவனடியில் வைத்து வணங்கி நின்ருர்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு அவ்வவர்க்குரிய அருள்களைச் செய்த பின்னர், அவ்வேந்தர் வேந்தன் — "இவர்களையொழியத் தம் கடமைகளைச் செலுத்தாதொழிந்த வேறு அரசரும் உளரோ?" என்று தன் கருமத்தலைவனை **திருமந்திரவோலை** நாயகனை உசாவினன். அவன் அரசனைப் பணிந்து, "பெருமானே! தத்தம் திறைகளுடன் வந்து ஏனைவேந்தரெல்லாம் நின்கழல் வணங்கினராயினும், கலிங்கதேசாதிபதியான ***அனந்த வன்மன்** என்பான்மட்டும் உரிய திறையோடும்

*இவன், சாஸனங்களில் அனந்தவர்மன் சோடகங்கன் (கி. பி. 1078—1146) எனக் கூறப்படுகின்ருனென்பர் (Ep. Rep. 1905 p. 52-3)

இருமுறையாக வந்திலன்" என்றான். இது கேட்டதும், வேந்தர்பெருமான் முகத்திற் புன்முறுவல் அரும்பியதேயன்றிச் சிறிதும் கோபக்குறி தோன்றியதில்லை. 'இதன் பொருள் என்னையோ? இனி நிகழ்வது யாதோ" என்று உளங்குலைந்து நடுங்கலாயினர் வந்து நின்ற ஏனை மன்னர்கள். அப்போது, சோழன் தன் தானைத்தலைவரை நோக்கி, "கலிங்கர்பதி படைவலியற்றவனாயினும், அவனது குன்றரண் பெருவலிமைகொண்டது; அதனால் நம் யானைப் படையுடன் நீவிர்சென்று அம்மலையரணையிடித்துக் கலிங்கனையும் பிடித்துவருதிர்" என்று கட்டளையிட்டனன். இவ்வாறு தன்னரசன் ஆணையெழுந்ததும், தலைமைச் சேனாபதியும் பல்லவகுலதிலகனுமாகிய கருணாகரத் தொண்டைமான் எழுந்து அடிவணங்கி "ஏழுகலிங்கங்களையும், வேந்தர்வேந்தே! யானே படையெடுத்துச்சென்று அழித்து வெற்றியுடன் வருவல்" என்று கூறினன். இங்ஙனங்கூறியவன், விரைந்து பகையழிக்கும் விருப்புடன் அரசன்பால் விடைகேட்க அவனும் "அங்ஙனமே செய்க" என்று ஆணையளித்தான். அப்போதே, சேனாதிபதியின் கட்டளையால் நாற்பெரும்படைகளும் பல்லியங்களார்ப்பப் போர்க்கோலம்பூண்டு யுத்த யாத்திரைக்குச் சித்தமாயின. தலைமைச் சேனாதிபதி கருணாகரனும், உபசேனாதிபதிகளான பல்லவரசர், வாணகோவரையன்,† முடிகொண்டசோழன் என்பாரும் தத்தம் மத்தயானைகளின்மேல் ஆரோகித்தனர். இங்ஙனமாகப் படை

†வாணகோவரையன் முடிகொண்ட சோழன் என்ற இருவரையும் பற்றிய விசேடச்செய்திகளை, யான் எழுதிய 'கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுட்' காண்க (பக். 23-24).

களும் படைத்தலைவர்களும் யாத்திரைபுறப்பட்டு இரவும் பகலும் வழிக்கொண்டு, இரைவேட்டெழுந்த புலிகள்போல் இகன்மேற் சென்றனர். அப் பெரும்படை [1] பாலாறு, [2] குசைத்தலை, [3] முகரி, [4] கொல்லி, [5] பெண்ணை, வயலாறு, [6] மண்ணுறு, [7] குண்டியாறு, [8] பேராறு, கோதாவரி, [9] கம்பை, [10] சந்த நதி, [11] கோதமை என்ற நதிகளைக் கடந்து, உகாந்தக் கடல் கொதித்துவருவதுபோலக் கலிங்கதேசத்தினுட் புகுந்தது. அது, தங்கள் வருகையை அறிவிக்க வேண்டி நாடெங்குந் தீக்கொளுவிச் சூறையாடியது. அந்நாட்டார் சோழ சேனைகளின் கொடுமைக்காற்ருது ஓடி, அத்தாணி மண்டபத்தில் அமைச்சருடனிருந்த தம்மரசனிடம் சென்று, ‘ எடுத்துவரும் படைகள் சோழன் நம்மேல் விடுத்தனவாகும்’ என்று நடுங்கித் தெரிவித்தனர். கலிங்கர்பதி அதனைக் கேட்டு, “திறைகொடுக்க நான் மறுத்தமைக்காகச் சோழன் தன் படையை ஏவினன் போலும். வலியனான அபயனுக்கன்றி அவன் விடுத்த சேனைக்கும் நான் எளியனே? காட்டரண், மலையரண், கடலரண் என்ற மூவகை அரணுமுடையது நம் கலிங்கதேசம் என்பதை அச்சோழன்

1, 2—செங்கற்பட்டுஜில்லாவில் ஓடுவன ; பின்னதைக் குசஸ்தலை என்று இப்போதும் வழங்குவர். 3—பொன் முகரி அல்லது ஸ்வர்ணமுகி எனப் பெற்று ஸ்ரீகாளஹஸ்திப் பக்கத் தோடுவது. 4—வட ஆர்க்காடு நெல்லூர் ஜில்லாக்களிற் செல்லும் கல்லாறு போலும். 5—வடபெண்ணை. 6—மன்னேறு என வழங்கப்பெற்று நெல்லூர் ஜில்லாவில் ஓடுவது. 7—குண்டூர் ஜில்லாவில் அப்பெயருடன் ஓடுவது ; குண்டலகம்மா என்றும் வழங்கும். 8—கிருஷ்ணநதி ; ‘ பேராற்றங்கரைக் கொப்பத்து’ என்பது சாஸனத்தொடர். 9, 10, 11—என்ற மூன்றும் சப்த கோதாவரிகளைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

அறியான்; அவன் சேனையை எதிர்த்தழிப்பேன்" என்று வீராவேசத்துடன் தன் மந்திரிகளிடங் கூறினன். கூறவும், அவனமைச்சருள் ஒருவனான எங்கராயன் என்பவன் எழுந்து, "அரசே! நீ சினந்தாலும் உறுதிகூறுதொழிதல் என்போன்றவர் கடமையன்றாதலால், யான் சொல்வன சில உண்டு" என்று கூறிவிட்டு, 'பாண்டிய ரைவரை அவர் நாட்டிலும், சேரரைச் [1]சாலை [2]விழிஞங்களிலும், [3]வத்தவனைச் சக்கரக் கோட்டத்தும், சாளுக்கியரை நவிலை [4]அளத்தி என்ற நகர்களிலும், இன்னும் வேந்தர் பலரைப் பல்லிடங்களிலும் அவ்வபயன் வென்றடிப்படுத்தியதெல்லாம், தான் நேரிற் சென்றன்றித் தன் வலிய கடல்போன்ற தண்டைக்கொண்டே யன்றோ? அவ்வாறே, இப்போதும் சக்கரவர்த்தியான அவனது சக்கரமாகவுள்ள* கருணாகரனைத் தலைமையாகக் கொண்டு, அவன் சேனை நம்மைத் தாக்க வருகின்றது. இப்போது என்னை நீ முனியக்கூடுமாயினும், அவன் சேனைமுன் நீ நிற்கும்போது, யான் கூறியதன் உண்மையை உணர்வாய்" என்று கூறினன். இவற்றைக் கேட்ட

[1] சாலை: திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச்சாலை.

[2] விழிஞம்: மேலைக்கடற்கோடியி லுள்ளதோர் துறைமுகம்; திருவனந்தபுரத்துக்குத் தெற்கே 8-வது மைலில் உள்ளது.

[3] மத்தியமாகாணத்திலுள்ள சக்கரக்கோட்ட மண்டலத்து வத்ஸராஜ்யத்தை (Baster State) ஆண்ட தாராவர்ஷன் ஆவன் (Ep Ind. ix, p. 178)

[4] இது மைசூர்-இராஜ்யத்தைச் சார்ந்த நவிலை நாட்டின் (Navale Nadu) தலைமையூராகக் கருதுவர் (S. I. L. iii, p.1307)

*சோழசக்கரவர்த்தியின் தலைமைச் சேனாதிபதியை "சோழன சக்கரம்" என்றும் வழங்கிவந்தனர் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 55, 56.)

கலிங்கவரசன் அவ்வார்த்தைகளைப் பொருது தன் அமைச்சனைப் பலவாறு கடிந்து, தன் படைகட்குமுன் எதுவும் எதிர்நிற்குந் தரத்ததன்று என்று கூறிவிட்டு, எடுத்துவருஞ் சோழன்சேனையை எதிர்த்து அழிக்கும்படி தன் படைத்தலைவர்க்குக் கட்டளையிட்டான். உடனே, யானை தேர் பரி காலாட்கள் என்ற நால்வகைக் கலிங்கசேனைகளும் சோழன் பெரும்படையைத் தாக்கலாயின; பெரும்போர் மூண்டது. இருதிறத்து வீரர்களும் அரிய பெரிய வீரசெயல்காட்டிப் போர் புரிந்து வந்தனர். இருசேனைகளும் ஒத்த பலமுடையவாய்ப் பொருதுவரும்பொழுது, சோழசேனாதிபதி கருணாகரன் மதகளிற்றின் மேற்கொண்டு நேராகவே போர்முகத்துள் நுழைந்தான். அவன் களத்துட் புகுந்தது முதலே, சோழன்படைகள் உற்சாகமிகுந்து கலிங்கசேனைகளைச் சின்னபின்னஞ் செய்யலாயின. அதனால் அப்பகைச்சேனை முழுதும் எதிர்த்துநிற்கும் வலியற்றுத் தோற்றோடியது. எண்ணிறந்த களிறுகளுடன், குதிரை தேர் ஒட்டகம் நிதித்திரள் மகளிர் குழு முதலிய கலிங்கர்செல்வமெல்லாவற்றையும் சோழ சேனைகள் கைப்பற்றிக்கொண்டன. தோல்வியுற்ற கலிங்கர்பதி அப்போரினிடையே ஓடியொளித்தனன். இவ்வாறாகத் தன் சேனை பெருவெற்றிபெற்ற பின்பு, கலிங்க வேந்தன் ஓடிப்பதுங்கிய இடத்தையும் சோழசேனாதிபதி ஒற்றர்மூலந் தேடலானான். அவ்வேந்தன் தன் பெரும்பலத்துடன் மலையரணொன்றைப் பற்றியுள்ளான் என்ற சுவடு ஒற்றரால் அவனுக்குத் தெரியவந்தது. உடனே அவ்வரணைக் கருணாகரன் சேனைகள் அத்தமனத்துள் வளைத்துக்கொண்டு தாக்கலாயின. ஆங்கிருந்த கலிங்கப்படைகளும் சோழன்

சேனையால் பெரும்பாலும் அழிக்கப்பட் டொழிந்தன. எஞ்சி நின்ற ஒருசிலர் மூலைக்கொருவராக ஓடி யொளித் தனர். இங்ஙனமாக—

'கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடுஞ் (458)
சூடினான் வண்டையர்கோன் தொண்டை மானே."

இவ்வளவே, கலிங்கப்போரைப்பற்றிய வரலாறு களாகப் பரணியாலும் பிறவற்றாலும் அறியப்பட் டவை. இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, வனதேவதையாகிய துர்க்கைக்குப் பரணிநாளிற் கூழுந் துணங்கைக்கூத்துங் கொடுத்து வழிபடுவதோர் பழைய வழக்குப்பற்றிச் செயங்கொண்டார் தம் பரணி நூலுட் பலபடப் புனைந்து பாடுகின்றார். கடவுள் வாழ்த்து, கடை திறப்புரைத்தல் முதல் அடுகளம்வேட்டல் இறுதி யாகப் பல அதிகாரங்களை வகுத்துக்கொண்டு பேய்கள் கூற்றாகவும் தேவிகூற்றாகவும் சோழரது பரம்பரைச் செய்திகளையும் அபயனது பிறப்பு வளர்ப்பு வீரம் முதலியவற்றையும் புனைந்துரைவகையால் இப்புலவர் பிரான் பாடும் அழகு, வியப்பும் உவப்பும் ஊட்டக் கூடியது. இப் பரணிநூல், சோழனுக்குரிய தாயினும் அதனிற் கண்ட புகழ்ச்சிகளிலே கருணாகரத் தொண்டை மானுக்குரிய பகுதியும் அரசனையடுத்த தென்றே சொல்லலாம். அதனாற்றான்—

" காட்டிய வேழ அணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலனைச்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே"

என்றும் பிறவாறாகவும் இத்தொண்டைமானைத் தம் நூலுட் சிறப்பிக்கலாயினர் செயங்கொண்டார்.

8. பழைய புலவரின் பெருந்தகைமைகள்

சங்கநாளில் விளங்கியபுலவர்களின் பாடல்களை ஆராயுங்கால், பற்பல வருணனைகளும் கருத்துக்களும் சரித்திரங்களும் தெரியவருதல் போலவே, அப்புலவர்களின் அருஞ்செயல்களும் பெருந்தன்மைகளும் விளங்குகின்றன. அக்குணங்களும் செயல்களும் அவர்களுக்குப் பின்னிருந்தவர்களிடம் ஏகதேசமாகவே இருந்தன வென்பதில் ஐயமில்லை. விரிந்த சிந்தனையும், பரிந்துருகும் மனப்பான்மையும், அற்புதமான செல்வாக்கும், அரசர்க்கு நடுநிலைதவறாது இடித்துரைக்கும் வன்மையும், உறுதி தவறாமையும் அன்னோரிடம் மிகுந்து விளங்கின. பிற்காலங்களில், புலவர் சிலர் தரித்திர மிகுதியால் .மேற்காட்டிய குணஞ் செயல்களில் ஒரோவழித் தவறியிருக்கக் கூடுமாயினும், 'வறுமையிற் செம்மை' என்பது முற்காலத்துச் சான்றோரிடஞ் சிறிதுங் குறைந்ததில்லை யெனலாம். இவற்றுக்கு எத்தனையோ சரித்திரங்களைப் பழைய நூல்களிலிருந்து நாம் எடுத்துக் காட்டக்கூடும். ஆயினும், அவற்றுள் ஒரு சில இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

புறநானூற்றில் வரும் புலவர்களிலே கோவூர் கிழார் என்னும் பெருந்தகையை, மேற்கூறிய குணஞ் செயலுடையார்க்குத் தக்க திருட்டாந்தமாகக் கூறலாம்.[2] ஒருகுடிப் பிறந்த சோழவரசர்களாகிய நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்பவர்கள், சோணாடாளுமுரிமை தத்தமக்கு உரியதென்று வழக்கிட்டு, அது தீராமல் பல இடங்களிலும் பெரும்போர் புரிந்து வந்தனர். அவருள்

நெடுங்கிள்ளி என்பான் சோழநாட்டைத் தன் கைவசப் படுத்தி ஆண்டு வந்தமையால், அவனுடன் பகைத்த நலங்கிள்ளியே தனக்குரிய தாய பாகத்தைப் பெறுதற்கு நெடுங்கிள்ளியின் அரண்களைக் கைப்படுத்த வேண்டிய தாயிற்று. அவ்வாறே, அவன், நெடுங்கிள்ளியால் உள்ளிருந்து காக்கப்பட்ட ஆவூர்க்கோட்டையை முற்றுகை யிட்டான். இம்முற்றுகை பலநாளாக நிகழ்ந்தமையால், கோட்டைக் குள்ளிருந்த பிராணிகள் அடைந்த பெருந்துன்பங்களுக்கு அளவில்லை. இவற் றைக் கண்டு மனம் பொறுக்காமல், மேற்கூறிய கோவூர்கிழார் என்னும் பெருந்தகையார், கோட்டை யை அடைத்துக் கொண்டிருந்த நெடுங்கிள்ளியிடம் நேரிற்சென்று " அரசே! யானைகளெல்லாம் குளியா மலும், நெற்கவளம் முதலியவற்றைப் பெறுமலும், நிலத்தின்மேற் புரளுங் கைகளையுடையனவாய்ப் பெரு மூச்சுவிட்டு இடிபோல முழங்கவும், பாலில்லாமல் குழந்தைகள் அழுது கதறவும், மகளிர் தம்மை அலங் கரியாமலிருக்கவும், குடிகளெல்லாம் வருந்தி அலறுங் கூப்பீட்டைக் கேட்கவும் இவற்றிற்கெல்லாம் நாணுமல் இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் கொடியது. தரும முடையவனுனல், (உன் தாயத்தாளுகிய எதிரிமுன்) 'இக்கோட்டை உன்னது அல்லவா?' என்று சொல்லித் திறந்து வைப்பாயாக. அன்றி, வீரமுடையவனுனல் போர் புரிந்து திறந்து விடுவாயாக. இரண்டுஞ் செய் யாது திறவாமல் அடைக்கப்பட்ட கோட்டையுள் ஒரு பக்கத்தே நீ யொதுங்கியிருத்தல், ஆராயுமிடத்து மிக வும் நாணுந் தன்மையுடையது" என்னும் கருத்துப் படக் கூறினர் (புறநா. 44).

இதனால், நெடுநாளாக அரசரிருவரது தந்நயங்களால் மன்புதைகள் வருந்துதல் கண்டு, பகையரசனிடஞ் சென்று அவனிரங்கும்படி கூறிய இக்கோவூர் கிழார் உயிர்கள்பாற் கொண்டிருந்த பெருங் கருணையும், உண்மைகூறி அரசர்க்கு இடித்துரைக்கும் மனவுறுதியும் பெற்றிருந்தமை விளங்கும். இப்பெரியாரது பெருந்தன்மைகளை விளக்கும் செயல்கள் வேறு சிலவும் உள்ளன. மேற்குறித்த நலங்கிள்ளி நெடுங்கிள்ளிகளிருவரும் உறையூர்க் கோட்டையில் முற்கூறியபடி முறையே முற்றுகையிட்டும் அடைத்தும் நிற்க, ஒருகுடிப் பிறந்த அவர்களது செற்ற மிகுதியைக் கண்டு இப்புலவர் சிறிதும் பொறாமல், அவ்விருவரிடமுஞ் சென்று, "அரசர்களே! (பகைத்துநிற்கும் உம்மிருவருள் ஒருவனும்) பெரிய பனையின் வெள்ளிய இதழைச் சூடியவனல்லன் (சேரனல்லனென்றபடி); அல்லது கரிய கொம்புகளையுடைய வேப்பமாலையை யுடையவனல்லன் (பாண்டியனல்லன் என்றவாறு); உன்னுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது; உன்னுடன் பொருவோனுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது (இருவரும் சோழ வமிசத் தோன்றல்களே என்றபடி). ஆதலால், உங்களுள்ளே எவர் தோற்றாலும் தோற்பது உங்கள் குடியே யன்றி வேறன்று; இருவரும் வெல்லுத லென்பதோ இயற்கையில்லை; இவற்றால் உங்கள் செய்கை, குடியின் பெருமைக்குச் சிறிதுந் தக்கதே அன்று; (அன்றியும்) உங்களைப் போலும் பெருவேந்தர்க்கு இந்தப் பூசல் உடம்பு பூரிக்கும் மகிழ்ச்சியை விளைப்பதாம்; ஆதலால், இப்போரை இனி விட்டொழியுங்கள்" (புறம்-45) என்று கூறினர். பழைய நாளில் தமிழ்ப் புலவர்களுக்கிருந்த விரிந்த

சிந்தையை விளக்குதற்கு இந்நிகழ்ச்சியைக் காட்டிலும் வேறு சிறந்த சான்று வேண்டுமோ? ஒரு குலத்திற் பிறந்து கலகமிட்டுக் கொண்டிருந்த அவ்விருவரையும் நோக்கி, "போர்புரியும் நீங்கள் வேற்றரசர்களன்றி ஒருகுடியிற் பிறந்தவர்களன்றோ! உங்களில் யாவ ரொருவர் தோற்றாலும் வென்றாலும் ஒரு தலையாகக் கெடுவது உங்கள் குலமேயல்லாது, வேறில்லை. இரு வரும் வென்று குடியை உயர்த்துவதென்பது எந்த யுத்தத்திலும் இல்லை" என்று கூறி, அவர்கட்கு வருங் கெடுதியைப் பசுமரத்தாணிபோற் பதியக் கூறியிருக் கும் அழகு எவ்வளவு அற்புதமாயுள்ளது! இக்காலத் தில் நம்மவர் பலர் கெட்டொழிதற்கு இது போன்ற கலகங்களே ஏதுவாயினும், அதனை நீக்கி வைக்க முய லும் பெரியார் அரியர். முற்காலத்தில் கோவூர்கிழார் போன்ற பெருந்தகைகள், அரசருக்குள் விளைந்த பெரும் பகைமைகளை நீக்கி ஒற்றுமையும் சமாதான முஞ் செய்துவைக்க, அமயம் நேர்ந்தபோதெல்லாம் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இதற்கு மற்றொரு பிரமாணமும் உண்டு.

காவிரிப்பூம்பட்டினத்துக் **காரிக்கண்ணனார்** என் னும் புலவர், **பெருவழுதி** என்னும் பாண்டியனும் **பெருந் திருமாவளவன்** என்ற சோழனும் ஓரிடத்துச் சேர்ந்து மிக்க நட்போடு களித்திருந்தபொழுது, அவர்கள் சேர்க்கையைக் கண்டு மகிழ்ந்து, அவ்வரசரிருவரையும் தனித்தனி பார்த்து, "நீ, காவிரிநாட்டுக்குத் தலைவ னானவன்; இவன் மிகுந்த பழைமை வாய்ந்த ஆல மரத்தை அதன் விழுது தாங்கிக் காப்பதுபோல, தன் பழங்குடியைத் தாங்கிப் பகையஞ்ச வாழும் பாண்டிய ரேறுபோல்வான்; நீ உறந்தை நகர்க்கு அரசன்; இவன்

தமிழ்வளம் மிகுந்த மதுரை வேந்தன். நீவிர் இருவரும் பலராமனும் கண்ணபிரானும்போலச் சேர்ந்துவிளங்கு கிற இக்காட்சியினும் இனிமைபயப்பது வேறுண்டோ? கேண்மின். உங்கள் புகழ் நெடுங்காலம் வாழ்வதாக. உம்மில் ஒருவர் ஒருவர்க்கு உரியபோதெல்லாம் உதவி செய்வீர்களாக. நீங்களிருவரும் கூடிநிற்பதினின்றும் வேறுபடாமலிருந்தால் வளமிகுந்த இவ்வுலகம் உங்கள் கையகப்படுவது பொய்யாகாது. ஆதலால், நல்லவை போலவும் நியாயமுடையவை போலவும் முன்னோர்கள் ஒழுகிய ஒழுக்கம் போலவும் அன்புடன் வாழும் உங் களிடையே நுழைந்து உங்களைப் பிரித்தற்கு உழல் கின்ற புறம்பானவரின் சிறப்பில்லாத வார்த்தைகளைக் கேளாமல், உங்களுடைய கூட்டம் இன்றுபோல என் றும் விளங்குவதாக. இருவருஞ் சேர்ந்து வெற்றி களைப் பெறுக. பகைவருடைய குன்றையுடைய நாடு கள், புலி முத்திரையுடன் மீன முத்திரையும் பொறித்த சிகரங்களை உடையனவாகுக" என்னுங் கருத்துப்பட அழகுபெற அவ்விருவரையும் வாழ்த்தினர் (புறம்-58).

ஈண்டு, காரிக்கண்ணனர் அவ்விருவரையும் அரு மையாக அழைக்கும் விதமும், அவ்விருவரது ஒற்று மையைப் பற்றி அவர் கூறிய இனிய மொழிகளும், அவ்வரசரிருவர் உள்ளத்தினும் அழியாததொரு நன் மையைச் செய்திருக்குமென்பதில் ஐயமில்லை. இப் பெருந்தகையார் சோழன்வாயிற் புலவரென்பது காவி ரிப்பூம்பட்டினம் இவரது ஊராகக் கூறப்படுவதால் விளங்கும். இதனல் அவ்விருவருள் இவர் சோழனைச் சேர்ந்த புலவரென்பது தெரியலாம்; ஆகவே, தம்மர சனை விளிக்கும்போது, "நீயே தண்புனற் காவிரிக் கிழவனை" "நீயே, அறந்துஞ்சு உறந்தைப் பொரு

னை " என, ஓரடியில் மிகச் சுருக்கமாகவே கூறி, நட்பினனான பாண்டியனைப் பலவடிகளாலும் பெருகப் புகழ்ந்திருப்பது, அரசியன் முறையில் இப்புலவர்க்கிருந்த பயிற்சி மிகுதியை உணர்த்தவல்லது. இது போன்ற சந்தருப்பங்களில், தம் மரசனைக் காட்டிலும் அவனிடம் வந்த வேற்றரசனை அதிகமாகப் புகழ்தலே முறையன்றோ. " அந்நியர்கள் உங்களிருவரையும் பிரிக்க உழல்வார்கள் " என்பதை இப்புலவர் குறிக்குமிடத்து, " தொல்லோர் சென்ற நெறியபோலவும் " என, " பாண்டிய சோழ வமிசங்களுக்குள் பகைமை நெடுங்காலம் இருந்ததுபோல" தீயோர் சிலர் காட்டும் நியாயங்களைக் கேளாது என்ற பொருள் படக் கூறுதல் குறிப்பிடத்தகும். இன்னும் இப்பாடலிலுள்ள நயங்கள் பலவும் அறிஞர் அறிந்து சுவைத்தற்குரியன.

இனி, பழைய புலவர்கள், அரசரின் அநீதச் செய்கைகளைக் கண்டால், அவற்றை நீக்க முற்படுவதையும், அங்ஙனம் கொடுமை செய்த அரசர்களை வமிச பரம்பரையாக இகழ்ந்து விலக்குதலையும் தங்கள் பெருங்கடமையாகக் கொண்டிருந்தார்கள். முற்கூறிய கோவூர்கிழாரே இதற்கும் தக்க திருட்டாந்தமாகின்றார். கடையெழுவள்ளல்களில் ஒருவனும், புலவர்க்குப் பேருபகாரியும், கபிலர் முதலிய நல்லிசையாளரால் நாவாரப் புகழ்ந்து பாடப்பெற்றவனுமான மலையமான் திருமுடிக்காரியிடத்துப் பெரும் பகைமை பூண்டவன் கிள்ளிவளவன் என்னுஞ் சோழன், இவன் அம்மலையமான் மக்களைப் பிடித்துத் தன் செற்ற மிகுதியால் யானையைக் கொண்டு அவர்களைக் கொல்லும்படி ஆணையிட்டபோது, இக் கோவூர்ப் புலவர் அச்செய்தி

கேட்டு விரைந்து சென்று, "அரசே! நீ, புறுவொன்றின் துயரமட்டுமன்றி, பிற உயிர்கட்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றையுந் தீர்த்த சோழரின் மரபிலுதித்தவன்; இக்குழந்தைகளோ, அறிவாலுமுழுதுண்ணும் புலவரது வறுமையைக் கண்டஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்டு வாழும் வள்ளல்களுடைய மரபில் உதித்தவர்கள். இப்பொழுது இந்த யானையைக் கண்டு, தம் மிளமையால் இயற்கையில் வெருவியழுகின்ற அழுகையையும் மறந்துநிற்கும் மிகச் சிறுபிராயத்தினர் இன்னோர். இக்கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து, முன்பு தாங்களறிந்திராத புதிய வருத்தமுடையவரா யிருக்கின்றனர். நான் கூறிய இவ்வார்த்தைகளை நீ உள்ளபடி உணர்ந்து கொண்டவனானால், விரும்பியதை இனிச் செய்க" என்று மிகவிரங்கக் கூறி அக்கொடுமையினின்று அம்மக்களைத் தப்பவைத்தார் (புறம்-46). என்னே இவர்தம் பெருங்கருணை! இவ்வாறே, மற்றொரு சமயத்தில் முதலிற் குறித்த நெடுங்கிள்ளியிடமிருந்து நலங்கிள்ளிபால் வந்த இளந்தத்தன் என்னும் புலவனை, ஒற்றனாய் வந்தவனென்று பிற்கூறியஅரசன் கொல்லத் தொடங்கியபோது—இக்கோவூர்கிழார், அந்நெடுங்கிள்ளியின் கொடிய எண்ணத்தை விரைவில் மாற்றலாயினர். அவர் கூறியதாவது-"வள்ளலாயுள்ளவர்களை நினைத்துப் பழுத்த மரங்களை நோக்கிச்செல்லும் பறவைபோலச் சென்று, கடத்தற்கரிய வழிகளையெல்லாம் தூரமென்று கருதாமற் கடந்து, திருந்தாத நாவால் தம்மாற் கூடியவாறு பாடி, அங்கே பெற்ற பரிசுகளால் அகமகிழ்ந்து தம் சுற்றத்தை உண்பித்தும், பொருளைப் பாதுகாவாமல் தாம் உண்டும் உளமகிழ்ச்சியுடன் பிறர்க்குக் கொடுத்தும் வாழும் இப்பரிசிலர்

வாழ்க்கை பிறர்க்குக் கொடுமை செய்தலை அறிந்ததோ? ஒருகாலும் இல்லை. இவர் வாழ்க்கை, தம்மோடு எதிர்த்தோரைக் கல்வியால் வென்று அதனால் செருக்குதலுடையது. அல்லாமலும், உங்களைப்போன்ற அரசருடைய பெருமையுமுடையது என்பதை நீ அறியக் கடவாய்" (புறம்-41) என்பதே,

இன்னும், சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் நடத்திய பெரும்போரில், சேரனைப் பிடித்துச் சோழன் சிறைவைத்தபோது **பொய்கையார்** என்னும் புலவர் பெருந்தகை, "களவழி நாற்பது" என்ற நூலைப் பாடிச் சேரனைச் சிறைமீட்ட வரலாறும், குமணவள்ளலை நாடகற்றிக் காட்டில் துரத்திய இளங்குமணனது செற்றத்தைப் **பெருஞ்சித்திரனார்** நீக்கி, அவ்விருவரையும் முன்போல வாழவைத்த அழகிய சரிதமும் பிரபலமானவை.

இனி, அரசர்களிடத்துப் பெருங்குற்றமொன்று கண்டால், முற்காலத்துப் புலவர்கள் அக்குற்றத்தை வமிச பரம்பரையாக மறவாமல், அதனைப் புரிந்த குலத்தையே இழித்துவரும் வழக்கமுடையரா யிருந்தனரென்பதையும் முன்னோர் வாக்கால் அறியலாம். இதற்கு ஓர் அழகான சரித்திரமுண்டு. இளங்கண்டீரக்கோ என்பவனும், இளவிச்சிக்கோ என்பவனும் ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது சென்ற **பெருந்தலைச் சாத்தனார்** என்னும் புலவர், முன்னவனைத் தழுவி மரியாதை செய்து, பின்னவனாகிய இளவிச்சிக்கோவை அங்ஙனம் மரியாதை செய்யாதொழிந்தனர். அப்போது, "என்னை நீர் தழுவாமைக்குக் காரணமென்னை ?" என்று அவ் விச்சிக்கோ புலவரை உசாவினான். அதற்குப் புலவர் "சிறந்த இம்மலைப் பக்கத்தே

தம் கணவர் நெடுந்தூரத்திற் சென்றிருந்தாலும், அவர் பெண்டிர் தம் தரத்திலே நின்று, பாடும் புலவர்கள் விரும்ப யானைக்கொடை யளிக்கும் பெரும்புகழுடைய கண்டீரக்கோன் இவன். ஆதலால் தழுவினேன் ; நீயும் நன்னன் குலத்துதித்தபெருமையும் இயற்கை நற்குணங் களுமுடையவனாயினும், நின் முன்னோனொருவன் புல வர்கட்கு வாயிற்கதவை அடைத்த கொடுஞ்செயல் பற்றி உங்கள் மலையை எம்மவர் பாடுதலொழிந்தார். அதுபற்றித் தழுவ இசைந்திலேன்" (புறம்-151) எனக் கூறினர். இவர் கூறியவாறு புலவர்க்கு வாயிற் கத வடைத்தவன் நன்னன் என்பவனாக வேண்டும். இவன், இத்தவறேயன்றி, புலவர்களும் பிறரும் இவன் பெய ரைக் கேட்டாற் செவியை பொத்திக்கொள்ளக் கூடிய பெரும்பழி யொன்றையும் செய்தவன். அஃதாவது, இவன் தின்னுதற்கென்று இவனது சோலையில் வளர்க் கப்பட்ட மாங்கனியொன்று ஆற்றில் விழுந்து தானாக ஒதுங்கக் கண்டு அதனை எடுத்துத் தின்ற பெண் ணொருத்தியை, அக் குற்றத்துக்காகக் கொல்வித்தனன். அவளைக் கொல்லாதிருக்க வேண்டி, எண்பத்தொரு யானைகளும், அவள் நிறை அளவான பொற்பாவை யும் தருவதாக அவள் பெற்றோர் எவ்வளவோ மன் றாடியும் அதனைக் கேட்காமல் தான் நினைத்ததையே செய்து முடித்தான் அம் மாபாவி. இவ்வநீதச் செயலைப் பழைய புலவர்கள் பெரும்பழிக் கெல்லாம் ஓர் உதா ரணமாகக் காட்டுதல் வழக்கமாயிருந்தது.

பண்டைப் புலவர்களின் உயர்ந்த மனப்பான்மை யும் உண்மை கூறும் வீரமும் உறுதியின் விலகாமை யும் மேற்கூறிய செய்திகளால் நன்கு விளங்கும். புலவர் களின் அருமை பெருமைகளை யறிந்து தவறாமல் ஆத

ரிக்கவல்ல தமிழ் வள்ளல்கள் பலர் அக்காலத்திருந்த செருக்காலன்றோ, இவ்வாறு பண்டைக் கவிஞர் விளங்குவாராயினர்? இதற்கு ஒரு சிறந்த சான்றும் உண்டு. வெளிமான் என்னும் சிற்றரசனிடம் பரிசிற்குச் சென்ற பெருஞ்சித்திரனுர் என்பவருக்கு அவ்வரசன் ஏதோ சிறிது கொடுத்து விடுக்க அதனை அப்புலவர் ஏற்காமல் சினத்துடன் அவனை விட்டுச் சென்று குமணவள்ளலை யடைந்தார். அங்கே யானைப் பரிசிலை இவரது அருமை யறிந்து அளித்தான் அவ்வள்ளல். அதனைப் பெற்ற புலவர், தம்மை அவமரியாதை செய்த வெளிமானூர்க்கே வந்து, ஆங்குள்ள அவனது காவல்மரமொன்றில் தம் பரிசில்யானையைக் கட்டினர். கட்டிய பின் அவ்வெளிமானிடமே நேரிற் சென்று

"இரப்போர்களுக்குக் கொடுத்துப் பாதுகாப்பவன் நீ யொருவனே யல்லன்; கரவாது அளிப்பவர்கள் இரவலர்க்கு இல்லாமற் போகவுமில்லை. இனி ஏற்போர் இருத்தலையும் பார்! அவர்க்கு ஈவோரிருப்பதையும் பார்! உன் ஊரில், காவலையுடைய மரம் வருந்தும்படி யாம் கொண்டு வந்து கட்டிய நல்லிலக்கணம் அமைந்த உயர்ந்த யானை எமது பரிசில். விரைந்த கதிபொருந்திய குதிரைகளுடைய தலைவனே! இனி நான் போவல்"

என்னும் பொருள்படக் கூறிச் சென்றுவிட்டனர் அப்புலவர் (புறம். 162). பண்டைச் சான்றோரின் மனோதிடத்தையும் பெருந்தன்மையையும் விளக்க இதனினும் வேறு சான்று வேண்டுமோ? அக்காலத்துப் புலவர்கள் அரசர்க்குரிய யானை தேர் முதலிய வரிசைகளையும் பெறுதல் வழக்கம்.

இனிப் புலவர்கள் தம் புலமையைக் காட்டிப் பெறும் பரிசுகளால் மகிழ்வரேயன்றி வெறும் யாசகமாகப் பெறும் பொருள்களைப் பெரிதும் வெறுப்பர். இதற்குப் பல சரிதங்கள் புறநானூறு முதலியவற்றில் காணலாம். அவற்றுள், ஒன்றுமட்டும் குறிப்பிடத் தக்கது. பெருஞ்சித்திரனார் என்ற புலவர், **அதியமான் நெடுமானஞ்சி** என்ற வள்ளலிடஞ்சென்று பரிசிற்காகப் பலநாள் வரை காத்திருந்தனர். அப்புலவரது அருமை பெருமைகளை நேரிற்கண்டு களியாமலே, அவ்வரசன் சிலபொருளைப் பலநாட் கழித்துப் பரிசிலாக ஏவலாளர் மூலம் கொடுத்தனுப்பினன். அதனைப் புலவர் பெற்றுக்கொள்ளாமல், 'பரிசு பெறும்பொருட்டுக் குன்றுமலைகளைக் கடந்துவந்தேன்' எனச் சொல்லி யனுப்பிய என்னிடம் அன்பு கொண்டு, 'இப்பொருளைப் பெற்று இவ்வாறு செல்க' என்று விடுப்பதற்கு என்னை எத்தன்மையனாக அறிந்தானோ அரசன்? என்னைக் காணுமலே தந்த இந்தப் பொருளைக் கொள்ளுதற்கு யான் ஓர் இலாபத்தையே கருதும் வெறும் வாணிகப் பரிசிலன் அல்லன்; கல்வி முதலிய பெருமையின் அளவை யறிந்து கொடுத்துவிடின், அப்பரிசில் தினை யளவாயினும் சீரியதாகும்" (புறம்-208) என்ற கருத்துடைய பாடலை அவ்வதியனுக்கு எழுதியனுப்பினர். இவர் கூறியது போலவே கபிலரென்னும் புலவர்பெருமானும் மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளலை நோக்கி, "வரிசையறிந்து கொடுத்தலே கொடையாகும்" என்பதை நன்ருக வற்புறுத்திப் போந்தனர். (121).

இங்ஙனமாக, பழைய புலவர்கள் கொண்டிருந்த பெருந்தன்மைகள் பற்றியே, அக்காலத்து அரசரால் அவர்கள் பெருங்கௌரவத்துடன் ஆதரிக்கப் பெற்

ருர்கள். அதனால் கவலையென்பது சிறிதுமின்றியே அன்னோர் தமிழகத்தின் பெருமை விளங்க வாழ்ந்து வந்தனர். "இன்னாராற் பாடப்பெற்ற அரசன்" என்று தம்மைப் புகழ்ந்து கொள்வதை அக்காலத்து அரசர் பெருஞ்சிறப்பாக மதித்து வரலாயினர். தலையாலங் கானமென்ற இடத்தில் ஏழரசர்களை ஒருசேரப் போரில் வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், பகைவர்முன் தான் சபதஞ் செய்யும்போது, "என்னை இழித்துக் கூறிய அரசர்களைப் போரிற் சிதறவடித்து அவர்களையும் சிறைசெய்யேனாயின், **மாங்குடி மருதன்** முதலான நல்லிசைப் புலவர்கள் எனது தேயத்தைப் பாடாமல் ஒழிக" (புறம். 72) எனக் கூறினனென்றால், வேறு கூறுவதென்? இம்மாங்குடி மருதனாரே, அச் செழியனை மதுரைக் காஞ்சியாற் புகழ்ந்தவர். இவனைப் போலவே, பூதப் பாண்டியன் என்ற மற்றொருவனும் கூறியுள்ளான். இவ்வாறே, "மோசி பாடிய ஆய்" "ஔவை பாடிய அஞ்சி" என **ஆயண்டிரனும் அதிய மானும்** புகழப்படுவர். அன்றியும், முன்னைப் புலவர்கள் தம்மில் அழுக்காறென்பதே யின்றி, மற்றொரு புலவரது அருமை பெருமைகளை அறிந்து உரிய விடத்திற் போற்றிப் புகழ்வர். அதியமான் மகன் பொகுட்டெழினி என்பான் பகைவனது கோவலூரை யழித்து வந்தபோது, "இன்றும் பரணன் பாடினன் மற்கொல் நின் அரணடு திகிரி யேந்திய தோளே" எனப் பரணர் அவ்வரசனைப் பாடின விசேடத்தை ஔவையார் புகழ்ந்திருத்தல் காணலாம்.

இனி, இப்புலவர்களிற் பலர் வள்ளல்களாற் பெரிதும் பேணப்பட்டும், மூவேந்தர்களின் செங்கோன்மையாற் காக்கப்பெற்றும், அறிஞர்களின் கூட்டரவால் அகங்களிக்கப்பெற்றும், அறிவு நிரம்பிய பெண்டு

பிள்ளைகள் ஏவலராதியோரால் இன்ப வாழ்க்கை எய்தப் பெற்றும் வந்தனர். கோப்பெருஞ் சோழன் என்னும் நல்லிசையரசரும் பிறரும் பிசிராந்தையார் என்னும் பெருந்தகையாளரை முதன் முதலாகக் கண்டபோது, "யாம் உம்மைப்பற்றி நெடுங்காலமாகக் கேள்வியுறுகின்றேம்; நீர் நரையில்லாதவராகக் காணப் படுகின்றீரே, அதன் காரணமென்ன?" என்று கேட்டனர். அதற்குப் புலவர்,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

"உமக்குக் கழிந்த ஆண்டுகளோ பலவாயிருக்க, நரையில்லாதிருப்பது எப்படியாயிற்று?" என்று கேட்பீராயின் (சொல்லுவேன்): என்னுடைய மாட்சிமைபெற்ற குணங்களுடைய மனைவியுடனே புதல்வர்களும் அறிவுநிரம்பி உள்ளார். யான் கருதுவதெதுவோ அதையே எண்ணிச் செய்வர் என்னுடைய ஏவலாளரும். அரசனோ, நீதியல்லாத காரியங்களைப் புரியாதவனாய்க் காவல் புரிகின்றான். இதற்கு மேலே—யானிருக்கின்ற ஊரில், நற்குணங்கள் நிரம்பிப் பணியத் தக்க உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடக்கிய கொள்கையையுடைய சான்றோர்கள் பலர் உளர்; இவையே என் நரையில்லாமைக்குக் காரணம்" என்றார். இவ் விடையொன்றே அக்காலத்துப் புலவர்களின் நல்வாழ்க்கைக்குத் தக்க சான்றன்றோ? கவலையே

நரைக்குக் காரணமென்றும், அக்கவலைக்குரிய காரணங்கள் தம்மிடத்தின்மையால் நரை தமக்கு இல்லையாயிற்றென்றும் இப்புலவர் கூறியிருப்பது அறிஞர்கள் படித்து மகிழ்தற்குரியது.

இங்ஙனம் பழைய புலவர்பெருமக்களது குணாதிசயங்களில் சிறந்தவை சிலவே இங்கெழுதப்பட்டன. அவர்கள் அக்காலத் தடைந்திருந்த பெருமைகளை யெல்லாம் எழுதுவதாயின் பல பக்கங்களாகும். இவ்வாறு, தமிழ்ப்புலமைக்கு முன்னுளிலிருந்த பெருமதிப்பு, பிற்காலத்துச் சோழபாண்டியர் முதலியோர் காலத்தும் குறையாதிருந்ததென்றே சொல்லலாம். "ஒட்டக் கூத்தர் முதலிய பெரும்புலவர்கள் சோழரால் எவ்வளவு சிறப்பாக அபிமானிக்கப்பட்டு விளங்கினர் என்பதற்குச் சரித்திரங்களே தக்க சான்றுகளாகும். இத்தகைய செல்வாக்கு, அதற்குப் பிந்திய காலங்களில் பெரும்பான்மை மாறி, இந்நாளில் முற்றுஞ் சிதைந்து விட்டது. அக்காலத்திருந்த புலவர் பெருமக்களைப் போல்வார் இக்காலத்தில் இல்லாது போயினரென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், தமிழருமையறிந்து ஆதரிக்கும் வள்ளல்கள் அருகிவிட்டதுதான் தமிழ்ப் புலமை குன்றியதற்குக் காரணமேயன்றி வேறன்று. கல்வி முதலியவற்றின் செழிப்பு, ஆதரிப்பவர் மிகுதியால் உண்டாவதே என்பது சொல்லவும் வேண்டுமோ? "தானந் தழைப்பத் தழைப்பது காணல்ல தண்டமிழே."

9. பெருங்குன்றூர் கிழார்*

பழைய புலவர்களின் வாழ்க்கைப்பெருமைகள் பெரும்பாலும் வறுமையிலிருந்தே வளர்ந்து வந்தவை என்பதற்கு எத்தனையோ சரித்திரங்கள் உள்ளன.

"நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து" (நாலடி.)

என்றார் முன்னோர். தன் மருமகளான (மகன் மனைவி யான) நாமகள் உள்ளவிடத்து, மாமியான திருமகள் வெறுப்பால் ஒன்று கூடியிராள் என்பது இதன் கருத்து. இது கற்பனையேயாயினும், உலக வியல்புபற்றிக் கூறப்பட்டதோர் உண்மையாம். ஒன்றுகூடியிராத இக் கல்விசெல்வங்களை ஒருசேர வைப்பதற்கு 'ஏற்பது' என்ற யாசகத்தை வழியாகக் கொண்டனர் பண்டைப் புலவர்கள். "ஏற்ப திகழ்ச்சி" என்பதை அன்னோர் அறியாதவர் அல்லர். ஆயினும் யாசக வழியே அவர் கட்கு அக்காலத்து எளியதாயிருந்தது. 'இரவச்சம்' என்ற அதிகாரத்தால் இரந்து நிற்றலின் இழிவைக் கூறிய திருவள்ளுவர், அடுத்து 'இரவு' என்ற வேறு அதிகாரமொன்றை அமைத்து அதன் சிறப்பையுங் கூறிச் செல்கின்றார். இதற்கு, தம் காலத்தில் புலவர் பெருமக்கள் பலர் கொண்டிருந்த வறுமை நிலை அத் தெய்வப் புலவர் உள்ளத்தையும் கலங்க வைத்ததே காரணமாக வேண்டும். இது பற்றியே,

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து"

---

* சக்தி என்ற பத்திரிகையில் வெளிவந்தது.

என்று, யாசகத்தொழில் அழகுபெற்று நிற்கும் இடமு முண்டு எனப் புலவர்களின் எளிமைநிலை நீங்க ஒரு போக்குவிட்டனர் அப்புலவர். ஒப்புரவாளரான செல்வரின் பெரும்புகழ் இன்றுவரை உலகில் நின்று நிலவுதற்குப் புலவர்களின் ஏழைமையும் ஒரு சிறந்த காரணமாகச் சொல்லலாம். கடனறிந்து ஒளியாமலுதவும் செல்வர்களின் முன்னின்று, பெரும்புலவர் இரந்து நின்ற அழகுகளைக் குறிக்கும் சரித்திரங்கள் எத்தனையோ உண்டு. அவை யாவும் இனிமையும் உருக்கமும் உடையனவே. அவற்றுள் பெருங்குன்றூர்கிழார் என்ற பழைய புலவரின் வரலாறு இங்கே சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். அது வருமாறு :—

தமிழகத்தில் **பெருங்குன்றூர்** என்ற ஊர், தமிழ்ப் புலமைக்குப் பேர்பெற்று விளங்கியது. பல்குன்றக் கோட்டத்துத் தலைவனான நன்னன்சேய் நன்னன் என்ற வள்ளலை **மலைபடுகடாத்**தாற் பாடிப் புகழ்பெற்ற **பெருங்கௌசிகனார்** என்ற அந்தணப்புலவரும் இந்த ஊரவர்போலும். இவரைப்போலவே, வேளாண் மரபினரான பெரும்புலவரொருவர் அவ்வூரில் விளங்கினார். இவரைப் **பெருங்குன்றூர்கிழார்** என்பர் முன்னையோர். கல்விச்செல்வம் இவரிடம் பொலிந்து விளங்கினும், திருமகளின் நோக்கம் வீழாமையால் வறுமைப் பிணியால் இவர் வாடி வருந்தினர். அதனால், தம் மனைவிமக்களைக் காக்கவேண்டி வெளியே சென்று வள்ளல்களின் உதவியை இப்புலவர் நாடவேண்டியதாயிற்று. முதலில், வள்ளலான பேகன் என்பானைக் காணச்சென்றார். அப்போது அத்தலைவன், உத்தமியான தன் மனைவி கண்ணகி என்பாளைத் துறந்து, வேறு காமக்கிழத்தி ஒருத்தி

யுடன் வாழ்ந்து வந்தான். இந்நிலைமை அறிந்த புலவர், இச் செயற்கு நொந்தும் அவன் தேவிக்கு இரங்கியும் அவ்வள்ளலுக்கு நன்மொழி கூற விரும்பி அவனிடம் நேரிற் சென்றார். அவன் உபசாரத்துடன் இவருக்குப் பரிசில் வழங்கவந்தான். அதனைப் புலவர் ஏற்காதவராய், தாம் பொருட்பரிசு பெறவரவில்லை என்றும், 'உத்தமியான உன்பத்தினியின் துயர்நீங்க நீ அவளுடன் ஒத்து வாழ்தல் செய்தியாயின் அதுவே நீ அளிக்கும் பெரும் பரிசில்' என்றும் கூறினர். இவர் வேண்டுகோட்கு அவன் யாது செய்தானோ தெரியவில்லை. பின்பு புலவர் சோணாடு சென்று அந்நாடாண்ட இளஞ்சேட் சென்னி என்ற அரசனை அணுகி—

"வான்றோய் நீள்குடை வயமான் சென்னி!
சான்றோ ரிருந்த அவையத் துற்றோர்
ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி யத்தை யுள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே"

என்று தம் அறிவுகெடும்படி வருத்தும் மிடித்துன்பத்தை முந்துறப்போக்கி விரைந்துதவும்படி அவனை வேண்டினர். புலவரின் அருமைபெருமை யறிந்து அச்சோழன் தக்கவாறு பரிசில் அளித்தனன். ஆயினும், அஃது அவர் குடும்பத்துக்குச் சிலகால வளவே உதவக்கூடியதா யிருந்தது. அதனால், வேண்டியவளவு தமக்கு உதவக்கூடிய வள்ளல், சேரவேந்தனை இளஞ்சேரலிரும்பொறை ஒருவனே என்று

தெரிந்து அவனை நாடிச்சென்றனர் புலவர். இவரது பெருமைகளைப்பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்த அவ் வேந்தன் இவர் வருகையை விருப்புடன் ஏற்றுப் பெரிதும் உபசரித்தனன்; அவனது உபசாரங்களால் புலவரும் தம் வறுமைப்பிணி அடியோடு மாய்ந்த தாகவே கருதி மகிழ்ந்தார். இவ்வாறு வேந்தனும் புலவரும் வேற்றுமையின்றிப் பலகாலும் பழகிவந்த போது, இளஞ்சேரலிரும்பொறையின் வீரச்சிறப்பும் கொடைப்பெருமையும் பிற உயர்குணங்களும் தம்மை மேன்மேலும் வியப்புறுத்தி வந்தமையால் அவற்றைப் பலபடியாகவும் பாடிச் சிறப்பிக்கலாயினர் நம் புலவர் பெருமான். இப்பாடல்களை யெல்லாம் பதிற் றுப்பத்தின் ஒன்பதாம் பத்தினுட் காணலாம். இவரது பாட்டுக்களைக் கேட்டு அரசன் அடைந்த மகிழ்ச்சிக்கும், அம்மகிழ்ச்சியாற் புலவர் அடைந்த உற்சாகத்திற்கும் அளவில்லை. இவ்வாறே பல மாதங்கள் கழிந்தன. அரசனுபசாரங்களால் மதிமயங்கியிருந்த புலவர்க்குத் தூரதேசத்திலுள்ள தம் குடும்பத்தைப் பற்றிய கவலை ஒரு நாள் வேகமாக உதித்தது; 'முன்பு சோழன் அளித்த பொருள் குடும்பத்துக்கு உதவுமாயினும், அஃது எத்தனை காலத்துக்குப் போதும்? பல மாதங் கள்வரை இங்குக் கழிந்தனவே. மனைவி மக்களின் கதி என்னுயிற்றோ? என் குடும்பநிலையை அரசனும் அறி யாதவனல்லனே?'' என்ற சிந்தை வெகுவாகத் தோன்றி அவரைப் பெருந்துன்பத்தில் ஆழ்த்தியது. இனித் தாமதியாமல் அரசற்குத் தம் கருத்தை அறி வித்து, வேண்டியவற்றைப் பெற்றுமீள்வதே கருமம் என்று துணிந்து, அக்கருத்தை வேந்தனிடம் இரண் டொரு முறை அவர் குறிப்பிட்டனர். ஆனால் வேறு

பெருங்காரிய நினைவால், அரசன் அவற்றைச் சிறிதும் செவியேற்கவில்லை. சில காலம் இவ்வாருகவே சென்றது. இக்காலதர்மதம் புலவரைப் பெரிதும் வருத்தவே அவர் அரசனை யணுகி, தம் குடும்பத்தின் நிலையையும் தாம் ஊர் செல்லவேண்டிய அவசியத்தையும் கூறித் தமக்கு விடைதரும்படி அவனை விடாது வேண்டினர். அவற்றைக் கேட்டதும் " உம் கவலையினும் என் கவலை மிகப் பெரிதாயுள்ளது ; இந்நிலையறியாமலே நீவிர் சொன்னதையே திரும்பச் சொல்லிவருதிர். எவ்வளவு அறிவாளராயினும், புலவர்தொழில் முடிவில் இத்தகையதுதானே : நும்மைப் போகவேண்டாம் என்று இங்குத் தடுத்து நிற்பார் ஒருவரும் இல்லை. விரும்பியவாறே செல்லலாம்" என்று முகமாறிக் கூறினன் வேந்தன். இடிவிழுந்தது போன்ற இச்சொற்களைக் கேட்டதும் புலவர்க்குண்டான வியப்புக்குந் துக்கத் துக்கும் அளவேயில்லை. 'நாம் அரசனிடம் இத்தனை நாட் பழகியதன் முடிவு இதுபோலும்! அழகிது! கற்பகத்தைச் சார்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்தது போலும் இச்சொற்கள்! இது முற்பவத்திற் செய்த வினைப்பயனே' என்றெண்ணிக் கலங்கி நின்ருர் புலவர். இந்நிலையறிந்தும், அரசன் சிறிதும் மனமிரங்கிஞனில்லை. அதுகண்டு, காரணமின்றி அரசன் திடீரென்று தம்பால் முகமாறியதையும் தம் குடும்ப நிலையையும் பொறுக்காமல், அவனை நோக்கி,

" மனபுதை காககுஙன புரைமை நோக்காது
அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு
நும்ம ரேருமற் றினைய ராயின்
எம்ம ரேரிவட் பிறவலர் மாதோ

விடுத்தேன் வாழியர், குரிசில்! உதுக்காண்
அவல நெஞ்சமொடு செல்வல்நிற் கறுத்தோர்
அருங்கடி முனையரண் போலப்
பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறுத்தே"

"அரசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்!
முன்னாட், கையுள் ளதுபோற் காட்டி வழிநாள்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்
நாணு யாயினும் நாணக் கூறியென்
நுணங்கு செந்நா வணங்க வேத்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டநின்
நாடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வல்"

என்று கூறி, அவனிடத்தினின்றும் எழுந்து சென்று விட்டனர் புலவர். இவற்றுக்கும் அரசன் கவலைப் பட்டவனாகத் தோற்றாதது கண்டு, அவையோரெல்லாம் அதிசயமுற்றனர். புலவரோ, பாவம்! உடுத்த துணியோடு கைப்பொருளுமின்றி, தம் விதியை நொந்த வண்ணம் சேரன் தலைநகரைவிட்டு வெளியேறினார். பலநாள் நடந்துசென்று முடிவில் தன்னந்தனியே பெருங்குன்றூரை அணுகினர். அவ்வூரெல்லையை அடைந்ததும், அதனை அவர் உற்று நோக்கியபோது பெருவியப்பொன்று அவர்க்கு உண்டாகி அவர் மனத்தைக் கலக்கியது. "நம் ஊர்தானா இது! முன்னிருந்த நிலையில் நம் சிற்றூர் இப்போது காணப்பட்டிலதே! என்னே! அதோ நம் மனையிடமாகத் தோற்றும் மாடமாளிகைகள் எங்கிருந்து வந்து புதியவாய் உதித்தன" என்று, இவ்வாறெல்லாம் எண்ணித் தயங்கலாயினர், அவர். இவ்வாறு பெருஞ் சிந்தையில் ஆழ்ந்து நின்றபோது, அப்புலவர்முன்

காவல்மறவர் சிலர் வந்து தோன்ற, அவர்களை நோக்கி, "இந்த ஊரின் பெயர் யாது?" என்று புலவர் விசாரித்தார். "இது பெருங்குன்றூர்" என்று விடைதந்த அவர்கள், "நீர் யாவர்? இங்கு வந்த காரியம் என்ன?" என்று, எடுத்த குரலுடன் புலவரைக் கேட்டனர். "வீரர்காள்! யானும் இவ்வூரினனே" என்று கூறி "அதோ தோன்றும் பெரிய மாளிகை யாருடையதோ" என்று அவர்களை மறுபடியும் உசாவினர் புலவர். "அம்மாளிகை இன்னாரது என்பதை அறியாத நீர் இவ்வூரினராவது எவ்வாறு? உம் கூற்றிலிருந்து உம்மைப் பற்றி எங்கட்கு ஐயம் உண்டாகின்றது; இங்கேயே நீர் நிற்கத்தகும்" என்று அவரை மேற்செல்லாவாறு அக்காவலர் தடுத்துவிட்டனர். இந்நிலையில் அவ்வூரினின்றும் எதிர்வந்த மற்றொருவர் ஆங்கு வந்து புலவரை உற்று நோக்கினர். நோக்கியவர், அதிசயக் குறிப்புடன் அக்காவலாளரிடம் சிலவற்றைக் கூறிவிட்டு, தம்மூர் நோக்கித் திரும்பி அதிவேகமாகச் செல்லலாயினர். சில நாழிகைக்கெல்லாம், பெரிய ஆரவாரமொன்று அவ்வூரினின்று எழுந்தது. வாத்திய முழக்கங்களுடன் ஊரெல்லாம் எதிரே திரண்டு வந்தபோது, புலவர்க்குப் பின்னும் அதிசயம் பெருகியது. அங்ஙனம் வந்தவர்களிடையே, அலங்காரம் மிக்கவர்களாகத் தம் மனைவி மக்களெல்லாம் விளங்குவதை அவர் கண்டார். வந்தவரெல்லாரும், தம்மை அணுகித் தம் அடிகளில் வீழ்ந்து பணிந்து, அழகிய சிவிகையில் தம்மை ஏற்றிக்கொண்டு தம் மாளிகைக்கு உபசாரமாக அழைத்துச் சென்றபோது, "பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ" என்றபடி, புலவர் பிரமை பிடித்தவர் போலாயினர். தாம் சேரர் பெருமானிடத்தினின்று

வெளியேறுங்கால் அவ்வேந்தன் தம் திறத்தில் நடந்து கொண்ட முறைக்கேடெல்லாம் வெறும் போலியே என்பதையும், அவ்வள்ளலின் உண்மையன்பின் பெருமையையும், அவனது பெருங் கொடைத்திறத்தையும் எண்ணி யெண்ணி மனம்பூரித்து மகிழ்ந்தனர் பெருங்குன்றூர்கிழார். புலவரெவர்க்கும் புரியாத பெருஞ் சிறப்பைத் தம் திறத்தில் யாவரும் வியக்க அளித்துதவித் தம் குடும்ப நிலையை ஓங்கவைத்த பெருவள்ளலை மனமுருகி வாயார வாழ்த்தினர். இங்ஙனம் வாழ்த்துவதன்றி அவர் செய்யக்கூடியது வேறுமுண்டோ? தமிழ்நாடெங்கும் பெருங்குன்றூர் கிழாரது வரலாறு மிகப் பிரபல மடைந்ததோடு, இளஞ்சேரலின் இணையற்ற பெரும்புகழும் ஓங்குவதாயிற்று.

மேலே கண்ட வரலாறு, கற்பனைகள் சிறிதளவு கலந்து எழுதப்பட்டதே ஆயினும், அங்ஙனம் கற்பித்ததற்கு ஏற்ற குறிப்புக்கள் முன்னூல்களில் இல்லாமற் போகவில்லை. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகவிறுதியில்—

"(பெருங்குன்றூர் கிழார்) பாடிப்பெற்ற பரிசில்: மருளில்லார்க்கு மருளக் கொடுக்க என்று உவகையின் முப்பத்திராயிரங் காணங் கொடுத்து, அவரறியாமை, மனையும் ஊரும் வளமிகப் படைத்து, ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி, எண்ணற்காகா அருங்கல வெறுக்கையோடு, பன்னூறாயிரம் பாற்பட வகுத்துக் காப்புமறம் தான் விட்டான் அக் கோ"

என்ற தொடர்கள் எழுதப்பட்டிருத்தலைக் காணலாம். இவ்வாறு, சேரனால் பெருஞ்செல்வும் பெற்றவர் இப்புலவராயிருக்கவும், ஒன்றுங்கொடாமலே சேரவேந்தான இரும்பொறை, இப்பெருங்குன்றூர் கிழாரை அனுப்பினன் என்று புறநானூற்றின் 210, 211-ம்

பாடல்கள் தெளிவாகக் குறிப்பிடுதல் நோக்கத் தக்கது. இங்ஙனம் மாறுபட்டு நிற்கும் இவ்விரண்டு செய்திகளை யும் கூட்டி ஆராயுமிடத்து, புலவரை நெடுங்காலம் தன்னிடம் தங்கச்செய்து அவரது புலமைக்கு மகிழ்ந்து வந்த அவ்வேந்தன், முடிவில் அவர்க்கு ஒன்றும் உதவா மலே வெறுங்கையோடு விடுத்தனன் என்பதும், அவ் வாறு அவன் புலவரைக் காக்கவைத்தது, அவரூரில் அவரறியாமல் மாளிகை முதலியன அமைத்து வளங் கள் பலவும் படைப்பதற்கே என்பதும் தெளிவாகக் கூடியன. "என் நுணங்கு செந்நா வணங்க ஏத்திப், பாடப் பாடப் பாடுபுகழ் கொண்ட" என்றும், "முன் னூட் கையுள்ளதுபோற் காட்டி வழிநாட், பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம் நாணாய்" என்றும் இப்புலவர் சேரனை நோக்கிச் சினந்து கூறியவை, ஒன்பதாம் பத் துப்போன்ற இவரது பாடல்களை அவன் உவந்தேற்று வந்த செய்தியையும், ஆயினும் முடிவில் தம்மை வெறுங்கையோடு விடுத்ததையும் குறிப்பன அன்றோ? பெருங்குன்றூரில், மாட மாளிகைகளையும் பிறவளங் களையும் பெருக அமைத்த சேரர் பெருந்தகை, அவற் றைக் காத்துப் பேணுதற்குக் காப்புமறமும் (காவல். வீரரையும்) விட்டான் என்று பதிகங் கூறுவதுங் குறிப்பிடத்தக்கது.

இனி, மேற்கூறியபடி புலவரின் பாடல்பெற்றும் பரிசில் நல்காது விடுத்தவன், 'சேரமான் குடக்கோச் சேர லிரும்பொறை' என்ற பெயருடையான் எனப் புறநானூற்றுக் குறிப்புக் கூறுகின்றது. இங்கே 'சேர லிரும்பொறை' என்றுள்ள பெயர் தந்தையும் மகனு மாக ஆட்சிபுரிந்த பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ் சேரலிரும்பொறை என்ற இருவர்களிலே, பின்னவனை

மகனையே குறிப்பதாகும். அவனே பெருங்குன்றூர் கிழாராற் பாடப்பெற்றவன் என்பது பதிற்றுப்பத்தால் விளக்கமாம். அதனால், 'பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டவன்' என்று அப்புலவராற் புறநானூற்றுப் பாடலிற் குறிப்பிடப் பெற்றவன், அவர் பாடலே பெறுத தந்தையான பெருஞ் சேரல் ஆதன் என்பது தெளிவு.

மேலே கூறியது போன்ற சரிதம் வேறொன்றும் உண்டு. "நாராய் நாராய்" என்று பாடிய சத்திமுற்றப் புலவர் பாடலும், அப்பாடல்பற்றிய சரிதமும் தமிழ் மக்கள் யாவரும் நன்கறிந்தவை. கண்ணபிரான் குசேலர்க்கு அருளியது போன்ற பெருவள்ளன் மையைக் குறிப்பதில், இச் சத்திமுற்றப்புலவர் சரிதமே தமிழ் நாட்டில் முதன்மையானதாகக் கருதப்பட்ட துண்டு. ஆயினும், அந்நிகழ்ச்சிக்குமுன்பே சங்ககாலத் தில் அத்தகைய வரலாறொன்று பிரபலமாயிருந்த தென்பது, இக்கட்டுரையால் வெளியாகக் கூடியது.

---

10. வில்லிபுத்தூரார்.

இற்றைக்கு முன் 1000 ஆண்டுகளுக்குள்ளாக வாழ்ந்த காப்பியக் கவிஞர்களிலே, தலைசிறந்து நின்றோர் இருவர். அவர்கள் **கம்பரும் வில்லிபுத்தூரருமே** ஆவர். இதன் காரணம், இவ்விருவரும் பழைய இதிகாசங்களை யாவரும் அதிசயிக்கப் பாடிய ஆற்றலேயாம். இவ்விருவர்க்கு முன்னும் அவ்விதிகாசங்கள், பெரும் புலவர்களாற் பாடப்பட்டதுண்டு. ஆனால் அவை எல்லாம், **கம்பராமாயணமும் வில்லிபாரதமும்** அவதரித்த பின்பு, தம் புகழ் மங்கிப் போயின. எனவே, பெருங் காவியங்கள் பாடியவர்களிலே, **கவி** என்று முதற் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர்கள் கம்பரும் † வில்லிபுத்தூரருமே எனலாம். செவிக்கினிய செஞ்சொற் பாக்களால் இராமாயண பாரதங்களைத் தெவிட்டாத தெள்ளமுதங்களாக்கித் தந்த இவ்விருவர்க்கும் ஒப்பாக எவரும் முன்பு இருந்ததில்லை; இனி இருக்கப் போவதும் இல்லை. கம்பராமாயண வில்லிபாரதச் சுவடிகள் இல்லாத பழைய தமிழறிஞர் இல்லங்கள் உண்டோ? இவ்விரு நூற்பிரதிகளையும் தாமே எழுதியும் பெற்றும், படித்துப் புலமைபெறாத முன்னோர் யாவர்? தக்கோர்களால் எத்தனையோ பதிப்புக்களைப் பெற்ற வண்ணம், இப்போதும் பெருவழக்கில் இருந்து வருவன இவ்விரண்டு பெருநூல்களுமாகும். இதற்கெல்லாம் காரணம், அக்காப்பியங்களின் கதையமைதிகளும். அவை பாடிய புலவர்களின் ஒப்புயர்வற்ற

---

* வானொலியிற் பேசப்பட்டது.

† க - கம்பர்; வி - வில்லிபுத்தூரார்.

திறமையுமேயன்றோ? இதுபற்றியே 'கவிச்சக்கரவர்த்தி' என்று கம்பரும், 'கவி சார்வபௌமன்' என்று வில்லியும் சிறப்பிக்கப் பெற்றார்கள். 'வில்லிபுத்தூர் இறைவனும் சார்வபௌமன்' என்பது பின்னவர் பாயிரம்.

இம் மகாகவிகளிலே, வில்லியைப்பற்றிய ஆராய்ச்சியுரைகளாக வெளிவந்தவை மிகச் சிலவேயாம். அதனால் இக்கவிஞரைப்பற்றி யான் தெரிந்துகொண்ட புதிய செய்திகள் சிலவற்றை இப்போது விளக்க விரும்புகிறேன். இப் பாரதவாசிரியர் **வில்லிபுத்தூராழ்வார்** என்றும் வழங்கப்பெறுவர். இது, திருமாலடியார் பதின்மருள் விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வாரைக் குறிப்பது. இதனால், வில்லிபுத்தூராழ்வார் என்ற தமிழ்வழக்கோடு, விஷ்ணுசித்தர் என்ற சருமநாமமும் இவர் தரித்திருந்தவர் என்று கொள்ள இடமுண்டு. வைஷ்ணவாசாரியரான 'எங்களாழ்வான்' என்ற முன்னோர்க்கு விஷ்ணுசித்தர் என்ற வடமொழி நாமம் வழங்குதலும் ஒப்பிடத்தகும்.

இவ்வில்லியார் 'வட்டமணி' என்ற அந்தணர் குடியில் உதித்தவர். 'வந்து வட்டமாமணியினில்' என்பது இவர் பாயிரம்.

'வட்டமணி ஸ்ரீதரக் கிரமவித்தன்'

'வட்டமணி திருவரங்கக் கிரமவித்தன்'

(புதுக்கோட்டைச் சாஸனத்தொகுதி, ப, 39)

என, இக்குடியின் முன்னோர் சிலர் சாஸனங்களாலும் அறியப்படுகின்றனர். இராமாநுஜ முனிவரரின் சிற்றன்னை மகனாரான எம்பார் என்ற ஆசாரியரும் இவ் வட்டமணிக் குடியினரே. இவ்வுயர்குடியில்

தோன்றித் திருமால் பத்திமையிற் சிறந்திருந்தவர், இவ் வில்லியார்.

நம் புலவர், கம்பர்க்கு உத்தேசம் 150 ஆண்டுகட்குப் பின் வாழ்ந்தவர்; அதாவது 13-ஆம் நூற்றுண்டிறுதியும் 14-ஆம் நூற்றுண்டின் முதலும் ஆகும். கம்பர் இராமாயணம் பாடுதற்குக் காரணமாயிருந்த சடையவள்ளலைப் போலவே, வில்லியார் பாரதம் பாடுதற்கு மூலமாயிருந்தவர் **வக்கபாகை வரபதியாட்கொண்டான்** என்ற தலைவராவர். இராமாயணத்துள் சடையவள்ளலைப் போல, பாரதத்தில் இவ்வாட்கொண்ட வள்ளல் பலவிடங்களிற் சிறப்பிக்கப்படுகிறுர். இவர் நடுநாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்த சிற்றரசர். 14-ஆம் நூற்றுண்டில் காஞ்சியில் விளங்கிய மல்லிநாதன் என்ற சம்புகுலத்தரசனைத் தம் உலாவிற்புகழும் இரட்டையர் என்ற புலவர்கள், இவ்வாட்கொண்டானையும் பாடியுள்ளார். இதனுல், வில்லியும் இரட்டையரும் சமகாலத்தவர் என்பது தெரியலாம். வில்லிபுத்தூராரின் மகனுராக விளங்கியவர், வரந்தருவார் என்பார். இவர் பாடியதே பாரதப்பாயிரம்.

இவ்வில்லிபுத்தூரர் வாழ்ந்த ஊர், நடுநாட்டிலுள்ள 'தண்டலைச் சனியூர்' என்பது. (தண்டரை-என்று இப்பக்கத்து ரயில்வே ஸ்டேஷனுன ஊரொன்று உண்டு.) இந் நடுநாட்டதான திருவண்ணுமலைப் பிரதேசம் அரசியலாலும் புலமைத் திறத்தாலும் அக்காலத்தே சில விசேடத் தன்மைகள் பெற்றிருந்தது. மைசூர்ச் சீமைத் துவார சமுத்திரத்திலிருந்து ஆட்சிபுரிந்த'ஹொய்சள வல்லாளர்' என்ற வேந்தர்,13,14ஆம் நூற்றுண்டுகளில் சோழநாடு நடுநாடுகளைக் கைவசப்

படுத்தித் திருச்சிக் கண்ணனூரையும் திருவண்ணமலையையும் தங்கள் தலைநகர்களாகக்கொண்டு அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆதிக்கஞ் செலுத்திவந்தனர்.* இது, சரித்திர நூல்களாலும் சாஸனங்களாலும் அறிந்தது. கன்னடரான அவரது ஆட்சியில், அவர் மொழிக்கு அண்ணமலைப் பிரதேசத்தே அதிகச் செல்வாக்கு ஏற்பட்டிருத்தல் கூடியதன்றே? அதனால், தமிழ் மொழியின் பழமை பெருமைகளைப் பேணவேண்டிய அவசியமும் அங்கு நேர்ந்ததுபோலும். அவ்விதம், தமிழ் வளங் குன்றமல் பேணிப் பாதுகாத்து வந்தவர், முன் கூறிய ஆட்கொண்ட வள்ளலாவர். இதுபற்றியே இவர்—

"வெங்கலியின் மூழ்காமல் கன்னடப்பேர்
வெள்ளத்து விழாமல் நான்காஞ்
சங்கமென முச்சங்கத் தண்டமிழ் நூல்
கலங்காமல் தலைகண் டானே"

என்று, பாரதப் பாயிரத்துள் தம் மகனால் வில்லி சிறப்பிக்கப்படுகின்றார். கன்னட மொழிக்கு எவ்விதத் தொடர்புமில்லாத திருவண்ணமலைப் பக்கத்தில் அம்மொழியின் ஆதிக்கம் ஓங்கியிருந்ததெனின், அது அரசியல் மாறுபாட்டால் உண்டானதாகக் கருதல் கூடியதே யாகும்.

இனி, புலமைத் திறத்தாலும் அப்பிராந்தியம் அக்காலத்தில் ஒருவகையிற் பிரபலம் பெற்றிருந்தது. வடமொழி தென்மொழிகளில் வல்ல புலவர்கள் பலர் "திண்டிம கவிகள்" என்ற புகழ்பெற்று இப்பக்கங்களில் விளங்கினர். திண்டிமம் என்ற வாத்தியத்தை முழக்

* Historical Inscriptions of S. India Pp. 186. 188.

இயவண்ணம் தங்கள் ஆசுகவித் திறமையைக் காட்டி விருதுகளுடன் நாடெங்கும் புகழ் பரப்பி வந்தவர் இன்னோர்; சந்த விகற்பங்களையும் செந்தமிழ்ப் பாக்களையும் சரமாரியாகப் பொழிந்து யாவரும் வியப்படையச் செய்ய வல்லவர்கள். பகழிக் கூத்தர் என்ற அக்காலத்துப் புலவர், தம் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில்

"பண்டரு பெருங்கவிப் புலமைக்கு
நீ சொன்ன படி திண்டிம முழக்க

"பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்து திண்டிம முழக்க"

என்று இவர்களைச் சிறப்பித்தல் அறியத்தகும். திருப்புகழ் பாடிய அருணகிரியாரும் இத்திண்டிம கவிகளுள் ஒருவராகவே கருதப்படுகின்றார்.

ஆசுசேர் பெருங்கவி சண்டவாயு
அதிமதுர ராஜன் நான் என் வெண்குடை
விருதுகொடி தாளமேள தண்டிகை
வரிசையொடுலாவுமாவகந்தை தவிர்ந்திடாதோ"

என்ற அவர் பாடற் பகுதியும் காண்க. இத்தகைய பெரும்புலவர் குழுவிலே நம் வில்லியாரும் தலைசிறந்து நின்ற ஒருவர் எனலாம்.

"ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய்
வந்து......மணி முடி தரித்து"

"உயர்புகழ் நிறுவித் தீரகாகளம் பெறுதலின்
யாரினுஞ் சிறந்தோன்"

என்று இவர் பாயிரங் கூறும். இக்கூற்றிலிருந்து, தீரகாகளமான வெற்றிச் சின்னத்தைத் தம் பெரிய

புலமைக்குறியாக நம் வில்லியாரும் பெற்று விளங்கியவர் என்பது தெரியலாம்.

இக்காலத்தே, இந் நடுநாட்டில் வாழ்ந்து வந்த ஸ்ரீ வேதாந்ததேசிகன் என்ற வைணவாசாரியத் தலைவர், தாம் பாடிய தமிழ்ப் பிரபந்தங்களிலே சந்த விருத்தங்களை மிகுதியும் கையாண்டிருப்பதும் இக்கால நிலையோடு பொருந்தியதாகும். 'கவிதார்க்கிக ஸிம்மம்' என்று பேர்பெற்ற இப்பெரியார், தம் நாளில் பிரபலம் பெற்றிருந்த திண்டிமகவி யொருவரது செருக்கொடுங்கச் செய்தார் என்ற குருபரம்பரை வரலாறும் உண்டு. இவையாவும் மேலே கூறியவற்றை உறுதிப்படுத்துவனவாகும். எனவே, இற்றைக்கு 600-650 ஆண்டுகட்கு முன்பிருந்த நடுநாட்டுப் புலமை நிலைமையும் நமக்கு ஒருபடியாக விளக்கமாகின்றது.

இத்தகைய காலவிசேடத்தே, "பிறந்த திசைக் கிசைநிற்பப் பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர் தங்கள் சிறந்த செவிக் கமுதமெனப்" பாடலாயினர் நம் புலவர் பெருந்தகை. வில்லிபாரதத்தின் சொற்பொருள் வளங்களையும் பிற அருமை பெருமைகளையும் கற்றோர் யாவரும் நன்கறிவர். சிறப்பாக, வீரச்சுவை வெருளிச்சுவை மிக்க கதாபாகங்களிலே, செஞ்சொற்கள் கனிந்த சந்தப்பாக்களால் ஓசைவளம் பெருகும்படி இவர் பாடியுள்ள திறமை வியப்புறத் தக்கது. லக்ஷத் திருபத்தையாயிரம் கிரந்தங்கள் கொண்டு விரிந்த வடமொழி மகாபாரதத்தை நாலாயிரப்பிரபந்தமாக்கியருளியவர், இவ் வில்லிபுத்தூராழ்வார். இவ்வாறு சுருக்கியதால் இவர் ஒதுக்க நேர்ந்த முக்கிய கதாபாகங்கள் உண்டோ எனின், இல்லை. ஆனால் காப்பியகதிக்கு

ஏற்ப அங்கங்கே விரிக்கப்பட்ட வரலாறுகளும் கற்பனைகளுமே அதிகம் எனலாம்.

இவர் பாடியதுபோலப் பாலபாரதம் என்ற வடமொழி நூலொன்று, ஆந்திரரான அகஸ்திய பண்டிதர் என்பாரால் இயற்றப்பட்டுள்ளது. இவரைத் தழுவி வில்லியார் தம் நூலைப் பாடியவர் என்று வடமொழியாளர் சிலர் கருதுவர். அவ் அகஸ்திய பண்டிதர், 1292-1323 வரை ஆந்திர தேசத்தை ஆண்ட காகதீய அரசன் பிரதாபருத்திரன் காலத்தவர். இதுவே காலந்தான் நம் புலவர்க்கும் உரியதென்று மேலே விளக்கினேன். எனவே, எவரைத் தழுவி எவர் பாடியவர் என்பது, ஆராய்ச்சிக்கு உரியதே யன்றோ? வில்லிபுத்தூரரின் கம்பீரமும் சுதந்திரமும் பெற்ற வாக்கின் போக்கையும், கதைப் பகுதிகளை அற்புதமாகப் பாடும் அவரது ஆற்றலையும் நோக்குவோரெவரும் அந்த அகஸ்திய பண்டிதரே நம் புலவரைத் தழுவிப் பாடியவராகாரோ என்று ஐயுறத் தடையில்லை.

வில்லிபுத்தூரர்க்கு ஒன்றரை நூற்றாண்டு முன் வாழ்ந்த கம்பநாடர் திருவாக்கானது, சிந்தாமணி, சூளாமணி பெருங்கதை போன்ற பழங்காப்பியங்களின் கதிகளையும், தங்காலத்துச் சூழ்நிலைகளையும் தழுவியதாம். வில்லியாரின் நூலோ, சோழர் காலத்தவரான அக் கம்பர் முதலிய பெருங்கவிஞரின் போக்கோடு தம் காலத்துச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அமைந்தது. மற்றப் புலவர்களின் பாடல்களும் இத்தன்மை கொண்டவையே. அம்முறையில் தங் காலவியல்புக்கேற்ப, மணியும் பவளமுங் கோத்ததுபோல வடசொல்லையும் தொடர்களையும் இடை யிடை கலந்து வளம்படப் பாடுவது இவர் இயல்பு.

மகாபாரதமானது ஒரு குலத்து உதித்த தாயத்தார்களிலே ஒரு சாரார் ஒழுகிய தருமநெறிகளையும் மற்றொரு சாராரின் வஞ்சனை பொறாமை லோபங்களின் விளைவுகளையும் விரித்துக் கூறுவதென்பது தெரிந்ததே. இதனால் தருமமும் அதருமமும் தம்முள் எதிர்த்துப் போரிட நேர்ந்தன. இப்போராட்ட நிகழ்ச்சிகளிலிருந்து, அறம் பொருளின்பம் வீடாகிய நூற்பயன்களை நாம் நன்கறியக்கூடும். இப்புருடார்த்தங்கள் நான்கையும் சாந்தமான தருமநெறியால் அடைவதே நேர்முறை.

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என அப்புருடார்த்தங்களின் இயல்பைச் சுருக்கிப் பாடினர் ஔவையார். சாந்தமுறையின் வேறான வன்கண்மை வாய்ந்த வீர நெறியாலும் அவற்றை அடையலாம் என்ற உண்மை, பாரதக் கதைகளிலிருந்து நமக்கு விளக்கமாகின்றது.

சாந்தமும் சாந்தமற்றதுமான இவ்விரு நெறிகளையும் முறையே அறநிலை, மறநிலை என்று வகுத்துக் கூறினர், திவாகரர் முதலிய நிகண்டு நூலோர். இவற்றுள் மறநிலை என்றது பாவத்தன்மை என்ற பொருளில் வந்ததன்று; மறக்கற்பு, மறக்கருணை என்பவற்றிற் போல வீரத்தன்மை என்ற பொருளுடையதாகும். திருவள்ளுவரும்,

"அறத்திற்கே அன்புசார் பென்ப ரறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்பதனால், மறமாகிய வீரத்துக்கும் அன்புவேண்டும் என்ற கருத்திற் கூறினார்.* "பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றதன் எஃகு" என்று இக்கருத்தைப் பின்னரும் வள்ளுவனார் விளக்கினர். "அறத்தொடு பொருந்திய மறத்துறை" என்றார் இளங்கோவடிகளும்.

அறமும் மறமுமாகிய இவ்விரண்டு நிலைகளாலும் அடையும் பயன்கள் முடிவில் ஒரு தன்மையானவையே. இவற்றுள், மறம் அல்லது வீர நெறியான புருஷார்த்தங்கள் மறநிலையறம், மறநிலைப் பொருள், மறநிலையின்பம், மறநிலை வீடு என நான்கு வகைப்படும். இவை, அறநிலைகளான அறம்பொருளின்ப வீடுகளின் வேறானவை. இவற்றுள் மறநிலை பற்றி நிகண்டுகள் கூறும் செய்திகள் பலவும், மகாபாரதக் கதைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் குறிப்பிடத் தக்கது. இவற்றைச் சிறிது விளக்குவேன்.

தானந்தவ முதலியவை அறநிலையறமாம். மற்று மறநிலையறமாவன—ஆனிரை மீட்டல், அரும்பகை தெறுதல், செஞ்சோற்றுக் கடன்கழித்தல் போன்றன என்பர் நிகண்டு நூலோர். மகாபாரதப் போரானது—நிரைகவர்தல் நிரைமீட்டல் என்ற செயல்களிலிருந்தே தொடங்கியதென்பது நிரைமீட்சிச் சருக்கத்தில் வில்லிபுத்தூரரது அழகிய வாக்கால் பலரும் தெரிந்ததே. சூதுபோரில் தம் அரசுரிமை யாவும் இழந்த பாண்டவர்கள், துரியோதனன் நியமித்தபடியே பன்னிரண்டாண்டும் காடுவாழ்ந்து பதின்

* "மறத்திற்கும் அஃதே துணை" என்ற தொடர்க்குப் பரிமேலழகர் கொண்ட பொருள் வேறாம். அஃது ஆராய்ச்சிக்குரியது.

மூன்றுமாண்டு கரந்துறையலானார்கள்.' கரந்துறைய வேண்டிய காலவிறுதியில், விராடநகரிலே அவ ரிருப்பை அறியவேண்டி, அந்நகர்ப்புறத்து மேய்ந்த அரசனது ஆனிரைகளைக் கௌரவசேனைகள் கவர்ந்து சென்றன. அதனை அறிந்த விராட வேந்தன் பெரும்படையுடன் சென்று வீமனுதவியால் அவற்றை மீட்டான். பின் துரியோதனனே பெருஞ் சேனையுடன் அந்நகரின் வடக்கு வாயிலை முற்றுகையிட்டனன். அஃதறிந்து, அங்கே பேடியுருக்கொண்டிருந்த அருச் சுனன் விராட புத்திரனைத் தலைவனாகக் கொண்டு தேரைச் செலுத்திச்சென்று அக் குருகுல வேந்தனை அவன் படையோடு முறியடித்தனன். கரந்துறைய வேண்டிய ஓராண்டுக் காலம் முடிந்ததும், தம் பழைய உருக்கொண்டு ஐவரும் வெளிப்பட்டனர் — என்பது சரிதம்.

தமிழர்க்குரிய புறத்திணையான பழைய போர் முறைகளிலே, வெட்சி என்ற நிரை கவர்தலும், கரந்தை என்ற நிரைமீட்டலும் அரசர்க்குள் நடந்து வந்த போரின் தொடக்கமாக முன்னூல்கள் கூறுஞ்செய்தி, மேற்குறித்த வரலாற்றுடன் ஒப்பிடத்தக்கது. நிரை கவர்வோர் வெட்சிப்பூவையும் நிரைமீட்போர் கரந்தைப் பூவையும் அடையாளங்களாக அணிந்து செல்வது பற்றி, வெட்சி கரந்தை என்று அப் புறத்திணை பெயர்பெற்றன. விராடனது நிரைகளைக் கவர்ந்த திரிகர்த்தவேந்தனை "விறல் வெட்சி மிலை தோளினன்" என்றும், அந்நிரைகளை மீட்ட விராட வேந்தனைக் "கரந்தைத் திருத்தாமன்" என்றும் வில்லிபுத்தூரர் கூறுதலும் காணலாம். "சண்டைக்கு எடுபிடி மாடு பிடி" என்ற உலகவழக்கும் இத்துறைபற்றி வந்ததே

இந் நிரைமீட்சிச் சருக்கத்தால், பாண்டவரின் வாய்மை, பொறுமை, கடமையாற்றல் போன்ற உத்தம குணங்கள் பலவும் வெளியாகின்றன. இவர்கள் வெளிப்பட்டபின், அறநிலைமறத்தின் முறையில் 'அரும்பகை தெறுதல்' என்ற துறையிலே இழியலானார்கள். பகைவெல்லும் இக்காரியத்தை அவசரப்பட்டு இவர்கள் தொடங்கிவிடவில்லை. உலூகமுனிவரையும் கண்ணபிரானையுமே ஒருமுறைக்கு இருமுறையாகத் தூதனுப்பி,

"ஆண்டு மன்னர்முன் சூதுபோர் பொருதழிந்
தளித்திடு தலின்நீர் கொண்
டாண்டு வந்தபார் நும்மொழிப் படியவர்க்
களித்திரோ அளியீரோ?"

என்று கேட்டுவிட்டார்கள். இப்படித் தூது விடுதலை முதலிற் பிரேரித்தவர் தர்மபுத்திரரே. இதற்கு மிகவும் சினந்துபேசிய வீமசேனன், தம் தமையனால் சமாதானம் செய்யப்பட்டபோது, அவன்,

"அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய்!
உனதருளுக் கஞ்சினேனே"

என்று வெறுப்புடன் சாந்தமடைந்தான் என்பர் வில்லியார். முடிவில் அவதார மூர்த்தியான கண்ணபிரானே எழுந்தருளித் தூதுமொழிந்தும், "ஒரு கோற்குத்து நிலமுங் கொடேன்" என்று துரியோதனன் மறுத்ததோடு, அப்பெருமானுக்கு அவமதிப்பு விளைத்தும் அனுப்பிவிட்டனன். ஆகவே, பெரும்பகை முற்றிப் போரும் மூண்டது. மூண்டதுமுதலே, எதிர்ப் பக்கத்திருந்த விடுமர் துரோணர் முதலிய பெரியோர்களிடம் பாண்டவர்கள் எவ்வளவு கௌரவமாக நடந்து

கொண்டவர்கள் என்பதும், அறநெறி தவருத அந்த ஐவர்களிடமும் அம்மேன்மக்கள் அன்பும் மரியாதையும் காட்டிய அழகும் வில்லிபுத்தூரர் வாக்கில் மேம்பட்டு விளங்குகின்றன. அவர்களிடம் மட்டுமன்று; தன்னை இளமை முதலே வெறுத்துப் பகைமை காட்டி வந்த கன்னன், கௌரவப் படைத்தலைமை பூண்டு, போரிடையே ஒரு சமயம் தோற்றுச் செயலற்று இருந்த நிலையில்,

‘அன்றுபோர்புரி சேனையின்பதி யான்வீரனை நீ
இன்றுபோயினி நாளைவாஎன இனிதியம்பினனல்’

என்று அவனிடமும் அன்புகாட்டினன் அருச்சுனன்— இராவணன்பால் முதனாட்போரில் இராமபிரான் காட்டிய மறக்கருணையும் இதுபோன்றதன்றோ? இத்தகைய மறநிலையன்பினையே,

“பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு”

என்பதனால் வள்ளுவனாரும் குறிப்பிட்டார்.

இனி, மறநிலையறத்தின் மூன்றும் வகை ‘செஞ்சோற்றுக்கடன் கழித்தல்’ ஆம். அஃதாவது, உற்றவிடத்து உதவவேண்டித் தமக்கு உணவு முதலிய போகபோக்கியங்களை அளித்துக் காத்த அரசர்க்குப் பகைவரால் கேடு நேர்ந்தபோது, அவர் பகையை அழித்துத் தம் தலைவரைக் காப்பதாம். இவ்வுத்தம தருமத்தை மேற்கொண்ட பாரதவீரர்களிலே துரோணர், கர்ணன் என்பார் தலைசிறந்தவர்கள். நிரை மீட்சிக்காக நடந்த போரிலே, அருச்சுனனைத் துரோணர் எதிர்த்துவந்தபோது, அவ்வீர சிகாமணி அவரை நோக்கி,—

"யாதுமொன் றறியா வென்னை இவனலா திலையென் றிந்த
மேதினி மதிக்கு மாறு வின்முதற் படைகள் யாவும்
நீதறத் தந்த வுண்மைத் தெய்வநீ யென்றுற் பஞ்ச
பாதகந் தன்னி லொன்றுன் பதயுகம் பிழைப்ப தையா"

என்று பணிவுடன் கூறலானான். உடனே—

"அம்முனி தன்னோ டிவ்வா றருச்சுனன் புகல வல்விற்
கைம்முனி வனுஞ்செஞ் சோற்றுக் கடன்கழித் திடுநல்வேண்டும்
தெம்முனை மதியா வீர! தேவர்தம் பகையை வென்ற
வெம்முனை காணு மாறுன் வில்வளைத் திடுக என்றான்"

எனத் துரோணாசாரியர் கூறிய விடையை நம் பாரத வாசிரியர் அழகுறப் பாடுவர். இவ்வாறே இம்மறநிலை யறத்தைத் துரியோதனன் மனங்கோணாது, தன் முடிவு வரை நிறைவேற்றிய பெருவீரன், கன்னன் என்ற வள்ளலே. கண்ணபிரான் தூண்டுதலின்மேல் குந்திதேவி அவ்வள்ளலிடம் தனியே சென்று, தானே அவனைப் பெற்ற தாய் என்பதை அவனுக்கு மெய்ப்பித்துக் காட்டினாள். காட்டவும், அவ்விருவருமே மனமிளகி நின்ற நிலையில்—

'குருகுலா திபர்க்குங் குருசிலாய் வாழ்வு கூர்தி'

என்று வேண்டிநின்றாள், குந்தி. அப்போது கன்னன்—

"பெற்றநீர் மகவன் பிலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ விட்டீர்
அற்றைநா டொடங்கி யென்னையின் றளவும்
ஆருயிர்த் துணையெனக் கருதிக்
கொற்றமா மகுடம் புனைந்தரீ சளித்துக்
கூடவுண் டுரியதம் பியரும்
சுற்றமா னவரு மென்னடி வணங்கத்
தோற்றமு மேற்றமு மளித்தான்"

'மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
 மாசறத் திகழுமே காந்த
இடந்தனிற் புரிந்தி யானயர்ந் திருப்ப
 'எடுக்கவோ கோக்கவோ' என்றான்
திடம்படுத் திடுவேல் வீராச்சரா சனுக்குச்
 செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுங்
கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழும்
 கருமமும் தருமமும் என்றான் "

என வில்லிபுத்தூரர் பாடுதல் பலரும் அறிந்ததே. இது, அப்பெருவீரனது செய்ந்நன்றியறிதற் குணத்தை எவ்வளவு அழகாகச் சிறப்பித்துக் காட்டுகின்றது? மரண காலத்திலும் இவ்வுபகார சிந்தையோடு தன்னுயிர் விட்டவன் அவன். பதினேழுநாட் போரிலே, அருச்சுனன் அம்புகளால் உடல் சல்லடைக் கண்களாகி, ஆவிநிலை கலங்கி நின்ற அவ்வீரர் பெருந்தகையின் முன்பு, கண்ணபிரான் ஒரு விருத்த வேதியனாய் எழுந்தருளி, அன்றுவரை அவன் செய்த புண்ணிய மனைத்தையும் உதவும்படி யாசிக்கவும், பெரிதும் உவந்து அளித்தான் அந்தத் தானவீரன். அப்போது வியப்பும் உவப்பும் அடைந்த பெருமான் பெருங்கருணையோடு தன் பரமான்மவுருவை அவற்குக் காட்டியருளவே, பேரானந்தமடைந்து,

" தருமன்மகன் முதலான அரிய காதற்
 றம்பியரோ டமர்மலைந்து தறுகணண்மைச
செருவிலெனை துயிரனைய தோழற் காகச்
 செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோவுக்
குரிமைபெறு கவசமுங்குண் டலமு மீந்தேன்
 உற்றதொரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே
 மாதவத்தா லொருதமியேன் வாழ்ந்த வாறே "

என்று வாயார வாழ்த்தி நற்கதிபெற்ற வரலாறு பிரசித்தம்.

இனி, இரண்டாம் புருடார்த்தமான அர்த்தமும், அறநிலைப் பொருள், மறநிலைப் பொருள் என இரு வகைப்படும். தீவினைவிட் டீட்டுவது அறநிலைப் பொருளாம். மற்ற மறநிலையை,

> 'அமருழந்து கொண்டவும் அருந்திறை கொண்டவும்
> தவறுசெய் தீயோர் தண்டப் பொருளும்
> கவர்சூது வென்றவும் மறநிலைப் பொருளே'

என்பர் முன்னோர். இவற்றுள் சூதில் வென்ற பொருளையும் இவ்வகையிற் சேர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது. சகுனியுடன் ஆடிய சூதில் தருமர் தோற்றன ராயினும், அவர் வென்றிருந்தால், அது, அரசர் ஈட்டத் தக்க வெற்றிப் பெருமைகளில் ஒன்றாகவே அக்காலத்தார் கருதக் கூடியவர் என்பது இதனால் பெறப்படுகின்றது. வனத்தில் துயரத்துடனிருந்த தருமபுத்திரரை அணுகிய வியாசமுனிவர், அவரை நோக்கி,

> 'கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
> ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்-வாடிக்கலங்கிலை நீ'

என்று நிலைமையைக் கூறி, அவன் கொண்ட சோகந் தணித்தனர் என்பர் புகழேந்தியாரும்.

மூன்றாம் புருடார்த்தமான இன்பமும், அறநிலை மறநிலை என்று இரண்டாகும். காதலிருவர் கருத்தொருமித் தாதரவுபட்டது அறநிலை யின்பமாம்: ஏனையதை—

> "ஏறு தழுவல் இலக்க மெய்தல்
> கூறுபொருள் கொடுத்தல் வலிதிற் கோடல்
> மாறுபடு நிலையின் மறநிலை யின்பம்"

என்பர். இவற்றுள் இலக்கமெய்தலையும் வலிதிற் கோடலையும் பாரத சரிதங்களால் நாம் நன்கறியலாகும். கன்னியாசுற்கமாக வைக்கப்பட்ட சுழல் பன்றியிலக்கை யெய்து திரௌபதையை அருச்சுனன் அடைந்த வரலாறு தெரிந்ததே. இவ்வாறே வலிதிற் கோடல் என்ற வகையை, அம்பிகை அம்பாலிகை என்ற காசிராசன் மகளிரை வீடுமர் தம் தம்பியின் பொருட்டு வலிதிற் பற்றிவந்து மணம் புரிவித்த கதையால் அறியலாம். இம் மறநிலைகளை ஆசுரமணமென்பர். இவைபற்றிய வில்லிபுத்தூரர் வாக்கு முழுதும் பெரிதும் இன்பமளிப்பதாம்.

ஆகவே, அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலும் சாந்தமான அறமுறையால் மட்டுமின்றிச் சாந்தமற்ற முறையாலும் அடையத்தக்கவை என்பது வில்லிபாரதத்தால் விளக்கமாயிற்று. இனி, நான்காம் புருடார்த்தத்தை—

'' பரனை நினைந் திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு ''

என்பதனுல் குறிப்பிட்டனர் ஔவையார். அஃதாவது, அறம்பொருளின்பங்களில் பற்றற்றுப் பரம்பொருளையே பற்றுவதாம். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றார் பெரியார்.

செருக்களத்திலே, தன் 'உற்றார் உறவினர்களையும், குரவர்களையும் கொன்று தரணியாள ஒருப்படேன்' என்று கைசோர்ந்து நின்ற அருச்சுனனது நிலைகண்டு, பார்த்தசாரதியான பெருமான், அவனுக்குக் கர்ம ஞான பக்தியோகங்களை உபதேசித்தும், அவனது உண்மை நிலையையும் தன் பரமான்மவுருவத்தையும் தெளியக்காட்டியும், தன் தர்மத்தை விடாது செய்து

அவற்றைத் தன்னிடம் அர்ப்பித்துத் தன்னையே சரண மடைய அவனுக்குக் கூறியும் உய்யக் கொண்ட சரிதம் உலகறிந்தது. உத்தமோத்தமமான இக் கீதோபதேசத் தால்—

" ஆங்கவன் தெளிந்துதேறி அறம்பொரு ளின்ப முற்றிப்
பாங்கினுல் நின்னை யெய்தும் பயனெனக் குரைத்தா
யென்று
பூங்கடிக் கமல நாறும் பொன்னடி போற்றி யான்செய்
தீங்கெலாம் பொறுத்தி யென்று செருச்செயு மாறு
பேரர் மூண்டான் "

என்று முடிக்கின்றூர் வில்லிபுத்தூரர். பக்தி ஞானங் களாகிய சாந்த நெறியாற் பெறும் அறநிலைவீடே யன்றி, வீரநெறியால் அடையும் மறநிலைவீடும் உண் டென்பது இதனுல் பெறப்படுவதன்றே ?

" அறம்பொருளின்பம் முற்றி நின்னை...எய்தும் பய
னெனக்கு உரைத்தாய் "

என்ற அருச்சுனன் மொழியால், மேற்கூறிய தத்துவம் நன்ருக வெளியாதல் காணலாம்.

இவற்ருல் வில்லிபுத்தூரர் வரலாறும், அவரது இதிகாசங் கூறும் பொருண்முடிவும் நமக்கு ஒரு படி யாக விளக்கமாகின்றன.

11. சிலப்பதிகாரங் கூறும் வழக்க வொழுக்கங்கள்

தமிழணங்கின் அணிகலன்கள் எனப்படும் பஞ்ச காவியங்களிலே, காலத்தாலும் சுவை மிகுதியாலும் தலைமைபெற்று விளங்குவது சிலப்பதிகாரம். இது, சேர முனிவரான இளங்கோவடிகளால் அருளிச்செய்யப்பட்டது ; தமிழ்நாட்டுச் சரிதமாகவும் முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியதாகவும் இத்தமிழகத்துக்குச் சிறந்ததொரு தனிப்பேரிலக்கியமாகவும் போற்றப்படுவது.

இக் காப்பியம் கூறும் கண்ணகி கோவலரின் வரலாறு யாவரும் நன்கறிந்த தாதலால், அதனை இங்கே நான் கூறப்புகவில்லை. ஆனால் நம் நாட்டின் ஆதி வழக்கவொழுக்கங்களாக இந்நூலினின்று அறிதற்குரியவை பல உண்டு. அவற்றுள் சிறந்தன சிலவற்றையே இப்போது எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

நாட்டு வழக்கவொழுக்கங்கள் என்பன அந்நாட்டு மக்களைச் சார்ந்தவையே. அம்முறையில், இத்தமிழக மக்கள் யாவர்? இவர்கள் குறிஞ்சி முதலிய ஐவகை நிலப்பகுதிகட்கும் நால்வகை வருணங்கட்கும் உரியவரே. தொல்காப்பியமும் சங்கநூல்களும் இவ்விரு வகையினர்க் கல்லாமல், ஏனை மக்களுக்கு இந்நாட்டின் உரிமையைக் கொடுக்கவில்லை. இவருள் ஐந்திணைமக்கள் என்போர் குன்றக்குறவர், ஆயர், எயினர், உழவர், பரவர் என்ற பெயர்களுடன் மலைமுதல் கடல்அளவும் பரவியிருந்தவர்கள். இவர்கள் பெரும்பாலும் நாட்டுப் புறவாசிகளே. நகரப்பதிகளிலே, அந்தணர் அரசர்

---

* வானொலியிற் பேசியது.

வணிகர் வேளாளர் என்ற நான்கு வருணத்தவரும் மிகுதியாக வாழ்ந்துவந்தனர்.

இவர்களுள், ஐந்திணைக் குடிமக்களின் அரிய உழைப்பால் உண்டான பயனே தேசத்தின் இயற்கைச் செல்வங்களாகும். இந்நிலங்களையும் மக்களையும் செல் வங்களையும் நெறிப்பட அமைத்துப் பேணுதற்கு, அறிவமைதியும் ஆட்சித்திறமையும் பண்டமாற்றமும் பல்வகைத் தொழில்களும் அவசியமானவை யன்றோ? இவற்றை முறைப்படி புரிவோர்களே நால்வகை வருணத்தவரும்.

குடிமக்களும் தலைமக்களுமான இவரெல்லாம், தெய்வபக்தியும் தேசாபிமானமும் குலவொழுக்கங் குன்றாமையும் உடையவர்கள். இவரது தெய்வபத்தியை முதலில் நோக்குவோம். முருகக்கடவுளும் திருமாலும் பகவதியும் இந்திரனும் வருணனும் முறையே இவ் வைந்திணை மக்களாலும் வழிபடப்பட்ட தெய்வங்கள். இருவினையும் மறுபிறப்பும் உண்டு என்ற கொள்கை இவர்களிடம் வேரூன்றியிருந்தது. தலைமக்கள் வாழும் நகரங்களிலே மேற்கூறிய தெய்வங்களோடு சிவபிரான், பலதேவர், சந்திரன், சூரியன், சாத்தன் முதலிய தெய்வங்களின் வழிபாடுகளும் மலிந்திருந்தன. மதுராபதி சம்பாபதி போன்ற நகர தேவதைகளும் இம்மக்களால் வழிபடப் பெற்றனர். இத்தெய்வங்கட் கெல்லாம் விக்கிரகங்கள் அமைந்து கோயில்களும் விழாக்களும் நடந்தேறி வந்தன. இந்திர விழா, புகாரில் நிகழ்ந்த சிறப்பை நாம் நன்கறிவோம்.

சைவமும் வைணவமும் சத்திவணக்கமும் அக்காலத்தே வழக்கிலிருந்தவை. பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம், பாய்கலைப்பாவை மந்திரம் என்பவற்றை

இளங்கோவடிகள் குறிப்பிடுவதால் இஃது அறியப் படும். நித்திய நைமித்திக வழிபாடுகளை, உரிமை பெற்ற ஆகமபூசகரே நிகழ்த்திவந்தனர். திருமால் கோயில் அருச்சகன், சேடக் குடும்பி எனப்படுவன். பகவதியாகிய கொற்றவையைப் பூசிப்பவள் சாலினி எனப்பட்டாள். கண்ணகி கோட்டத்தில் நித்திய பூசைபுரிதற்கு, தேவந்தி என்ற பார்ப்பன மாது நிய மிக்கப்பட்டிருந்தனள். இதனால், பெண்தேவதை களைப் பூசிப்பதற்குப் பெண்பாலாரையே நியமிப்பது பண்டைவழக்க மென்பது தெரியலாம். இதுவே வட நாட்டு மரபாக இன்றும் உள்ளது. இப் பெண்பூசகர் பயிரவி எனப்படுவர். இவ்வாறு வைதிக தெய்வங் களோடு, ஆசீவக சைன பௌத்தப் பள்ளிகளும் அச் சமயவளர்ச்சிக் குரிய சங்கங்களும் நகரப்புறஞ்சேரி களிலே அமைந்திருந்தன. அப்பள்ளிகளையும் சங்கத் தாரையும் தமிழ்மக்களும் ஆதரித்து வந்தார்கள். சுருங்கக் கூறுவோமாயின், வேதாகமவழக்கொடு அமைந்த கொள்கைகளே தமிழ்நாட்டார் கடைப்பிடித் தொழுகிய பழங்கொள்கைகள் என்றும், கடவுளும் இருவினையும் மறுபிறவியும் இல்லை என்ற நாஸ்திக மதம், அக்காலத்தில் தமிழகத்தே தலைக்காட்டியதும் இல்லை யென்றும் கிடைத்துள்ள நூல்களைக் கொண்டு நாம் உறுதிகூறலாம்.

அடுத்து, தமிழ்மக்களின் தேசாபிமானம் புகழத் தகும். தேசாபிமானம் என்பது, இராசாபிமானத்தை உள்ளடக்கியதாம். தமிழ்மக்கள் தம் அரசனைத் தெய் வத்தோடு ஒப்பவைத்து அவனாட்டின் பெருமையைக் காத்துவந்தனர். 'வண்புகழ்மூவர் தண்பொழில் வரைப்பு' என்று தொல்காப்பியனார் இட்ட ஆணைப்

படியே, அசோக சக்கரவர்த்தி காலத்துக்கு முன்னும் அதன்பின்னும், இத்தமிழகத்தைத் தனிச்சுதந்தரம் பெற்ற நாடாக வைத்த ஏற்றம், இதன் மக்க ளுடையதே யாகும். இவையெல்லாம் தங்கள் பெரு விழாக்களிலும் ஆடல் பாடல்களிலும் தம் அரசனது வெற்றி வேண்டி இவர்கள் பாடிவந்த வாழ்த்துக்க ளாலும் விளங்குகின்றன.

மூன்றுவதாக, இம்மக்கள் தத்தம் குலவொழுக் கங்களிற் குன்றுதிருந்த சிறப்பைக் குறிப்பிடத்தகும். குறிஞ்சிநிலத்துக் குன்றக்குறவர்கள் வாழும் ஊர் சிறுகுடி எனப்பட்டது. இவர்களிலே, ஆண்பாலார் தினைவிளைத்தும் தேன் எடுத்தும் வேட்டையாடியும் வாழ்வர். பெண்பாலார், தினைப்புனங்காத்தும் அரு வியாடியும் சுனைகுடைந்தும் அகமகிழ்வர் ; அரசரும் காதலிக்கும் கட்டழகு வாய்ந்தவர், இம்மகளிர். ஒரு சமயம் செவ்வேள்குன்றின் ஒரு பக்கமாக இவர்கள் தினைப்புனங்காத்துத் திரும்புகாலையிற்றுன், கணவனை யிழந்துபோந்த கண்ணகி ஆங்கு வந்து நின்றுள். அப்போது அப்பத்தினி, தங்கள் "கட்புலங்காண விட் புலஞ்சென்றது" கண்டு வியந்து, முதன் முதல் அவளைத் தெய்வமாகக்கொண்டு வழிபட்டும் குரவை யாடியும் போற்றியவர்கள் இம்மலைப் பெண்டிரே. இவரது குரவைப்பாடல்களிலிருந்து, குறிஞ்சி மக்களின் மணமுறை களவுக்கூட்டமே என்பதும், அதனை ஊர வர் நன்கறிந்தபின் பலரறி மணம் புரிந்து வாழ்வர் என் பதும் தெரியவருகின்றன. இவர் வழிபடு தெய்வம் முருகக்கடவுள். இக்கடவுள்பொருட்டு, வேலன் என்ற பூசகனுல் வெறியாட்டென்ற சாந்திக்கூத்து நடத்தப் படும்.

தங்கள் அரசன் மலைநாட்டுக்கு விசயம்செய்யும் போது, அரிய மலைப்பண்டங்களைத் தொகுத்துக் கொண்டு கூட்டமாக அவனைக் கண்டு காணிக்கையிடுவது இவர்கள் வழக்கம். ஒரு சமயம், இவ்வாறு வந்த தம்மரசன் செங்குட்டுவனுக்கு இன்னோர் சமர்ப்பித்த மலைபடு திரவியங்கள், இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் அதே மலைவாசிகள் குறிப்பிட்டுள்ள பண்டங்களுடன் பெரும்பாலும் ஒத்திருத்தலை ஆனைமலைக் கைபீது* போன்ற ஆதாரங்களால் தெரியலாம்.

இனி, ஆயராகிய முல்லைநிலமக்கள் பசுச்செல்வம் பெருகப் படைத்தவர்கள்; திருமாலவதாரமான கண்ணபிரானைத் தம் வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள்; உத்தம குணங்களும் உபகாரசிந்தனையும் உடையோர். விசேடகாலங்களில் இவர்களும் ஒரு வகைக் குரவைக்கூத்து நிகழ்த்திவந்தனர். இக்குரவை, கோகுலத்தில் கண்ணபிரான் நிகழ்த்திய 'ராஸக்கிரீடை' போன்றதாம். இது நிகழும் இடம், ஆனிரைகளின் எருக்களை வேலியாகக்கொண்ட தாதெருமன்றம் ஆகும். ஒருகால், தம் ஆயர்பாடியில் நிகழ்ந்த துன்னிமித்தங்களைக் கண்டு அதற்குச் சாந்தியாக இவ் 'ஆய்ச்சியர் குரவை' கண்ணகி காணும்படி இவர்களால் நடத்தப் பெற்றது. இக்குரவைப் பாடல்களிலிருந்து, இவர்கள் மணவொழுக்கம் நன்கு அறியப்படும். அஃதாவது: அடங்காத வலிய எருதுகளை வெளியே வாலுருவி விட்டு, அவற்றைத் தழுவிப் பிடிப்பவனுக்கே இன்ன மகள் உரியள் என்று அறுதியிட்டு, அவ்வாறு பிடித்தவற்கு அவளை அளிப்பதாகும். இம்முறை, ஆய்க்குலத்து அவதரித்த நப்பின்னை பொருட்டுக் கண்ணபிரானே

* Some Aspects of Kerala and Tamil Literature, p. 55-6.

கையாண்டதாம். எழுவர் கைகோத்து நின்று ஆடிய இக்குரவைக்கூத்து, கண்ணபிரான் நப்பின்னையை மணந்த வாலசரிதை நாடகங்களுள் ஒன்றென்பர் இளங்கோவடிகள்.

இனிப் பாலைநிலமக்கள் வேட்டுவர் எனப்படுவர். அஞ்சாநெஞ்சும் தறுகண்மையும் படைத்த வீரர்கள் இன்னோர் ; வழிப்பறி, பசுநிரைகவர்தல் முதலிய கொடுந்தொழில்களாலும் வாழ்பவர். இவர்கள் வழிபடுந்தெய்வம் பகவதி என்ற துர்க்காதேவி. அத்தேவியை இவர்கள் வணங்குமுறையும், செய்து கொள்ளும் பிரார்த்தனையும் மிக விநோதமானவை. வெளியேறிச் சென்று கொள்ளைப் பொருள்களைக் காலத்தில் வேட்டுவர் கொண்டு வாராமையால், தம் ஊர்கள் வளங்குன்றியும் மக்கள்வாழ்க்கை கெட்டும் போயினவாம். வேற்றிடங்களிலிருந்து ஆனிரைகளை அவர்கள் கவர்ந்து வாராமையால் தம்மூர் மன்றுகளெல்லாம் பாழாயினவாம். இவற்றிற்கெல்லாம், இம் மறக்குடிகள் அறக்குடிகள்போல அமைந்தடங்கியதே காரணமாம். ஆகவே இதற்குச் சாந்தியாக, தேவிக்குத் திருவிழா வொன்று எடுக்கலாயினர். குறிப்பிட்ட வேட்டுவச் சிறுமியொருத்தி, துர்க்கா தேவிபோல அலங்கரிக்கப் பெற்றுக் கலைமானொன்றின்மேல் ஏற்றப் பட்டாள். கொட்டுமுழக்கங்களுடனும் பலிப்பண்டங்களுடனும் கூட்டமாக வேட்டுவ மகளிர் பின்வரக் கொற்றவைகோயிற்கு வந்து, அச் சந்நிதிமுன் அவளை நிறுத்தித் தேவியைத் துதிக்கலானார்கள். அப்போது அச்சிறுமிமேல் தெய்வ ஆவேசம் வந்தது. அவ்வாவேசத்தில் ஏதோ சிலவற்றைக் கூறிக்கொண்டே, அவ்

விழாப் புதுமையைப் பார்த்துக்கொண்டு கோவலனுடன் இருந்த கண்ணகியின் அருகே வந்து அவளது பின்னிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டாள் அச்சிறுமி*. பின்பு, அரசனுக்கு வெற்றிவேண்டி வேட்டுவமகளிரெல்லாம் வாழ்த்தினர். இதனோடு இவ்வேட்டுவர்கூத்து முடிகின்றது.

இனி, மருதநிலத்தவரின் வழக்கங்கள் சிலப்பதிகார நாடுகாண்காதை முதலியவற்றால் அறியப்படும். இதன் மக்கள், உழவர் உழத்தியர் எனப்படுவர். இவர்கள் இயல்புகளும் செய்தொழில்களும் கூத்தும் இராசாபிமானமும் இளங்கோவடிகளாற் பலபடச் சிறப்பிக்கப் பட்டுள்ளன. அவை விரிப்பிற் பெருகும்.

இவ்வாறே கானல்வரி என்ற காதையால், நெய்தனிலத்து மக்களான பரவர், திமில் என்ற கட்டுமரமேறிச்சென்று கடலில் மீன்பிடித்து வாழும் இயல்புகளும், களவுமுறையான இவரது மணச் செய்தியும் அறியப்படும். மேற்கூறிய மருத நெய்தல் நிலத்து மக்கள் இருவரும் முறையே இந்திரனையும் வருணனையும் தம் குலதெய்வங்களாக வழிபடுவர்.

இனி, நகரத்துவாழுந் தலைமக்களிலே முதல் வருணத்தவரான அந்தணர், ஓதல் வேள்விபுரிதல் முதலிய அறுதொழிலுடையராய்ப் பிறரெல்லாம் மதித்து வழிபட வாழ்ந்தனர். ஆசான் பெருங்கணி அமைச்சர்களாகவும் இன்னோர் அக்காலத்து விளங்

* இவ்வாறு, தெரிந்தெடுத்த சிறுவர் சிறுமிகளுக்குத் தெய்வாலங்காரங்கள் புரிந்து வழிபடும்முறையை, ராமலீலா போன்ற பெரிய திருவிழாக்களில் வடநாடெங்கும் காணலாம்.

னர். இவருள் ஒரு சாராரைப் பஞ்சக்கிராமிகள் என்பர் உரைகாரர்கள்.* இதனால் பழைய பார்ப்பனக்குடி களில் இவர் ஒரு பகுதியார் என்பது தெரிகின்றது.

இப் பார்ப்பனக் குடியினரில் மாடலன், காப்பியன், கோசிகன், பராசரன் முதலிய கோத்திரத்தவர்கள் உண்டு. இவரன்றித் தம் குலவொழுக்கங்களிற் குன்றிய பார்ப்பாரும் அங்கங்கே இருந்தனர். கூத்து, வரிப்பாடல் முதலியவை புரிந்து வாழ்வது இவர்கள் தொழில். இவர் போன்றவரை "வேளாப் பார்ப்பான்" என்று அகநானூறு கூறும்.

அரசராகிய இரண்டாம் வருணத்தவரின் இயல்பு களாக இளங்கோவடிகள் கூறியவை அளவற்றன. அவற்றைத் தனிக்கட்டுரையாகவே வைத்து விளக் கத்தகும். சிலப்பதிகாரச் சரிதையிலிருந்து, 'செங்கோல் வளைய உயிர் வாழாதவர் தமிழரசர்' என்பது தெரிய லாம். இஃதொன்றே இவர் பெருமையை விளக்கப் போதியதாம்.

மூன்றும் வருணத்தவரான வணிகமக்களின் வழக்கவொழுக்கங்களும் பல. இன்னோர் இப்பர், கவிப்பர், பெருங்குடி வாணிகர் என்ற மூவகைப் பிரிவுடையராயிருந்தனர். கடலோடியும் தரைவழிச் சென்றும் பெரும்பொருளீட்டிய வகையில், முறையே இவர்களை மாநாய்கர் மாசாத்துவர் என இருபிரிவின ராகக் கூறுவர். கண்ணகியின் தந்தை ஒரு மாநாய்கன் ;

---

* இலங்கை யாண்ட புவனேகபாகு என்ற வேந்தன், பஞ் சக்கிராம வேதியரைத் தன் நாட்டிற் குடியேற்றினன் என்று தக்ஷிணகைலாச புராணத்தின் பாயிரங் கூறுகின்றது.

கோவலன் தந்தை ஒரு மாசாத்துவன்.* மிக்க செல்வம் படைத்த வணிகர்க்கு அரசன் எட்டி என்ற பட்டமும் அதற்குரிய பொற்பூவும் புரவுநிலங்களும் அளித்துச் சிறப்பித்து வந்தான்.

இவ்வணிகரது மணமுறை வேதத்துக்கண்ட பிராசாபத்தியம் என்பர் பழைய உரைகாரர்கள். அஃதாவது, கன்னியைக் கொள்ளற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசப்பொருளினும் இரட்டிப்பு அளவாக, அக்கன்னியைப் பெற்றோர் மணமகனுக்கு அளித்து மகட் கொடுப்பதாகும். கோவலன் கண்ணகிகளின் திருமணச் செய்தி கூறுமிடத்தில்—

> "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
> தீவலஞ் செய்து"

அவர்கள் திருமணம் பெற்றார் என்பர் இளங்கோவடிகள்.

இனி, நான்காம் வருணத்தவர், உழுவித்துண்ணும் வேளாண்மாந்தராவர். பொதுவாகக் கூறுவோமாயின், நாட்டின் செல்வப் பெருக்கிற்கு மூலமான குடிகளில் இவரே தலைசிறந்தவர் எனலாம். இவர்களது பணிவடக்கங்களும் உபகாரச் செயல்களும் உலகறிந்தவை.

மேற்கூறிய குடிமக்களிலே, அரசர்களால் மதிக்கப் பெற்ற குறுநிலமன்னர்களும், ஓவியர் சிற்பர் முதலிய தொழிலாளிகளும் அடங்குவர். அதனால் இவர் வழக்

* மா சாத்து - பெரிய வணிகர் கூட்டம்; அக்கூட்டத் தலைவன், மாசாத்துவன் என்க.

கங்கள் அக் குடிமக்களொழுக்கங்களின் வேறுபட்டன வல்ல என்றும், கலப்புச்சாதி மக்களும் இத்தகையவரே யென்றும் அறியத்தகும்.

இனிப் பொதுவான வழக்கவொழுக்கங்கள் பல உண்டு. மகளிரெல்லாம் மாலைக்காலத்தில் மணிவிளக்கேந்தி நெல்லும் மலரும் கலந்து தூவித் தம் இல்லுறை தெய்வத்தை வழிபடுவர். இரவிற்கென்று அவர்கள் ஒருவகைக் கோலங் கொள்வதுண்டு. சுமங்கலைகளான பெண்டிர், மங்கலக் குறியாக நெற்றிக்குத் திலகமிட்டுக் கொள்வது மரபு. ஆனால் ஆடவர்கள் நெற்றிக்கிட்டுக் கொண்டு மங்கல காரியமோ வழிபாடோ செய்தவர் என்பதற்குச் சங்க நூல்களில் யாதொரு குறிப்புங் காணப்படாமை வியப்பாகவே உள்ளது. மேன்மக்கள் தாம்பூலந் தரிப்பதுண்டென்பது இளங்கோவடிகள் வாக்கால் அறியலாம். ஆனால் பிறரை உபசரிக்குங் காலத்திலோ, உண்ட பின்போ பிற்காலம்போலத் தாம்பூலம் வழங்குவதும் தின்பதும் ஐந்திணை மக்களிடையே காணப்படவில்லை. சந்தன மணிவதும் பூச்சூடுவதும் தமிழ்நாட்டார் சிறப்பாகக் கொண்டவை எனலாம். மகப்பேறும் மரணமுமாகிய காலங்களில் 'வாலாமை' என்ற தீட்டுக்காப்பது வழக்கம். வணிகர் குலத்துக்குப் பதினன்கு நாள் இத்தீட்டு உண்டு என்று சுமிருதி நூல்கள் கூறும். கண்ணகி 'ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கிய' பின் கணவனுடன் விண்ணுலகஞ் சென்றுள் என்றுள்ள வரலாற்றை நோக்குமிடத்து, இத்தீட்டுக்கழிவின்பின், தன் கணவனைக் கூடும் மங்கல நாளுக்காக அவள் காத்திருந்தவள் போலும் என்று கருத இடந் தருகின்றது. கணவனை இழந்த மகளிர், முதலில் தம் கைவளைகளை உடைத்தெறிதல் மரபு.

நகரத்து மேன்மக்கள் இராசவாகனம் என்ற கோவேறு கழுதை, கொல்லாப்பண்டி, கூடாரவண்டிகளில் ஏறிச் செல்வர். அலங்காரமான யானைமுகவோடம் குதிரைமுகவோடங்கள் ஆறுகளைக் கடக்க உபயோகப்பட்டன. யவனர் என்ற புறநாட்டவர் அரசரின் வாயில்காவலராக நியமிக்கப்பட்டிருந்தனர். அவ் யவனர் முதலியோரது வகைவகையான வியாபாரக் கப்பல்கள் துறையறிந்து கரைசேர, கடற்கரையில் கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டிருந்தது. தீநா முதலிய விளக்குகளும் ஆவண வீதிகளில் மிளிர்ந்தன. சாஸனமும் இத் தீநாவைக் குறிப்பிடுகின்றது. விற்பனைப் பண்டங்கள் கொடிகளால் அறிவிக்கப்பட்டு வந்தன. அக்கரைச் சீமையினின்று அரிய பண்டங்கள் கடற்கரைகளிற் குவிக்கப்பட்டு விலைச்சென்றன. இரத்தினங்களிலும் உலோகங்களிலும் பல்வகைப் பருத்தி நூல்களிலும் பிறவற்றிலும் தத்தம் அரிய தொழிற்றிறமைகளைக் காட்டிவந்த எண்ணிறந்த தொழிலாளர்கள் மலிந்திருந்தனர். முடிவாக, அரசியல் பிழையாமலும், பத்தினிவணக்கத்தைப் புரிந்தும், ஊழ்வினை வலியை உணர்ந்தும்—சிலப்பதிகாரத்தின் முடிந்த கருத்தின்படியே—தமிழ் மக்கள் யாவரும் ஒழுகித் தமிழகத்தை ஓங்க வைத்தனர்.

12. ஒரு பழைய திருவிழாக் காட்சி

'கோழி கூவிப் பொழுது புலர்ந்தது' என்பது புலவர் மேற்கோள் புரியும் ஒரு பழைய தொடர். உணர்ச்சியற்றுத் தூங்கும் உலகத்தை முன்னதாக எழுந்து துயிலுணர்த்துவது கோழியே யன்றோ? ஆனால், மதுரை மாநகர் மட்டும் கோழிக்குரலால் துயிலெழுவதில்லையென்றும், வேதியரது இனிய வேதவொலியே அதிகாலையில் அந்நகர் எழுவதற்குக் காரணம் என்றும் சிறப்பித்தனர் ஒரு சங்கப்புலவர். இத்தகைய பெருநகரம் மேற்குறித்த இரண்டு காரணங்களாலுமன்றி, ஒருநாள் வைகறையில் மிகுந்த மனவெழுச்சியும் பரபரப்புங் காட்டி நின்றது. அந்நகர வீதிகளெல்லாம் விளக்கு வெளிச்சங்களால் மிளிர்ந்தன. மேன்மக்களும் நகரமாந்தரும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தத்தம் தகுதிக்கேற்ற ஆடையாபரணங்கள் அணிந்தவராய், மேற்றிசை நோக்கி விரைந்த வண்ணமிருந்தனர். அந்நகரச் செல்வர்கள் வேறு வேறு ஊர்திகளிலே அணியணியாகச் சென்ற காட்சி, கண்களுக்குப் பெரியதொரு களிப்பை விளைத்தது. இத்தகைய எழுச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் யாது? திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் வள்ளி திருமணத் திருவிழாவே அது.

கூடல் மாநகரின் மேல்பால் உள்ள அப்பரங்குன்றிலே அதிகாலையில் நடைபெறப் போகும் அத்திருநாளைக் கண்டு களிக்கும் பெருவிருப்பமே, அந்நகர மக்களில், ஒவ்வொருவரையும் இவ்வாறு முந்தும்

---

* கலைமகள் பத்திரிகையில் வெளிவந்தது.

படி செய்தது. அரசனான பாண்டியனும் தன் பெரும் பரிவாரங்களுடன் இக்களிப்பிடையே கலந்துகொண்டான். அவனால் நகர முழுவதுமே அவ்வைகறையில் அடைந்த குதூகலத்துக்கு அளவில்லை. அக்கூட்டத்திடையே இயலிசைகளில் வல்ல பெரும் புலவரொருவரும் தம் குடும்பத்துடன் சென்று கொண்டிருந்தார். அவர் பெயர் நப்பண்ணனார் என்பது. தம்மூரிலிருந்து அத்திருநாளைத் தரிசிக்கப் புறப்பட்ட அவர், தம் வாழ்நாளிற் கண்டிராத அற்புதக் காட்சிகளை யெல்லாம், சென்ற வழியிலும் திருப்பரங்குன்றின்மேலும் கண்டு உள்ளம் பூரித்தனர். பெருஞ் சிரமத்துடன் அவர் தம் சுற்றத்தை அழைத்துக்கொண்டு சென்று, திருமணக் கோலத்தோடு தரிசனந் தரும் முருகக்கடவுள் திருமுன்பு வந்து நின்றார். நின்ற அப் புலவர்திலகர், இசை நலமிக்க காந்தாரப் பண்ணில் இனிய குரலால் அக்கடவுளை முன்னிலைப்படுத்தித் தாம் அடைந்த வியப்பும் உவப்பும் வெளிப்படப் பாடுவதைக் கேண்மின் :—

"தெய்வலோகத்தில் விரும்பத்தக்க சீரிய வாழ்க்கையையும் விட்டு இத்திருமலையிற் கடம்ப மரத்தின் கீழே பெருவிருப்புடன் அமர்ந்தருளும் பெருமானே! 'தேவர்கள் நுகரும் இன்பத்தை மக்களும் அடைக' என்ற திருவுள்ளத்துடன், நீ இன்று அளிக்கும் வள்ளி திருமணக் காட்சி, துறக்கத்தில் நடக்கும் தெய்வயானை திருக்கலியாண வைபவத்துடன் மாறு கொள்வதோ என்று கருதும்படி உள்ளது.

"அண்ணலே! அறிவிலும் வீரத்திலும் அதிசயித்து விளங்கும் மதுரையம்பதியில், ஆடவரும் மகளிரும், தாமின்புற்றுக் களித்த இரவின் கடையாமத்தில்

எழுந்திருந்து, தத்தமக்கேற்ற ஆடையணிகளையும் மாலைகளையும் அணிந்தவர்களாய், குதிரைகளின் மேலும் இரதங்களின்மேலும் பெரு விளக்குகள் இருளை யகற்றச் செல்கின்ற காட்சி, இந்நிலவுலகில் நல்லறங் களைப் புரிந்த புண்ணியசீலர், அவற்றின் பயனை நுகர் தற்குத் தேவருலகை நோக்கிச் செல்வது போலவே உள்ளது.

"மதுரைக்கும் இக்குன்றிற்கும் இடையே தண் மணல் பரந்து கானல்போன்றுள்ள வழி முழுதும் யாத்திரை செல்லும் மக்கட் கூட்டத்தின் மாலை யணிந்த தலைகளால் இடைவெளியின்றி நெருங்கி யிருப்பது, பூமிதேவிக்கு இட்ட பூந்தார்போலத் தோன்றுவதாகும்.

"பேரறிவு படைத்த பாண்டியன், தன் மடமயி லனைய தேவியருடனும், கண்ணனைய மந்திரிகளுடனும் நாடும் நகரும் தன்னை நெருங்கக் குன்றின் தடவரை மேல் ஏறி, நின் திருக்கோயிலை வலமாகச் சூழ வருவது, சந்திரனுடனே தாரகைகள் மேருவின் பக்கத்தைச் சுற்றிவருவது போலும்.

"குன்றில் ஏறமுடியாத யானை குதிரை தேர்களை, மக்கட்டொகுதி செல்லும் வழியினின்று விலக நிறுத்தி யிருத்தலாலே, அவற்றுற் பரந்த மலைக் கீழுள்ள இடைநிலமானது பாண்டியனது பாசறை போலும் பண்புடையதாகும்.

"அப்பாண்டியனுடன் சென்ற மக்களிலே, மலை வாழ் குரங்குகள் அருந்தும்படி அவற்றுக்குப் பண் ணியாரங்களைப் படைத்து உதவுவோர் சிலர். கரு மந்திகளுக்குக் கரும்புகளைக் கொடுப்போர் சிலர்.

தெய்வத்தன்மை வாய்ந்த பிரம வீணையை எழுப்பி வாசிப்போர் சிலர். புல்லாங்குழலை விரல்வைத் தூதி இன்னிசையை அளப்போரும், யாழில் இனிய பாணிகளை உண்டாக்கி அதன் இன்பத்தை நுகர்வோரும் வேறு சிலர். திருக்கோயிலில் நிகழும் பூசனைச் சிறப்புக்களை எடுத்தியம்புவோர் சிலர். யாழ்ப்பண்களுக்கேற்ப மத்தளங்கொட்டி மகிழ்வோர் மற்றுஞ்சிலர். இவ்வாறாக விளங்குவது, திருவிழாக் காலத்து நின் குன்றின் சிறப்பு.

"நின் கோயிலின் பக்கத்தே மூங்கில்களும் பாறைகளுமுள்ள அகன்ற இடத்தில் அமைக்கப்பட்ட மண்டபங்களில், அசுவதி முதலிய நாண்மீன்களையும் விண்மீன்களையுமுடைய துருவசக்கரத்தைச் சூரியன் முதலிய கிரகங்கள் சுற்றிவருவதுபோலக் காட்டி வரையப்பட்ட ஓவியத்தைக் கண்டு உவப்போர் ஒருசார். 'இவள் இரதி, இவன் காமன்' என்று அவ்விருவரின் சித்திரங்களைக் கண்டு கூறிக் களிக்கும் காதலரான ஆண் பெண்கள் ஒருசார். 'இதோ தோன்றுகின்ற பூனை, இந்திரன்; இவ்விடம் வந்த கோதமமுனிவர் இவர்; இம்முனிவரின் கோப மிகுதியால், இவர் மனைவியான அகலிகை கல்லுருவடைந்தபடி அது' என்று கதை விவரங் கூறுவோர் ஒருசார். இவ்வாறு, ஒருவர் சுட்டிக் கூறவும், கேட்டவற்றிற்கு மற்றவர் விடை தரவும் பல்வகை ஓவியங்களும் அழகாக எழுதப்பட்ட சித்திர மண்டபங்கள் மங்கலம் அளிப்பனவாய் அமைந்தன நின் மலையில்.

"நெடியோய்! நின் குன்றின் இடவகைகளை என்னென்று கூறுவேன்! அங்கே, தன் பெற்றோ

567

ருடன் சென்ற பேதைப் பருவத்துப் பெண் ஒருத்தி இடையிடையேயுள்ள காட்சிகளைக் காணும்விருப்பால், அவர்களை விலகி அயலிடமொன்றிற் புகுந்தாள். புகுந்தவள் வழி தப்பி, 'ஐயோ வந்த வழியை மறந்தேனே! என் செய்வேன்!' என்று திகைத்து 'அம்மே' என்று கூக்குரலிட்டனள். அக்குரலை அங்குள்ள குகைகள் ஏற்று அவ்வொலியையே திருப்பி வெளியிடவும், அதன் தன்மையறியாமல், பெற்றோரே தன்னை அழைப்பதாகக் கருதி அக்குரல் வந்த இடத்தே வர, ஆங்கும் அவர்களைக் காணுமல் அவள் மீள மீளக் கூவிக் கொண்டே செல்வாளாயினள். அடியார்களின் வாழ்த்தை விரும்பும் நினது குன்றம், இவ்வாறு அறியாச் சிறுமியர்க்கு மருட்கையை விளைப்பதாக உள்ளது.

"மற்றுமோரிடத்தில், அழகிய மரக்கிளையிலிருந்த தளிர்களை விளையாட்டாகப் பெண்கள் சிலர் கீழுள்ள சுனையில் விழும்படி உதிர்த்தனர். அத்தளிர்கள் எடுத்த தலையோடு, பூக்களுடனும் மொட்டுக்களுடனும் நீரில் மிதக்கவே, அவற்றை முறையே ஐந்தலை நாகமாகவும் அவற்றின் குட்டிகளாகவும் எண்ணி மருண்டு ஓடலாயினர், அம்மகளிர். வேறு சிலவிடங்கள், பெண்களின் வாய்போலும் ஆம்பலும், கைபோலும் காந்தளும், எருவை வேங்கை தோன்றி இலவு நறவு கோங்கு இவற்றின் பூக்களும் பல்வகை மாலைகள் போல நெருங்கிப் பூத்திருத்தலால், விடியற்காலத்தே வெவ்வேறு நிறங் கொண்டு தோன்றும் வானம்போல விளங்குவனவாயின.

"சூரனாகிய மாவைத் தடிந்து கிரவுஞ்ச கிரியை வேலையிட்டுத் துளைத்தோய்! பரங்குன்றத்தில் நிக

ழும் இத்திருவிழாவில் நின் சேவற்கொடியை ஏற்று தற்கு யானை நிற்கின்றது. அதன் மத்தகத்திலே குங்குமத்தால் அலங்கரித்துப் பூக்களைச் சூட்டிச் செவிக்கவரிகளைச் சாத்திப் பவளக்காம்புள்ள பொற் குடையை மேலே எடுத்து உவப்போடும் அந்த யானைக்குச் செய்யும் பூசனையிலே, அதற்குக் கொடுக் கும் கவளங்களின் மிச்சிலை உண்ணுத மகளிர் யாவ ருளர்? உளராயின், அவர்கள் தங்கள் கணவரின் பேரன்பைப் பெருதவர் ஆவர்; நல்ல நாயகரை அடையப் பெருதவரும் ஆவர்.

" வள்ளி மணுள! எங்கள் வாழ்த்தினை நின் செவிக்குச் சிறந்த நல்லுணவாகக் கொள்ளல் வேண் டும். அன்புடைமையாலன்றே, குறவர் குலத்துப் பெண் கொடியை நீ மணந்து மகிழ்வது? அதுபோல, அருளுடைமையால், எங்கள் ஓவ்வாத வாழ்த்தையும் கேட்டருள்க: நீ அணிந்த உடையும் மாலையும் செந் நிறங் கொண்டவை. இவற்ருேடு, நின்கை வேலும் பவளத்தின் நிறம் உடையது. உன் திருமேனி வண் ணமோ எரியுந் தீயை ஒத்தது. திருமுகந்தான் இள ஞாயிறே போலும். இத் திருமலையில் கடம்பின் பக்கத்தே இவ்வகை இயற்கை வனப்புக்களுடன் எழுந்தருளியுள்ள உனது அழகிய திருமணக் கோலத்தை உடன்வந்த எம் சுற்றத்தோடும் வாழ்த்து கின்ற வாழ்த்து இதுவேயாம்.'

மேற்கூறிய பொழிப்பு, சங்ககாலத்து நூலான பரிபாடலில் பத்தொன்பதாம் செய்யுட்கு உரியதாகும். இதன் மூலத்தின் அமைப்பும், அழகும் நம்மனோர் யாவரும் சுவைத்து இன்புறத்தக்கன. இதனால் முரு

கக்கடவுளின் படைவீடுகளுள் ஒன்முன திருப்பரங் குன்றத்தில் வள்ளி திருமணவிழா இன்றுபோலவே பண்டும் நிகழ்ந்து வந்ததென்பதும், அதனைக் கண்டு களிப்பதில் மதுரை மக்கள் காட்டிவந்த பெருமகிழ்ச்சி யும் நன்கு தெரியலாகும். விழாக்காலத்து அக்குன் றத்தில் அமைந்த பல்வகைக் காட்சிகளும் படமெடுத் தது போலக் காட்டப் பட்டுள்ளன. ஆங்குள்ள சித்திர மண்டபங்கள் இக்காலத்தில் இல்லையேனும், அதன்கண் அமைந்திருந்த ஓவியங்களை நாம் நேரிற் காண்பது போலவே கவி சித்திரித்துக் காட்டுகின்முர். அவர், சிறுமி யொருத்தியின் மடமைச் செயல்பற்றிக் கூறிய செய்தி படித்து இன்புறற்குரியது. திருவிழாவில் சேவலங்கொடியை ஏற்றுதற்கு நிற்கும் யானைக்குப் பூசனை புரிவதும், அந்த யானை உண்ட கவளமிச்சிலைப் பெண்பாலாரெல்லாம் எடுத்து உண்பதும் அத்தலத்து வழக்கங்கள் என்பது நப்பண்ணனார் வாக்கிலிருந்து வெளியாகின்றது.

இறுதியில் நம் புலவர், முருகக்கடவுளை மனவுருக் கத்துடன் துதித்துத் தம் பாடலை முடிக்கின்முர். இயற்கை வளங்களையும் காட்சிகளையும் எடுத்துரைப் பதில் பண்டைப் புலவர்க்கு இருந்த சிறப்பியல்பினுக்கு, இப் பரிபாட்டமைதி ஒரு தக்க எடுத்துக்காட்டு அன்ருே?

13. திருமால் குன்றம்

திருமால் கோயில்கொண்டுள்ள திருப்பதிகளிலே, திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை என்ற மூன்றும் மிக்க பழைமையும் பெருமையும் பெற்றவை. இவை சோழமண்டலம், தொண்டை மண்டலம், பாண்டிய மண்டலங்களில் முறையே அமைந்து தமிழ் நாட்டை அலங்கரித்து விளங்கு வனவாகும். இச்சிறப்புப் பற்றியே அடியார்களான ஆழ்வார்கள் பெரும்பாலராலும், ஸ்ரீ ஆண்டாளாலும் இத்தலங்கள் இன்னிசைப் பாடல்பல பெற்று ஏற்றம் பெறலாயின. அம்மட்டுமின்றி, "சங்கமுகத் தமிழ் மாலை" "சங்கத் தமிழ்மாலை" என்று அவர்களால் சிறப்பிக்கப்பட்ட சங்ககாலத்துச் சான்றோர்களாலும் விசேடமாகப் புகழப்பட்ட தலங்கள் இவை. அக் காலத்தவரான இளங்கோவடிகள் என்ற சேரர்குலத் தோன்றல், தம் நாளில் பிரபலமாக விளங்கிய திருமால் தலங்கள் இம்மூன்றுமே என்று சிறப்பாகக் குறிப்பிட் டிருப்பதும் அறியத்தக்கது. திருமாலிருஞ்சோலையை அப்பெயராலும், அழகர் திருமலை, இருங்குன்று, மாலிருங் குன்றம் என்ற பெயர்களாலும் முன்னூல்கள் வழங்கு கின்றன. இத்திருமலை, சோழர் தலைநகரான உறை யூரிலிருந்து பாண்டியர் தலைநகரான மதுரைக்குச் செல்லும் வழியொன்றில் அமைந்து, பிரயாணிகளின் வழிபாட்டுக்குப் பெரிதும் உரியதாக இருந்தது. திரு மாலின் திருமேனியாகவே இத்திருமலையைக் கருதி, மக்களெல்லாம் இதனைத் திசை நோக்கித் தொழுது வந்தனர் என்று சங்க நூலாகிய **பரிபாடல்** கூறும். இத்திருமலையைத் தரிசித்துக்கொண்டு, திருவரங்கத்

துக்குப் புறப்பட்ட மலைநாட்டுள்ள மாங்காட்டு அந்தணனொருவன், இடைவழியில் தன்னைச் சந்தித்த கோவலனுக்கு மதுரை செல்லும் மார்க்கங்களைக் கூறும்போது, இத்திருமலைக்குப் போகும் வழியையும் அதனில் உள்ள விசேடங்களையும் பற்றிக் கூறியதாக இளங்கோவடிகள் பாடுவன அடியில் வருமாறு:

"(இங்கிருந்து) வலப்பக்கமான வழியில் நீங்கள் செல்ல விரும்பவில்லையானால், இடப்பக்கத்துக் காட்டுவழியே போய்த் திருமால்குன்றத்துச் சேர்வீராக. அவ்விடத்தே மிக்க மயக்கத்தைக் கொடுக்கும் பிலவழியொன்று உண்டு. மலையிடையிலுள்ள அவ்வழியிலே தேவர்களால் ஏத்தப்படுவதும், யாவரும் வியக்கத்தக்கதுமான புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்ற பெயர்கள் பெற்ற மூன்று பொய்கைகள் அடுத்தடுத்து உள்ளன. அவற்றுள், புண்ணிய சரவணப் பொய்கையில் நீராடினால், இந்திரன் இயற்றிய ஐந்திரவியாகரணத்தின் அறிவு உண்டாகும். பவகாரணியில் ஆடுவோர் பழம் பிறப்புணர்ச்சியை அடைவர். இட்டசித்தியில் ஆடுவாராயின், நினைத்த வெல்லாம் கைகூடும். இத்தகைய பிலத்துவாரத்துள்ளே நீங்கள் புக விரும்பின், ஆங்குத் திருமலையில் கோயில் கொண்ட பெரியோனது சேவடிகளைத் திரிகரணங்களாலும் தொழுது, அம்மலையை மும்முறை வலஞ்செய்து செல்வீராக. ஆங்குள்ள சிலம்பாறு என்ற நதியின் கரையில், பூத்த கோங்க மரத்தின் நிழலில் வாழ்பவளும், பொற்கொடியும் மின்னலும் போல விளங்குபவளுமான அழகிய பெண்ணொருத்தி உங்கள் முன்பு தோன்றுவள். தோன்றி, 'இம்மைக்கு இன்பமும், மறுமைக் கின்பமும், இம்மை

மறுமை யிரண்டுமின்றிச் செம்மைநிற்கும் பேரின் பமும் ஆன பொருள்கள் எவை? அவற்றை எனக்குக் கூறுமின்; யான் இத் தாழ்வரையில் வாழ்வேன்; வரோத்தமை என்று கூறப்படுவேன். யான் வினவிய இவற்றை உரைத்திராயின், உமக்கு இப்பொழுதே இந்தப் பில வாயிலின் கதவைத் திறந்து வழிவிடுவேன்' என்று சொல்லுவாள். இவற்றிற்குத் தக்க விடை உரைத்தால், அப்பெண் தானே கதவைத் திறந்து, 'இது நீர் செல்லற்குரிய நல்வழி' என்று காட்டுவள். அவ் வழியின் இடைகழியைக் கடந்து சென்றால், இரட்டைக் கதவுகளுடைய வாயிலொன்று உண்டு. அதனையும் தாண்டிச் செல்லும் போது, பாவைபோன்ற வளான மற்றொருத்தி உங்கள் முன்பு வந்து தோன்றி, 'அழிவற்ற இன்பம் யாது? அதனை உரைத்திராயின், இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றின்பங்களில் நீர் விரும்பிய பொருளைப் பெறுவீர்' என்று கூறுவள். அவளுக்கு ஏற்ற விடையை நீவிர் கூறாமற் போயினும் உங்கட்குத் துன்ப மிழைக்காமல், போதற்குரிய நீண்ட வழியில் உம்மைப் போகும்படி செலுத்துவள். அவள் கேட்டதற்குத் தக்க விடை உரைப்பவர்களை மேற்கூறிய பொய்கைகளின் கரைக்குத் தானே அழைத்துச்சென்று, அவற்றை அவர்கட்குக் காட்டி மீள்வாள். வேத மந் திரங்களாகிய பஞ்சாக்ஷரம் அஷ்டாக்ஷரங்களில் ஒன்றை மனமார ஓதி. வேண்டியதை நினைந்து அப் பொய்கை யொன்றில் ஆடினால், தவஞ் செய்தோர்க்கும் கிடையாத பயன்கள் கிட்டும். இத்தகைய பொய்கைப் பயன்களை நீர் விரும்பவில்லையாயின், அத் திருமலையின் மீது. நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியுள்ள திருமாலின் பொற்றாமரைபோலும் திருவடிகளை உள்

ளத்துக் கொள்ளுமின். அப்பொழுது, அப்பெருமானது கருடப்புள்ளெழுதிய கொடிமரம் உங்கள் கண்முன் தோன்றும்; அதனைக் கண்டவளவிலே, அவன் திருவடிநிலை உங்கள் பிறவித் துன்பத்தைக் கெடுக்கும். அதனால், பின்பு பரமபதம் செல்லுதலும் மெய்யே என்ற துணிவுடன் நீங்கள் மதுரை மாநகரத்தை நோக்கி ஏகலாம்'' என்பது.

இவ் வரலாற்றிலிருந்து, அழகர் திருமலை சங்க காலத்திலே அடைந்திருந்த பிரபலமான நிலைமை வெள்ளிடை மலைபோல வெளியாகும். வடக்கிலிருந்து அத் திருமலைக்குச் செல்லும் இடப்பக்கத்து மார்க்கம் மலைகளின் இடையேயுள்ள கணவாய்வழி யென்பதும், அவ்வழியே செல்லும்போது, இடையிற் புண்ணிய தீர்த்தங்களாக அக்காலத்து மிகப் பிரசித்தி பெற்றிருந்த மூன்று புஷ்கரிணிகளிலும் மூழ்கி அத்திருமலையிற் புகுவது மரபு என்பதும் நன்கு விளங்கும். இந்தப் பொய்கைகளைப் பற்றிய செய்திகள் பிற்காலத்தும் வழங்கி வந்தனவே. இவற்றைப் பற்றிக் கூறுமிடத்தில், சிலப்பதிகார அரும்பத வுரைகாரர், 'இந்த விசேடம் எக்காலத்தும் உள' என்று எழுதியிருப்பதால், இதனை அறியலாம். ஐந்திரவியாகரணம் இளங்கோவடிகள் காலத்தும் வழங்கியதென்பதும், அடைதற்கரிய அந்த சாஸ்திரஞானம், புண்ணிய சரவணத்தில் மூழ்குவோர்க்குச் சித்திப்பதாகக் கருதப்பட்டதென்பதும், அச் சேரவடிகள் கூறுதல் குறிப்பிடத் தக்கது. இத்தகைய புஷ்கரிணிகள் எவை என்று, இப்போது தெளிவாக அறியக்கூட வில்லை. அம்மலைப்பக்கத்து வாழும் மகளிர் செய்திகளினின்று, அவர்கள், அத்திருமலைக்குரிய வழி

யைக் காத்துக் கொண்டும், தலதரிசனஞ் செய்ய வரும் நல்லோர்க்குத் துணை புரிந்துகொண்டும் வந்த தெய்வப் பெண்கள் போன்றவர் என்று தோன்றுகிறது. அவர்கள் வழிச் செல்வோரைக் கேட்டு வந்த கேள்விகளால், இம்மை யின்பத்தையே விரும்புவோரும், துறக்க வின்பங்களை விரும்புவோரும், அவ்விரண்டுமின்றி, வீட்டின்பத்தையே விரும்புவோரும் என மூவகை நோக்கங் கொண்ட மக்கள் அத்திருமலையைத் தொழ வந்தனர் என்பது தெரியலாம். வைணவ சமயக் கொள்கையும் இதுவேயாம். இம்மகளிர்க்கு ஏற்ற விடையளிப்போர் அவ்வவர் தகுதிக்கேற்றபடி அம்மகளிரால் உபசரிக்கப் பெறுவர்.

இவ்வாறு சேர முனிவர் தங்காலத்து விளங்கிய அழகர் திருமலைப் பெருமைகளைக் கூறியதுபோலவே, அவர் காலத்து வாழ்ந்த பாண்டியனிளவலான இளம் பெருவழுதியார் என்பாரும் இம்மலையைப் பாடிய பாட்டொன்று உண்டு. அது, பரிபாடல் என்ற சங்க நூலின் பதினைந்தாஞ் செய்யுளாகும்.

"தெய்வம் பெட்புறு
மலரகன் மார்பின் மைபடு குடுமிய
குலவரை சிலவே; குலவரை சிலவினும்
சிறந்தது, கல்லறை கடலும் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறுவே றுருவி னொருதொழி லிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கு இருங்குன்றம்;
நாறிணர்த் துழாயோ னல்கி னல்லதை
ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்;
அரிதிற் பெறுதுறக்க மாலிருங் குன்றம்
எளிதிற் பெறலுரிமை ஏத்துகம்"

என்று அவ்வழுதியார் இத்திருமலைச் சிறப்பை இசையில் அமைத்துப் பாடுவர். இம்மலையில் திருக்கோயில் கொண்ட மூர்த்திகள் இருவர் என்றும், அவர்கள் கடலுங் கானலும் போலவும், சொல்லும் பொருளும் போலவும் பிரிவின்றி எழுந்தருளியுள்ளனர் என்றும் இப்பாட்டினுள் இவர் கூறுதல் குறிப்பிடத்தக்கது. இவ்வுவமையினின்று, மாயவனான கண்ணபிரானும், அவர் முன்தோன்றலான நம்பி மூத்தபிரானும் (பலராமரும்) ஒருசேர ஆங்குத் திருக்கோயில் கொண்டிருந்தவர்கள் என்பது தெளிவாகும்.

> " மாயவனுந் தம்முனும் போல மறிகடலும்,
> கானல்சேர் வெண்மணலுங் காணுயோ"(திணைமாலை, 58)

> " மணிகிளர் நெடுமுடி வானவனுந் தம்முனும்போன்,
> றணிகிளர்நெடுங் கடலுங்கானலுந் தோன்றுமால் "
> (யாப். வி. 78, உரை)

என்று, இத்தகைய உவமையே, சங்ககாலத்துச் சான்றோர் பலரும் ஆளுதல் ஒப்பிடத்தக்கது.

> " இருங்குன்றத் தடியுறை இயைகெனப்
> பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே "

என அவ்விளவழுதியார் தம் பாட்டிறுதியிற் கூறுதலால், அழகர் திருமலையில் கண்ணனும் பலராமனும் சேர்ந்திருந்த நிலையே, முற்காலத்தில் போற்றப்பட்டு வந்தது என்பது தெளிவாகின்றது. இத்தகைய நிலைமை இத்திருமலையில் மட்டும் அன்று ; தமிழ்நாட்டில் விளங்கிய பெரிய நகரங்களிலும், அவ்விரு மூர்த்திகளும் சேர்ந்தோ தனித்தனியாகவோ கோயில் கொண்டிருந்த

தைப் புலவர்கள் பலரும் வணக்கமுகத்தாலும் உவமை முகத்தாலும் புகழ்தலைச் சங்க நூல்களிற் பெரிதும் காணலாம்.

> " வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீல மேனி நெடியோன் கோயிலும்"
>
> " உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
> மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்
>
> " பொற்பனை வெள்ளையை உள்ளா தொழுகின்று
> சக்கரத்தானை மறப்பின்று"
>
> " கடல்வளர் புரிவளை புரையு மேனி
> அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
> மண்ணுறு திருமணி புரையு மேனி
> விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும் "

(புறம். 56, கீழ்க்குறிப்பு)

இவ்வாறு கண்ணபிரானையும் பலராமனையும் ஒருசேரத் திருக்கோயிலில் வைத்துவணங்கும் வழக்குச் சங்கத்துக்குப் பிந்திய காலங்களில் அருகியதென்றே சொல்லலாம். ஆழ்வார்களாலும் இத்தகைய வணக்க முறை சிறப்பாகக் கூறப்படாமை குறிப்பிடத்தக்கது. எனினும், இவ் வணக்கம் தமிழகத்தில் மட்டுமன்றி வடநாடுகளிலும் முன்பு பிரபலமாயிருந்த தென்பது கிறிஸ்தவாப்தத்துக்கு முன்பே அமைந்த வடநூல்களாலும் சாஸனங்களாலும் அறியப்படும். *

இங்ஙனம், திருமால்குன்றமாக இத்திருமலை வணங்கப்பெற்ற பெருமை யுடையதாயினும், சைனரும் பௌத்தரும் இதனைத் தங்கட்குச் சிறந்த குன்றமாகவும்

* ஆராய்ச்சித்தொகுதி, பக்கம், 54

கொண்டு தொழுது வந்தனர். சைனர்க்குச் சிறந்த தலங்களாகக் குறிப்பிடப்பெற்ற மலைகள் எட்டனுள் இத்திருமலையும் ஒன்ருகும்.

"பரங்குன் ருருவகம் பப்பாரம் பள்ளி
இருங்குன்று பேராந்தை யானை—அருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்ருட்டு மோபிறவித் தீங்கு"

என்பது அச் சைனர் வாக்கு. இம்மலைகளுள் இருங்குன்று என்பது இத் திருமலையே என்பது முன்பு விளக்கப்பட்டது. இவ்வாறே பௌத்தரும் இம்மலையில் தங்கி நோற்று வந்தனர். இச்செய்தி ஏறுதற்கரிய இம் மலைச் சார்புகளில் 2000 ஆண்டுகட்குமுன் இவர்களால் அமைக்கப்பட்ட பாழிகளாலும், அவற்றுள் பழைய பிராமி லிபிகளில் வரையப்பட்டுள்ள சாஸனங்களாலும் விளக்கமாகின்றது. இவ்விருவகை மதத்தவர்களும் ஆழ்வார் காலத்திலும் இம் மலையில் தங்கியிருந்தவர்களே.

"புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவும் உகந்திட்டு
எந்தைபெம் மாஞ ரிமையவர் தலைவர்
எண்ணிமுன் னிடங்கொண்ட கோயில்"

என்று திருமங்கை மன்னன் இத் திருமாலிருஞ்சோலைப் பெருமானைப் பாடுதலால் இஃது அறியப்படும். இதனுல், சைன சாக்கியர்கள் இவ்வழகர்மலைத் திருமாலைப்பற்றிக் குறை கூறி வந்தனர் என்பதும், அவற்றைப் பொருட்படுத்தாமலே, அப்பெருமான்

பழங்காலமுதல் ஆங்குக் கோயில் கொண்டு யாவர்க்கும் அருள்புரிந்து வருபவர் என்பதும் தெரியலாம்.

இனி, அழகர்மலை சூழ்ந்த நாடு முற்காலத்தில் 'இரணியமுட்டம்' என வழங்கப்பட்டு, மேலைப்பகுதி கீழைப்பகுதி என இருபிரிவு பெற்றிருந்த தென்றும், இவற்றுள் கீழிரணிய முட்டத்தைச் சார்ந்ததே இத் திருமலை என்றும் சாஸனங்களால் அறியப்படுகின்றன. பத்துப்பாட்டுள் ஒன்ருன **மலைபடுகடாம்** பாடிய **பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனுர்** என்ற புலவர் இவ் இரணியமுட்டத்தைச் சார்ந்த ஊரினர் போலும்.

இத்தகைய திருப்பதியில் பழங்காலமுதலே திருக்கோயில் கொண்டு விளங்கும் கண்ணபிரான், தம் முன்னவரான பலதேவ (பலராம)ருடன் ஒரு சேர எழுந்தருளிப் பண்டை நன்மக்களுக்கு அளித்த காட்சி, ஆழ்வார்கள் காலத்துக்குமுன்பே, அக் கண்ணபிராஞெருவர் அளவில் அமைவதாயிற்று. இப்பிரானை 'அழகர்' என்று அழைப்பர் பின்ஞேர். அதனுல் இவர் கோயில்கொண்டுள்ள மலையும் **அழகர் மலை** என வழங்குவதாகும். சித்திரா பௌர்ணிமை போன்ற பெரிய திருவிழாக்காலங்களில் இம்மூர்த்தியிடத்து அந் நாட்டுள்ள கள்வர்குலமக்கள் காட்டும் ஈடுபாட்டைக் கண்டு களிப்போர்க்கு, அநாதியாகவே அப் பெருமானது பேரருளுக்கு இலக்கானவர் அன்ஞேர் என்பது விளங்கும். இதுபற்றியே 'கள்ளழகர்' என்ற திருநாமத்தை இன்றும் அப்பெருமான் விருப்பத்துடன் பூண்டு விளங்குகின்ருர்; அப்பக்கத்து மக்களின் இவ்வரிய பத்தித்திறத்தைப் பெரியாழ்வாரும்—

"புனத்தினை கிள்ளிப் புதுவவிக் காட்டியுன்
பொன்னடி வாழ்க வென்று
இனக்குறவர் புதிய துண்ணும்
எழின்மாலிருஞ் சோலை யெந்தாய்"

என்று வியந்து கூறுவாராயினர். இக்கட்டுரையுள் ஆழ்வாராதியர் காலத்துக்கு முன், அழகர் திருமலை பற்றி வழங்கிய தமிழ்வழக்குகள் 'இவை என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டது. அப்பெரியோர்களின் காலத்தும் பிற்காலத்தும் இத்திருமலை சம்பந்தமாக வழங்கும் வரலாறுகளும் வழக்குகளும் மிகப் பல. அவற்றையெல்லாம் இங்கு எடுத்துரைப்பின் விரியும்.

14. ஒரு கருங்கூத்து

" ஓங்குமலை யோங்கிமர னோங்கிமண லோங்கப
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குபுன லாறொழுகு சூழலதோர் குன்றின்
பாங்குருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச !"

" கன்னியிள வாழைகனி யீவகதிர் வாலின்
செந்நெலுள தேனொழுகு போதுமுள தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள போதா
அன்னமுள பொன்னிவளொ டன்பின்விளை யாட"

என்பது கம்பர் வரைந்த வன் சித்திரம். அகத்திய முனிவர் இராமபிரானுக்குக் கூறிய இப்பஞ்சவடி வளங் களைப் படமெடுத்ததுபோல விளங்கி நின்றது, தமிழ் நாட்டிலமைந்த மற்றொரு மலைச்சாரல். அவ்விடத்தே, சிற்றருவியின் சார்பாயுள்ள பளிக்குப்பாறை யொன் றில், வெள்ளிப் பீடத்து அமைந்த மாணிக்கப் பதுமை கள் போல, பெண்மணிகள் இருவர் வீற்றிருந்தவராய்ப் பின் வருமாறு பேசிக்கொண்டிருந்தனர்:—

ஒருத்தி—*தலைவீ ! உன் வருகை, இவ் வந்தி நேரத் தில் இன்றியமையாதிருந்தது. ஏன் இத்தனை தாமதம்? மிக முக்கியமான செய்தி யொன்றைத் தெரிவிக்கவே, உன்னை நான் இங்கு அழைத்தது.*

மற்றவள்—*தோழீ ! சிறிது காலமாக என்னைப் பற்றி ஐயங் கொண்டுள்ள அன்னையின் காவலோடு அந்தப் பார்ப்பானது தடையும் இன்று புதிதாக ஏற் பட்டது. இத் தடைகளை விலக்கி வருவதற்கே நான் சிறிது தாழ்க்க நேர்ந்தது.*

பாங்கி—*அப் பார்ப்பான் யாவன் ?*

தலைவி—நீ அடிக்கடி எச்சரிக்கை செய்து வரும் அந்தக் கூனற்கிழவன்தான்; வழுக்கைத் தலையும் வளைந்த முதுகும் அழுகிக் குறைந்த கையுமுள்ள அவனது கம்பளிக்குள் மறைந்த உருவத்தைக் காணும் போதெல்லாம், எனக்கு உண்டாம் அருவருப்புக்கு அளவுண்டோ? வேண்டுமென்று இன்று பிற்பகலில் எங்கள் மாளிகை வாயிலை விட்டு அவன் அகன்றுனில்லை. அவன் குறுக்கிட்டதால், இங்குப் புறப்பட வேண்டாம் என்று கூட எண்ணினேன். நல்ல வேளையாய் அவன் எங்கேயோ ஒழிந்தான். அன்னையும் வெளிக் காரியமாகச் சென்றனள். எனக்காக நீ காத்திருக்கக் கூடுமே என்று ஓடி வந்தேன். தோழீ! நெடு நாளாக ஒன்றுந் தெரியவாராத என் இன்னுயிர்க் காதலரைப்பற்றி ஏதேனும் புதிய செய்தி உண்டோ?

பாங்கி—பித்துக் கொண்ட அந்தப் பார்ப்பானு! அது கிடக்கட்டும். தேவீ! நாம் எதிர்பார்த்த முக்கிய காரியம் இப்போது முற்றுப்பெறும் நிலைமைக்கு வந்து விட்டது. இன்று பகலில் இவ்விடத்தே நம் தலைவரை நான் சந்திக்கலானேன். உன்னைத் திருமணம் புரிதற்கு வேண்டிய பரிசப்பொருள் முழுமையும் அவர் தேடி அமைத்து விட்டனராம். நல்ல நாள் ஒன்றில் மகட் பேசுவதற்கு உன் தந்தையிடம் அவரினத்தார் சீக்கிரமே வந்து சேர்வர் என்று உறுதி கூறினர். இன்றிரவு அவர் உன்னை இவ்விடமே கண்டு உரையாடப் பெரிதும் விரும்புகின்றார். என் வார்த்தைகளை நம்பி, அவர் விரும்பியவாறே தவறாது செய்வாயா?

தலைவி—தோழி! இனியும் இவ்வொழுக்கத்தையே அவர் விரும்புகின்றார் போலும்! எங்கள் கூட்டுறவு,

ஊரில் பெருத்த ஐயங்களை எழுப்பிவிட்டது. அந்நியர் சிலர் மகட்பேச வேண்டி எந்தையிடம் அடிக்கடி வந்து நெருக்குகின்றனர். இனி என்னிலைமை என்னுகுமோ? தெரியேன். என் காதலரின் உறுதி மொழிகளில் உனக்குள்ள நம்பிக்கையளவு எனக்கு அமையவில்லை. ஆயினும், உன் விருப்பத்துக்கும், அவரைக் கண்டு களிப்பதில் உள்ள என் அவாவுக்கும் நான் இணங்க வேண்டியவளே. எப்படியும் அவரைச் சந்தித்து நீ சொல்லிய உண்மையை இன்றிரவே அறிந்து கொள்வேன்.

பாங்கி—தேவீ ! மிகவும் நன்று. இதுதான் நான் உன்னை விரும்பி யழைத்த காரியம் ; வேறில்லை. அந்தியிருள் வந்து நெருங்குகின்றது. நம்மைப் பிறர் காண்பதன்முன் நாம் இப்புறச்சோலையினின்று மெல்ல மனைக்குச் செல்வோம்.

என்று கூறவே, அவ்விருவரும் எழுந்தனர். ஏதோ சிலவற்றைப் பேசிக்கொண்டே சென்று, அச்சோலையை அடுத்த ஊர்க்குள் அவர்கள் புகுந்தார்கள். அவ்வூர் சிறியதேயாயினும் மலைவளத்தால் மாட்சிமைபெற்று விளங்கியது, அவ்வூரிடையே அலங்காரமாகத் தோன்றிய மாளிகை யொன்றில், அப் பெண்களுள் ஒருத்தி புகுந்தாள். இரண்டு மலைகட்கு இடையில் இருந்த அவ்வூரில் இரவும் வந்து கவிந்துகொண்டது. அவ்விரவில் மக்களின் ஆடல் பாடல்களும் குன்றக் குரவைகளும் பக்கத்துள்ள குன்றுகளை எதிரொலிக்கும்படி செய்தன. நெடுநேரத்துக்குப் பின்பு, ஊராரெல்லாம் செய்தொழில் ஓய்ந்து அயர்ந்து தூங்கிவிட்டனர். ஆனல் ஓர் உருவமட்டும் அவ்வூரில் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தது. சில சமயங்களில் ஊர்க்கு

வெளியிடத்தும் அது காணப்படும். ஆனால், அது ஒரு பேயோ எனின் அன்று. வெளியூரில் ஏதோ குற்ற மொன்றைச் செய்துவிட்டு, அதற்கஞ்சிச் சில காலமாக அவ்வூரிடை வந்து ஒளித்துத் திரியும் மேற்கூறிய கூனற் பார்ப்பானது தோற்றமே அது. வயது முதிர்ச் சியும் உடல் நோயும் கூனலுருவும் கொண்ட அவனைப் பகலில் குழந்தைகள் தூரத்திற் கண்டபோதே அஞ்சி யோடிவிடும். இவற்றோடு பெண்பித்தும் கொண்ட அவன், ஓரொருகால் பெண்டிரிருப்பிடத்தை அடைந்து விட்டால் அங்குண்டாகும் குழப்பத்துக்கு அளவில்லை. இருட்சி மிக்க அந் நள்ளிரவில் தூக்கம் பிடியாமல், அவ் வூரின் புறச்சோலையிலே வாய்க்கு வந்ததைப் பிதற்றிக் கொண்டு திரிந்து கொண்டிருந்தான் அவன். அந்தச் சோலையில், நடுச் சாமத்திற் பேய்கள் நடமாடுவதுண்டு என்று அவன் கேள்விப்பட்டவனாதலால், உருவெளி யாகக் கண்ட தோற்றங்களால் அவன் வாயினின்று குழறி வந்தவை உண்டு. இவ்வாறு அலைந்து திரிந்த அம்முதியவன் ஓரிடம் வந்ததும் எதையோ கண்டு அஞ் சித் திடுக்கிட்டு நின்றான். அவன்முன் விரைந்து வந்து கொண்டிருந்த சிறிய உருவமொன்றே அவனுக்கு அந் தப் பெருந்திகிலை உண்டாக்கியது. அது, பேயா மனித' வுருவா என்ற ஐயம் முதலில் அவனுக்கு எழுந்தது. தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, தன்னை அது நெருங்கியதும் குனிந்து உற்று நோக்கி, "யார் அங்கே?" என்றான். விடை கிடைக்கவில்லை. ஆயினும், ஏதோ ஒரு பெண்ணின் உருவாக அக் கிழவனுக்குத் தோற்றினமையால், அவன் கொண்ட அச்சம், விநா டியில் காமப் பித்தாக மாறியது. "என் கையில் அகப் பட்டுக் கொண்டாய் சிறுமி! இனி உன்னை விடேன்.

இந்தா, இந்தத் தம்பலத்தை வாங்கித் தின்பாயாக" என்று தன் மடியிலிருந்த வெற்றிலை பாக்குப் பையை எடுக்கலானான். வந்த தோற்றமோ ஒன்றுக்கும் வாய் திறவாமலும் அசைவில்லாமலும் நின்ற வண்ணமே இருந்தது. அக்கிழவன் என்ன என்னவோ அதனை நோக்கிக் கேட்டும் ஒன்றுக்கும் உத்தரம் பெற்றானில்லை. அதனால் மனம் குழம்பி 'இது ஒரு பெண் பிசாசுதான்: இச் சோலையிலே திரிவதுபோலும்' என்ற சங்கையோடும், "ஏ! பெண்பேயே! நான் ஓர் ஆண்பேய். நீ ஏதேனும் கேடு சூழ்வாயானால், ஊரார் உனக்கிடும் பலிகளை யெல்லாம் நானே கவர்ந்து, உனக்கு ஒன்று மில்லாமற் செய்துவிடுவேன்" என்றான். இது சொல்லி முடிந்ததுதான் தாமதம்: மணல்களை இரு கைகளாலும் வாரிக்கொண்டு, முன்னின்ற அவ்வுருவம் கிழவன் மேல் இடைவிடாது வீசி யிறைத்தது. அதற்கு ஆற்றாத அவன் தன்னைக் கொல்லவந்த பிசாசுதான் அது என்று முடிவு செய்தவனாய், ஓரே பெருங் கூச்சலுடன் வீறிட்டுக் கொண்டு ஊரை நோக்கி ஓடலானான். என்றுங் கேட்டறியாத அப் பெருங் கூக்குரலால், ஏதோ ஆபத்தென்று அச்சிறிய ஊரின் மக்களெல்லாம் துயிலெழுந்து கிழவனை நோக்கித் திரண்டு வந்து விட்டனர். அப்பொழுதும் நடுக்கத்துடன் அவனிட்ட கூச்சல் அடங்கவில்லை. வெகு பாடுபட்டுக் கிழவனைச் சமாதானப்படுத்தி ஊரார் அவனது துயரின் காரணத்தை உசாவியபோது, புறச்சோலையிலே ஒரு பெண் பிசாசு தன்னைத் துரத்திக் கொல்ல வந்ததை விவரமாகக் கூறிப் புலம்பலானான். அதைக் கேட்ட பலரும், கிழவனியல்புகளை முன்னமே தெரிந்தவராதலால், அவனது பைத்தியச் செயல்களுள் இதுவும் ஒன்று

என்று நகையாடலாயினர். சிலர் இதன் காரணம் வேறென்று தங்கட்குள் மறைவாகப் பேசிக் கொண்டனர். அவனுல், இரவிற் பெண்டு பிள்ளைகள் அடைந்த குழப்பத்துக்கு வெகுண்டு, அவனைத் தாக்கவந்தனர் வேறு சிலர். ஒவ்வொரு வீட்டிலும் இதுவே பேச்சாகிக் கலகலப்பொலி விடியுமளவும் அவ்வூரிலே குடிகொண்டது.

அதே வைகறையில், ஊர்நடுவில் இருந்த மாளிகைப் புறத்திலே, இருவர் தனியே இருந்துகொண்டு பேசிய பேச்சும் இது பற்றியதே. தாங்கள் பேசும்போது யாரோ ஒருவர் ஒதுக்குப்புறமாகச் செல்வதுபோலத் தோன்றியதால், தங்கள் குரல்களைத் திடீரென்று அவர்கள் மெதுவாக்கிக் கொண்டு பேசியவை பின்வருமாறு :—

பாங்கி :—இரவு நடந்த கூனற்பார்ப்பானது பேய்க்கூத்து இவ்வூரால் என்றும் மறக்க முடியாததாகும். அது கிடக்கட்டும். தேவீ ! இரவுக் குறியின் முடிவு என்னவாயிற்று ?

தலைவி :—என்ன முடிவு? இதே கருங்கூத்துத்தான், இக் கூத்தில் பேயால் துரத்தப்பட்ட பார்ப்பானை எல்லாருந் தெரிவார்கள். பேயாய் நடித்தது யார் என்று தெரிய வேண்டாமா ?

இது கேட்டதும், தோழி சிறிது மருண்டு "நீ தான், தேவீ ! என்ன துணிவு ! எத்தனை பெரிய சாகசம் !" என்ருள். அது கேட்ட தலைவி, "தோழி ! புலி பிடிக்கப்போட்ட வலையில் நரி அகப்பட்டது போன்ற இக் கூத்தை நம் அருமைக் காதலர் அறிவரோ ? அறிந்தில

ராயின், நம்மை மறந்து நெகிழ்வர்போலும்" என்று கண்கலங்கிக் கூறினாள். இவள் கூறி முடித்ததுதான் தாமதம்; "மறவேன், நெகிழேன், மங்கலம் பொலிக" என்ற குரலொன்று வெளியே எழுந்து சென்றது.

---

* இச்சிறுகதை கலித்தொகையுள் குறிஞ்சிக்கலியின் இறுதியிலுள்ள "திருந்திழாய் கேளாய்' என்ற செய்யுளையும் அதன் துறைக்குறிப்பையும் பெரும்பாலும் அடியொற்றி எழுதப் பட்டது. இக்கதை, ஓற்றையங்க நாடகத்தின் அமிசங்களை நன்கு பெற்றதாதல் காண்க.

15. ஆன்மத் தியாகம்

ஆன்மத்தியாகமாவது, தனக்கோ பிறர்க்கோ உற்ற துயர் நீங்கவும், நற்பேறு அடையவும் வேண்டி உடலைப் பேணுமல் தன்னுயிர் கொடுத்தலாகும். முன்னேரும் பின்னேருமாகிய நன்மக்கள் பலராலும் மேற்கொள்ளப்பட்ட இவ்வரிய செயலை ஐந்துவகையாக நாம் பிரிவுபடுத்தலாம்.

1. குறித்த காரியம் நிறைவேற வேண்டிய விடத்தும் நிறைவேறக்கூடா விடத்தும் நிகழ்வது.
2. மானக்கேடு உற்றவிடத்து நிகழ்வது.
3. அக்கிரமங்கள் நேருமிடத்து நிகழ்வது.
4. துக்கமிகுதியில் நிகழ்வது.
5. நற்கதி வேண்டியும் பிரார்த்தனையாகவும் நிகழ்வது.

இந் நிகழ்ச்சிபற்றிய வரலாறுகள் பல, வட நூல்களாலும் தமிழ் நூல்களாலும் கல்வெட்டுக்களாலும் அறியப்படுகின்றன. இவற்றை முறையே சுருக்கமாக விளக்குவேன்.

1. குறித்த காரியம் நிறைவேற வேண்டிய இடத்து நிகழ்வது :— இலங்கையில் இராவணனுற் சிறை வைக்கப்பட்ட சீதாதேவியை மீட்பதற்காக இராமபிரான் தென்கடலை அடைந்தபின், தம் பெரும் படைகள் கடந்து செல்வதற்குத் தடையாக நின்ற அக்கடலைத் தாண்ட விரும்பி வருணபகவானை வழி வேண்டினர் என்ற செய்தி பலரும் அறிந்ததே. அவ்

வாறு வருணனை வேண்டி வரங்கிடந்த போது, அப் பெருமான் "தருப்பைப் புற்களைப் பரப்பி அதனிற் படுத்தவண்ணம் தெற்குமுக நோக்கியவராய், மூன்று நாட் பட்டினி விரதம் மேற்கொண்டார்" என்று இராமாயணம் கூறுகின்றது.

"தருண மங்கையை மீட்பதோர்
நெறிதரு கென்னும்
பொருள் நயந்துநன் னூல்நெறி
யடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் கிடந்தனன்
கருங்கடல் நோக்கி
வருண மந்திர மெண்ணினன்
விதிமுறை வணங்கி"

என்றார் கம்பரும். இனி, ஆரணியத்தில் இராம தரிசனத்தை எதிர்பார்த்திருந்த முனிவரான சரபங்கரும், வேட்டுவ மூதாட்டியான சபரியும் அப்பிரானை நேரில் தரிசித்தபின், நினைத்த காரியம் நிறைவேறப் பெற்றவர்களாய்ப் பெருமான் திருமுன்பே அக்கினியிற் பிரவேசித்து நற்கதியடைந்தனர் – என்ற வரலாறுகளும் காணலாம்.

இவ்வாறே, குறித்த காரியம் கைகூடாவிடத்தும் இவ் விரதம் மேற்கொள்ளப்பட்டது. இராமபிரான் வனம் புகுங் காலத்தே அவர் பிரிவுக்காற்றாத அயோத்தி நகர மக்கள்—" இவ்விடத்தேயிருந்து நாம் உபவாசத் தால் உயிரை விடுவோம்; இல்லையேல் கீழே விழுந்து சாகும் வரை வடதிசைநோக்கிச் சென்றுகொண்டிருந்த

லாகிய மகாப் பிரஸ்தானம் என்ற விரதத்தை மேற் கொள்வோம்" என்று கூறினர்—என்று வால்மீகி முனிவர் பாடியுள்ளார். இன்னும், சுக்கிரீவன் ஆணைப் படி சீதாபிராட்டியைத் தேடிவருவதற்காகப் பரி வாரங்களுடன் சென்ற அங்கதன், எங்குந் துருவியும் அப்பிராட்டியுள்ள இடந் தெரியாமையால் வருந்தி அச்சுக்கிரீவனிடம் திரும்பிச் செல்லவும் விரும்பாமல், தன் இனத்தாருடன் "தண்ணீர் குடித்துவிட்டுப் பூமி யில் தெற்குமுகமாகப் பரப்பிய தருப்பைப் புற்களில் கிழக்கு நோக்கியிருந்துகொண்டு" உயிர் போம் வரை உண்ணாவிரதம் பூணத் துணிந்தான் என்றும் அவ் வால்மீகியார் கூறுவர். இவ்விரத வகைகளை, பிராயோப வேசம், அக்கினிப் பிரவேசம், மகாப் பிரஸ்தானம் என்பர் வட நூலார். பாண்டவரைவரும், முடிவில் மகாப் பிரஸ்தான முறையாலே தம்முயிர் நீத்தவர் என்ற செய்தியும் இங்கு அறியத்தக்கது.

இனி, 'வடக்கிருத்தல்' எனப்படும் பழைய தமிழர் ஒழுக்கமும் இத்தகையதேயாகும். வடதிசையிற் சென்று கொண்டே உயிர்துறப்பதாக மேற் கூறிய மகாப் பிரஸ்தானம் போல, தம்மூர்க்கு வடபால் ஓரிடத்துத் தங்கியிருந்து உயிர் நீக்கும் விரதம் இது என்பது, வடக்கிருத்தல் என்ற சொல்லமைதியால் தெரியலாம். கோப்பெருஞ்சோழன் என்ற அரசன் தன் மக்களுடன் பகைத்துப் போர்க்கெழுந்து, முடிவில் தன் நோக்கம் நிறைவேறாமல் உலகை வெறுத்து வடக்கிருந்தான் என்ற வரலாறு புறநானூற்றால் அறியப்படுகின்றது. இவன் அவ்வாறு இருந்த நிலையை நேரிற்கண்ட பொத்தியார் என்ற புலவர்—

" உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள !

என்று அவனை விளிக்கின்றார். இதனால், நதியிடையே அமைந்த திட்டொன்றில் சிறிய மரநிழலில் தங்கிப் பட்டினி நோன்பால் முழு உடலையும் ஒறுத்து உயிர் துறத்தல், வடக்கிருக்கும் முறை என்பது தெரியலாம். இவை யாவும் தவயோக நெறியில் நின்று நடத்தப் படுவன என்பர்.

2. மானக்கேடு உற்றவிடத்து நிகழ்வது :—இது பற்றி நாட்டில் நிகழும் இழிவான தற்கொலைச் செயல்கள் பல உண்டு. அத்தகையதன்று இந்த ஆன்மத் தியாகம். தம் வீரச் செயல்களில் சிறு பழுது சேர்ந்தவிடத்தும் அது பொறாமல், உத்தம விரதமூலம் உயிர் துறந்து நற்கதிக்காளானவர் பண்டைத் தமிழர் என்பது உணரத்தகும். சோணாட்டுள்ள வெண்ணி என்ற களத்தில் சோழன்கரிகாலனுக்கும் பெருஞ்சேரலாதன் என்ற சேரனுக்கும் கடும் போர் மூண்டது. அதனில் கரிகாலன் எறிந்த வேற்படையால் சேரன் பின்புறமாகப் புண்பட நேர்ந்தது. முதுகிற் பட்ட அப் புண்ணுக்கு நாணியவனாய் அவன் தன் வாளோடு சென்று வடக்கிருப்பானாயினன். அவ் விரதத்தால் அவன் உயிர் துறந்த செய்தி கேட்டுச் சான்றோர் பலரும் தம்முயிர்களை நீத்து நற்கதி பெற்றார் என்பது சங்க இலக்கிய வரலாறாகும். இதனையொத்த மற்றொரு சேரன் செய்தியும் உண்டு. சோழன் செங்கணானுக்கும் கணைக்காலிரும்பொறை என்ற சேரனுக்கும் திருப்போர்ப்புறம் என்ற களத்து நிகழ்ந்த பெரும்

போரிலே, அச்சேரவரசன் சோழனால் சிறைப்படுத்தப்பட்டான். அச்சிறையில் கடுந்தாகங் கொண்டிருந்த அவ்வரசன், தண்ணீர் பெற விரும்பினன். அவ்விருப்பின்படி குடிநீர் கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்த நீர் பகைவரிடமிருந்து வந்தது என்ற செய்தி தெரிந்ததும் அதனை ஏற்க மறுத்துவிட்டு, அம் மரணதாகத்தால் தன் உயிர் நீத்தனன், வீரனான அச் சேரமான்.

" மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

என்ற திருக்குறட்கு எடுத்துக்காட்டாக நின்ற இவ் வீர வேந்தன், தன் மரணகாலத்தில் இக்குறளின் கருத்தமையக் கூறிய பாடலொன்று உண்டு. (புறநானூறு, 74.) இவன் செயலும் மேற்கூறிய வடக்கிருத்தல் போன்ற பெருமையுடையதேயாம்.

3. அக்கிரமங்கள் நேருமிடத்து நிகழ்வது :—உலகினர்க்கோ, அறச்செயல்கட்கோ பிறராற் கேடு விளையுமிடத்து, அது பொறாமல் அக்கேடுகளை உலகோர் உணர்ந்து பரிகரிக்குமாறு தம்முயிரையே மாய்த்த உத்தமர்கள் உளர். கம்பவர்மன் என்ற பல்லவ வேந்தன் தன் மதகளிற்றைக் கொண்டு உலக்கூர் என்ற நகரைப் பாழ்படுத்திவந்த காலத்தே கையில் வாட்படை யேந்திச் சென்று அவ் யானையோடு பொருதுபட்ட வீரனொருவனுக்கு அவ்வூரார் உருவம் வகுத்தும், பெயரும்பீடு மெழுதிச் சிறப்பித்தும் கௌரவித்த செய்தி சாஸனமொன்றால் அறியப்படுகின்றது. மற்றும், திரிசூல வேளைக்காரர் என்ற

ஒருவகை வீரர், சிவாலய நிலங்களைக் கைப்பற்றிக் கேடு சூழ்ந்த சிலர்மேல் வழக்கிட்டு, அவர் செய்த அக்கிரமங்களை மெய்ப்பிக்க வேண்டித் தீப்பாய்ந்து தம் உயிர் நீத்த செய்தியும் கல்வெட்டால் தெரிய வருகின்றது. இவ்வாறே, கோபுர முதலிய உன்னத விடங்களினின்று கீழே குதித்துப் பிறர் புரிந்த அநீதிகளை உலகிற் பிரசித்தஞ் செய்தவர் பலர். இன்னோர் பொருட்டு "இரத்தக் காணிக்கை" என்று பெயர் பெற்ற மானியங்களை வழங்கிச் சிறப்பித்தனர் தமிழ் மக்கள். வீர முறையில் நாட்டிற்குப் பகைவரால் விளைந்த கேடுகளைப் போக்கமுயன்று தம் உயிர்நீத்த வீரர்களும் எண்ணிறந்தவராவர். சிலைகளில், அவர்கள் உருவங்களும் பெயர் பெருமைகளும் வகுத்து வரையப் பட்டிருத்தலை நாடெங்கும் காணலாம். இவை 'நடுகல்', 'வீரக்கல்' எனப்படும்.

4. **துக்கமிகுதியில் நிகழ்வது** :—தம் ஆருயிரனைய நண்பர்களையோ கணவரையோ இழக்க நேர்ந்த துயர்க்கு ஆற்றுமல் கொடிய விரதம்பூண்டு தம் உயிர் நீத்த ஆண்மக்களும் பெண்மக்களும் பலராவர். அத்தகைய ஆண்பாலாருள் பொத்தியார், பிசிராந்தையார், கபிலர் என்ற முன்னோரையும், பொய்யாமொழிப் புலவர் போன்ற பின்னோரையும் நாம் சிறப்பாகக் குறிப்பிடல் தகும். இவருள் பொத்தியாரும் பிசிராந்தையாரும் தம் இன்னுயிர்த் துணைவனாயிருந்த கோப்பெருஞ் சோழன் என்ற வேந்தன், மேலே கூறியபடி தன் மக்களிடம் கொண்ட வெறுப்பால் வடக்கிருத்தலை அறிந்து, அதற்கு ஆற்றுமல் அவனிறந்தவிடத்தே தாமும் சென்று வடக்கிருந்து உடலையொறுத்து உயிர் விட்ட

வர்கள். கபிலர் என்ற புலவர் பெருமானும் இத்தகைய வரே. தம்முடன் வேற்றுமையற்றுப் பழகியவனும் பெருவள்ளலுமான வேள் - பாரி இறந்ததும் உலகில் தனித்து வாழ ஒருப்படாத அப்புலவர், பாரியின் மகளிரை நல்வாழ்க்கைப் படுத்துதற்கு வேண்டிய வற்றைச் செய்து தம் கடமையை நிறைவேற்றிக் கொண்டபின்,

“ இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே ”

என்று—‘ அவ்வள்ளலின் உறவை மறுபிறவியினும் என் நல்லூழானது கூட்டுவதாக’ எனக் கூறி வடக் கிருந்தார். இவர் வடக்கிருந்த முறை, முடிவில் தீப் பாய்ந்ததாகும். இச்செயல், திருக்கோவலூர்ப் பெண்ணையாற்றங்கரைப் பாறையொன்றில் நடத்தப் பெற்றதென்றும், அதனால், அப்பாறை கபிலக்கல் என்ற பெயர் பெற்றதென்றும் அவ்வூர்ச் சாஸனங் கூறுகின்றது. “பசைந்தாரிற் றீர்தலின் தீப்புகுதல் நன்று” என்ற முன்னோர் மொழிப்படி, அக்கினிப் பிரவேசஞ்செய்த இப்புலவரைப் போலவே, பிற் காலத்தில் நடத்திப் போந்த பெரியாரொருவர் உண்டு. அவர் பொய்யாமொழிப் புலவர் என்பார். தம் உயிர் நண்பனாக வாழ்ந்த அரசூர்ச் சீநக்கன் என்ற வள்ளல் இறந்ததும், அவன் பிரிவுக்கு ஆற்றாமல், அவனுடலைக் கிடத்திக் கொளுத்தப்பட்ட ஈமத்தீயின் முன்னின்று—

“ அன்றுநீ செல்லக் கிடவென்ற யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினாய்—நன்றுநன்று
மாநக்க பூணார்தம் மாரனே தென்னரசூர்ச்
சீநக்கா செல்லக் கிட ”

என்று கூறி அத்தீயிற் பாய்ந்து தம் உயிர் நீத்தனர் இப்பெருந்தகையார். இப்பாடல் சம்பந்தமாக வழங்கும் சரித்திரம் வருமாறு :—

பொய்யாமொழியார் ஒருநாளிரவு சீநக்கனுடன் அவன் படுக்கைக் கட்டிலில் இருந்துகொண்டே நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தபோது, அவசர காரியமொன்றன் பொருட்டுச் சீநக்கன் சிறிது வெளியே சென்றுவர நேர்ந்தது. அப்போது, அவன் விரைவில் காரியத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுவதாகப் புலவர்க்குச் சொல்லி, அவரை அங்கே இருக்கச் செய்து விட்டுக் குறித்த காரியத்தின்மேற் சென்றான். சென்ற காரியம் அவனை நெடுநேரம் அங்கே தாழ்க்கும்படி செய்துவிட்டது. அயர்ச்சி மிகுதியால் புலவரும் அக் கட்டிற் படுக்கையிலே படுத்து உறங்கிவிட்டனர். வெளிச்சென்ற சீநக்கன் காரியத்தை முடித்துக் கொண்டு தன் படுக்கையருகு வந்து நோக்கவும், புலவர் அயர்ந்து உறங்குவது கண்டு சந்தடி செய்யாமல் அவரைத் தொட்டுச் 'சிறிது விலகுதிர், நானும் பக் கத்திற் படுக்க' என்று மெல்லக் கூறினன். புலவர் சீநக்கனது குரல் கேட்டதும் திடுக்கென்று எழுந் திருந்தார். அயர்ச்சியால் நடந்த இந்நிகழ்ச்சியைச் சீநக்கன் பொருட்படுத்தாமல் அவரைத் தேற்றி, முன்னிலும் அதிகமான அன்பு பாராட்டி ஒழுகி வந் தனன்—என்பதே அவ்வரலாறு. இதனைச் சிறிது வேறுபடக் கூறுவதுமுண்டு. இம் முன்னிகழ்ச்சியைக் கருத்துட் கொண்டே "அன்று நீ செல்லக்கிடவென் றாய்...இன்று நீ செல்லக் கிட" என்று, ஈமக்கிடக்

கையில் அவன்பால் இடம் வேண்டிப் பாடினர் இப் புலவர் என்க.

இவ்வாறு, ஆண்மக்களே தம் இன்னுயிர் நண்பரின் பிரிவுக்கு ஆற்ருமல் உயிர் துறந்தவராயின், தம் அரும்பெறற் கணவரைப் பிரிந்த உத்தம பத்தினியர் இதுபோலுஞ் செய்கைகளைப் புரிதல் அருமையோ? தம் கணவர் இறந்தமை தெரிந்ததும் தன்னியல்பின் உயிர் நீங்கியவரும், தம் நாயகர்க்குப் பின் கைம்மை விரதங்கொண்டு உயிர் வாழாமல் கணவருடன் தீப் பாய்ந்து உயிர் நீத்தவருமான கற்பரசியர் நம் நாட்டிற் பலராவர். சங்க நூல்களாலும் சாஸன முதலியவற்ருலும் இத்தகைய பெண்மணிகளின் செய்திகள் சில அருமையாக அறியப்படுகின்றன. கோவலனை ஆராயாமல் கொல்வித்த ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன், கண்ணகி வழக்கால் தன் அநீதி தெளிவானதும், அரசு கட்டிலிலே வீழ்ந்து உயிர்நீத்தான்; அவனிறந்ததை அறிந்ததும், அவன் மனைவி பெருங்கோப்பெண்டு, கலக்கங்கொள்ளாள் கடுந்துயர்பேணுள் ஒருங்குடன் மாய்ந்த வரலாறு பிரபலமானது. இவ்வரிய பெரிய நிகழ்ச்சி, தலைமைப் பத்தினியர்க்கே அமைந்தது.* இவர்க்கு அடுத்தவர் உடன்கட்டையேறும் பத்தினிகளாவர். முற்காலத்தே, பூதப்பாண்டியன் என்ற வேந்தனுடைய பட்டத்தரசி அரிய கற்பும் பெரிய புலமையும் வாய்ந்திருந்தவள். அவள் தன் கணவனிறந்ததும்

* இராவணன் இறந்தமை அறிந்ததும், அவன் மனைவி மண்டோதரி உயிர் நீங்கிய செய்தி கம்பராமாயணம் யுத்த காண்டத்தால் அறியப்படும்.

உயிர் வாழ விரும்பாமல் அவனுடன் தீப்பாயத் துணிந்தாள். அப்போது சான்றோர் பலர் அவள் செய்கையைத் தடுத்து, வேண்டிய அறநெறிகளைக் கூறியும் கேட்காமல் அவர்களையெல்லாம் வெறுத்து,

> " பல்சான் றீரே பல்சான் றீரே
> செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
> பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
>
> *　　　*　　　*　　　*
>
> பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
> நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
> பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
> வள்ளித ழவிழ்ந்த தாமரை
> நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே "

என்று கூறித் தீப்புகுந்தாள் என்று புறநானூறு கூறுகின்றது. உலகிற்கு உபகாரிகளாகவும் பேரறிஞராகவும் உள்ள உத்தம பத்தினியர் இவ்வாறு உயிர் விடத் துணியுமிடத்துப் பெரியோர் பலர் முன்வந்து அது செய்யவொட்டாமல் தகையக்கூடியதேயாம். வீரராஜேந்திர சோழன் காலத்துச் சாஸனமொன்றில்,* பத்தினியொருத்தி உடன்கட்டை ஏறப் போவதைத் தடுத்து நின்ற சிலரை நோக்கி அவள் கூறிய கடிய சூளுறவுகள் வரையப்பட்டுள்ளன.

பூதப்பாண்டியன் தேவி போலவே, உடனுயிர் நீத்த இராஜபத்தினிகள் பிற்காலத்தில் எத்தனையோ

---

* M. E. R. 1907, P. 63.

பேர் நம் நாட்டில் உண்டு. சாஸனங்களாலும் ஒரு சிலர் வரலாறுகள் அறியப்படுகின்றன. இரண்டாம் பராந்தக சோழன் தேவியும் முதல் இராஜராஜ சோழன் தாயுமாகிய வானவன் மாதேவி என்பாள் அவ்விராஜராஜன் இளங்குழவியா யிருந்தபோது தன் கணவன் இறக்க, அதற்காற்றுமல் பால்குடி மறவாத தன் ஒரே மகவையும் நோக்காதே கணவனுடன் தீப் பாய்ந்து உயிர் துறந்தனள். இவ்வரிய செயலை—

''செந்திரு மடந்தைமன் சீராச ராசப்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்தும் முழங்கெரி நடுவண்
தலைமகற் பிரியாத் தையல்''

என்று திருக்கோவலூர்ச் சாஸனம் புகழுகின்றது. இவ்வாறே, முதற் பராந்தக சோழன் காலத்து சாமந் தனும் கொடும்பாளூர்த் தலைவனுமாகிய இளங்கோ வேளாரின் மனைவி கங்கமாதேவி என்பாள், தன் கணவனுடன் தீப்புகுந்தவள் என்பது அல்லூர்ச் சாஸனத்தால் அறியப்படும். அதனில் ''கங்கமா தேவியார் தீய்ப்பாய்கின்ருர்'' 20 பொன் கழஞ்சு திருநந்தாவிளக்கின் பொருட்டு ஊர்ச்சிவபிரானுக்குத் தானஞ் செய்தாளென்று கூறப்பட்டுள்ளது. இதனுல் தீப்பாயுமுன் கோயில் முதலியவற்றுக்குத் தானம் வழங்கி உயிர்நீத்தல் பண்டைமரபு என்பது தெரிய லாம். இது, கணவனுடன் செல்வதற்காக மகிழ்ந்து செய்யும் 'யாத்ராதானம்' போன்றது என்பது அவர்கள் கருத்துப் போலும். ''வெற்றிலை தின்று

பூட்டிப் பூச்சூடித் தீப்பாய்வாரைப்போலே சிரிக்கிறர்" (திருமாலை வ்யாக். பக். 114) என்று பெரியவாச்சான் பிள்ளை என்ற பெரியார் எழுதிய வாக்கியமொன்று உண்டு. இதனால், தங்கணவருடன் செல்வதாகவே கருதிப் பெருமகிழ்ச்சியோடு தீயினிற் குதித்து உயிர் விட்டவர்கள் இப்பத்தினிப் பெண்டிர் என்பது தெரியலாம். இவ்வாறு ஆண்பாலரும் பெண்பாலரும் தம் ஆருயிர் நண்பரையோ, அரும்பெறற் கணவரையோ மறுமையிலும் அடைந்து வாழ்தலை வேண்டி இம்முறைகளைக் கையாண்டவராதலால், பிராயோபவேசம் போல இதுவும் ஓர் உத்தம விரதமாகவே கொள்ளத்தகும். இங்ஙனந் தீப்பாய்ந்த பெண்மணிகளின் திருவுருவங்களைச் சிலையில் வகுத்துக் கோயிலிற் பிரதிட்டித்துப் பின்னோர் வணங்கிவந்தனர். பத்தினி தேவியாகிய கண்ணகி இவ்வாறே சேரன் செங்குட்டுவன் முதலிய பெருமக்களால் வழிபடப்பட்டவள். இத்தேவி தன் கணவனிறந்தபின் தீப்பாய்ந்து உயிர் துறந்தவளில்லையேனும், பாண்டவர் முடிவில் மேற்கொண்ட மகாப்பிரஸ்தானம் போன்ற முறையால், தன் உடலை நீத்து விண்ணுலகம் சென்றவள் என்பது அவள் சரிதத்தால் அறியலாம். இத்தகைய உத்தம பத்தினியர்க்கு வகுக்கப்பட்ட உருவங்கள், 'மாஸ்திகல்' (மஹாஸதிக்கல்) எனக் கன்னட நாட்டிலும், நடுகல், பத்தினிக்கல் எனத் தமிழ் நாட்டிலும் வழங்கப்படுகின்றன.

5. நற்கதி வேண்டியும் பிரார்த்தனை செலுத்தவும் நிகழ்வன :—வீடு பேற்றை விரும்பிக் கடுந்தவத்தால் உடலையொறுத்து உயிர் நீத்தோரும், தம்வேந்தனது வெற்றி

வேண்டியும், உற்றார் உறவினரின் நன்மை விரும்பித் தெய்வங்களுக்குப் பிரார்த்தனைக் கடன் செலுத்தியும் உயிர் நீத்தோருமாகப் பலருண்டு. பண்டைச் சைன முனிவர் பலர் பிறர் செல்லமுடியாத மலைக்குகைகளில் தங்கி, உணணாவிரதம் பூண்டு உயிர் துறந்து வந்த செய்தி அறிஞர் பலரும் அறிந்தது. இவ்விரதம், 'ஸல்லேகனை' 'அநசனம்' என வழங்கப்படும்.

> "ஐம்பத்தேழு நாள் அநசனம் நோற்ற
> சந்திரநந்தி ஆசிரிகர் நிசீதிகை"

என்பது போன்ற சிலையெழுத்துக்களை மலைப்பாறைகளிற் காணலாம். இவரெல்லாம் நற்கதியடைதலை விரும்பிக் கடுந்தவத்தை மேற்கொண்ட முன்னோராவர். மிகப் பிற்காலத்திலும், ஸ்ரீமுஷ்ணம் என்ற தலத்தை அடுத்துள்ள வனத்தில், 'விரிசடைராமன்' என்ற பெரியார், முதல் தேவராயர் என்ற விசயநகர வேந்தர் ஆட்சியில், பதினெட்டு மாதம் ஊணுறக்கமின்றிக் கடுந்தவம் புரிந்து சித்தி பெற்றார் என்ற வரலாறு கல்லெழுத்தில் தீட்டப்பட்டுள்ளது.

இனி, தம் அரசனுக்குற்ற இடுக்கண் நீங்க வேண்டியும் அவன் வெற்றி கொள்வதை விருப்பியும் வீரர்களிற் சிறந்தோர், கொற்றவை போன்ற தெய்வ சந்நிதிகளின் முன்பு தங்கள் உடலுறுப்புக்களையும் தலைகளையும் அறுத்துத் தாமே பலிபீடங்களில் வைத்து நேர்த்திக்கடனாகப் பலியிட்டுவந்த கடுஞ்செயல்கள், சிலப்பதிகாரம், பரணி முதலிய பழைய நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

"மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்

* * * *

சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலிப் பீடிகை நலங்கொள வைத்து"

என்றார் இளங்கோவடிகள். (சிலப், 5, 76-86).

"சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக உறுப்பரிந்து தருது மென்று
பரவுமொலி கடலொலிபோற் பரவு மாலோ"

"அடிக்கழுத்தி னுடன்சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ"

எனச் சயங்கொண்டாரும் (கலிங். பரணி) பாடுவர். இவற்றைப் படிப்போர் பலரும், இச்செயல்கள் கற்பனைகளாகக் கூறியவை என்று கருதவும் கூடும். ஆனால், வீரர்களும் தேவியுபாசகர்களும் தலைப்பலியளித்துத் தம் பிரார்த்தனைக் கடமைகளைச் செலுத்திவந்த அருஞ்செயலை மகாபலிபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் உள்ள பல்லவ சிற்பங்கள் பலவற்றால் அறியலாம். இவை அக்கால நிகழ்ச்சிகளைச் சித்திரித்தவை என்று கொள்ளற்குரியன வன்றோ? அன்றியும்,

நெல்லூர் ஜில்லா கரூர்த்தாலுக்கா, திருவான்மூர் என்ற மல்லத்தில் கம்பவர்மன் என்ற பல்லவ வேந்தனது ஆட்சியில் அமைந்த பத்தாம் நூற்றுண்டுச் சாஸனமொன்று மேற்கூறியதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அஃதாவது—வீரனொருவன் தன் தலையை ஓரே வாள்வீச்சில் அறுத்துக்கொண்டு தேவியின் பலிபீடத்தில் அதனைத் தன்கையாலே வைத்த மாதிரியில் உள்ள உருவமும், அவ்வாறு பலியிட்ட அருஞ் செயற்காக அவ்வூரார் அமைத்த அறப்புறமும் அச்சிலையிற் பொறிக்கப்பட்டுள்ளன.

"படாரிக்குத் தவக்கண்டங் கொடுத்துக் குறைத்தலை
யறுத்துப் பிடலிகைமேல் வைத்தானுக்கு
ஊரார் வைத்த பரிசாவது.........."

என வரும் அச்சாஸனத் தொடரின் பகுதி இங்கே குறிப்பிடத்தகும்.

இவ்விரதம், தேவிக்குரிய பரணி நாளில் விசேடமாகக் கொண்டாடப்பட்டதாம். பரணி நோன்பு என்று இது வழங்கப்பட்டது. இதனை நோற்று வந்தவருள், மகளிருமுண்டு என்பது, திருக்கோவலூர்ப் பிரதேசத்தில் அகப்பட்ட கற்றூண்கள் பலவற்ருல் அறியப்படுகிறது. "இன்னுன் மனைவியும் இன்னுன் மகளுமான இவள், பரணி நோற்ற தறி இது" என்ற கருத்தில் இத்தூண்களில் எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன. பிரார்த்தனையாகத் தம் உறுப்பை யரிந்தோ பிறவாறே மகளிராலும் இப்பரணிநோன்பு கையாள்ப்பட்டதாகவே தோற்றுகின்றது. இத்தறிகள் 9, 10-ஆம் நூற்றுண்டுகட்கு உரியன என்பர். பரணிப் பிரபந்தம் உண்

டானதற்கு ஆதாரமானவற்றுள், இந்நோன்பும் ஒன்றாகவே கொள்ளத்தகும்.

இதுவரை கூறிவந்தவற்றால், உத்தம நோக்கங்களைக் கொண்டு முன்னோர் கடைப்பிடித்தொழுகிய ஆன்மத்தியாக முறைகள் இன்னவை என்பது ஒருபடியாக விளங்கக்கூடும். நம் காலத்தில் சத்தியாக்கிரகம் என்ற கடிய விரதத்தால், தாம் குறித்த காரியத்தைச் சாதிக்க முயன்று உயிர் நீத்தவர்களும் நீக்க முயன்றவர்களும் பலர் என்பதை நாம் அறிவோம். புனிதத் தன்மைபற்றி இம்முறையைப் போற்றிப் புகழும் இக்காலத்தார்க்கு, மேற்கூறிய மகாவிரதங்கள், அரசாங்கத்தாரால் கடியப்பட்டனவாயினும் பரிசுத்தம் வாய்ந்தவை என்றே தோற்றும் என்பது திண்ணம்.

ILAKKIYA KATTURAIGAL

Author and Publisher :

Rao Sahib : M. RAGHAVA IYANGAR,

WEST CAR STREET, RAMNAD.

Price Rs. 2-8-0